

முரசொலி
பொங்கல் மலர் - 1966
ஆசிரியர்
மு. கருணாநிதி
விலை
ரூ
1-50

அன்றும், இன்றும், என்றும்
நீங்கள் விரும்பி வாங்கும்

# சங்கு மார்க்

இதுதான்

கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள், சோளிகள் மற்றும் புடவைகள்



முகம்மது அபுபக்கர் & கம்பெனி
95, தம்பு செட்டித் தெரு, சென்னை - 1
கிளைகள் : கல்கத்தா — பம்பாய் — மதுரை — கொல்லம்

Criterion-MAB-684



பிப்ரவரி வெளியீடு
இல்லாதார்க்கு இல்லையென்று கூறாத நல்ல உள்ளம்;
எழுச்சியுகம் காணுதற்குப் பாய்ந்து வரும் புதிய வெள்ளம்!
கலைஞர் கருணாநிதியின் கருத்தோவியம்
உமையாள் புரொடக்ஷன்ஸ்
அவன் பித்தனா?

# “ சித்தர் நவலோக கல்பம் ” (Regd.)

சர்க்கார் ரசாயன சாலையில் பரிசோதிக்கப்பட்டது.
உங்கள் நோய் எதுவாயிருப்பினும் நேரில் வந்து
ஆலோசனை பெறலாம்.

பண்டைக் காலத்து சித்த சாஸ்திரங்களின் ஆராய்ச்சியின் முடிவே—

## சித்தர் நவலோக கல்பம்



சித்த வைத்தியர்

**சாது வீ. நாராயணசாமி பிள்ளை,**

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை (Regd.)

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

போன் : 84786

கிளை வைத்தியசாலை :—

G. S. T. ரோடு, 39-வது மைல் பாலாற்றங்கரை,

மாமண்டூர் வடபாதி, செங்கல்பட்டு ஜில்லா.

மேலே கண்ட கிளை வைத்தியசாலையில் பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் காலை 7மணி முதல் மாலை 7மணி வரையில் நாமே வியாதியஸ்தர்களைக் கவனிக்கிறோம்.


ஜனவரி 14 முதல்
சென்னை:
பிளாஸா · மகாராஜா
மகாலக்ஷ்மி
மற்றும் தென்னுடெங்கும்
சித்ரா புரொடக்ஷன்ஸ்
சித்தி
திரைக்கதை-வசனம்-டைரக்ஷன்:
K.S. கோபாலகிருஷ்ணன்
இசை: M.S. விஸ்வநாதன் · பாடல்கள்: கண்ணதாசன் · காமிரா: R. சம்பத் W.I.C.A.
எடிட்டிங்: R. தேவராஜன் · கலை: நாகராஜன் · ஸ்டில்ஸ்: D.I. சந்தாமியான் · ஸ்டுடியோ: பரணி
G.H. RAO

தரமிகு கைலிகள்
கைக்குட்டைகள்
கண்கவர் டிசைன்கள்
சர்ட்டிங் & சோலிகள்

நியாயமான விலைக்கு
எங்களிடம் கிடைக்கும்.

உற்பத்தி செய்து
விநியோகிப்பவர்கள் :

THREE HORSE
GEMINI LUNGI CO.,
MADRAS-1.

## ஜெமினி லுங்கி கோ.,

1,15 ராமசாமித் தெரு,
சென்னை - 1.

Grams : "THASBI" Phone : 23379

---

எல்லோருக்கும் எங்கள் இதய வாழ்த்துக்கள்.

# தாஜ் சில்க் ஸ்டோர்

சிறந்த பட்டு - நூல் ஜவுளி
ரகங்களின் இருப்பிடம்.
576, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

போன் : 86137

---



தந்தி "சுபஸ்வாகத்"

- ❊ பரிச்சயமான சூழ்நிலை
- ❊ குறிப்பறிந்து சேவை
- ❊ ஸ்நான அறைகளுடன் கூடிய ஒருவர் இருவருக்கான ரூம்கள். மற்றும் ஏர் கண்டிஷன்டு ரூம்கள்.
- ❊ டெலிபோன் வசதி
- ❊ கூடிப் பேசும் அறை
- ❊ மாடிப் பூங்கா
- ❊ மிதமான கட்டணங்கள்

# ஹோட்டல் ஸ்வாகத் HOTEL Swagath

ராயப்பேட்டை ஹைரோட், சென்னை - 14.
(போன் : 82027)

○ கலியாண வரவேற்பு கலை உபசரணைகள் ○ டீபார்ட்டீ & விருந்து உபசாரங்கள் ○ கலாச்சார விழாக்கள்
○ வழி அனுப்பும் வைபவங்கள் இவைகளை நடத்த வசதி செய்து தருகிறோம்
பொதுஜனங்களுக்கான நவீன சிற்றுண்டி சாலை
மற்றும் தரமான சைவ சாப்பாடு.

✖ ✖ ✖ நினைவிருக்கட்டும் — சுகவாசத்திற்கு "சுவாகத்" ✖ ✖ ✖

குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்களுக்கும்
பொதுவாகத் தமிழ்ப்பெருங்குடி மக்களுக்கும்
எனது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

V. S. SRIKUMAR
Importer & Wholesaler
Chemicals of all kinds
495-A, Mint Street, Madras-3

"ஹோட்டல் ஹாலிவுட்"
(NON VEGETARIAN)

இப் பொங்கல் புதுநாளில் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள். உங்களுடைய திருப்தியே எங்களுடைய நோக்கம்.

"ஹோட்டல் ஹாலிவுட்"
68, ஆற்காடு ரோடு
சென்னை-24

சிறந்த படங்களை வெளியிடும்
'ராஜகுமாரி தியேட்டர்'

நண்பர்கள் அனைவருக்கும் இப் பொங்கல் புது நாளில் எங்களுடைய மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

61, தியாகராயர் ரோடு, தி. நகர்,
சென்னை-17



# தை-யே...
# வருக
# வருக...

**பகைமை இருள் அகன்று**
**உற்பத்தி பெறுகி**
**நாடும் மக்களும்**
**வளம் பெற்று வாழ**



தமிழ் நாடு
கைத்தறி
நெசவாளர்

# காணிக்கை

என்றும்போல் இனிய அண்ணனின் எழுத்தோவியத்துடன் ஆரம்பமாகும் 'முரசொலி' பொங்கல் மலரில் எம்மாலியன்ற கைவண்ணம்-கருத்து வண்ணம் காட்டியுள்ளோம். இடமின்மையால் 'இதுதான் இயக்கம்', 'விடைபெறுகிறேன்' எனும் கட்டுரைகளிரண்டும் தரமுடியவில்லை. மன்னிக்கவும். தாள் விலையும், சித்திரச் செலவும், மிக அதிகம் ஆனதாலே இளைத்த நிலையில்தான் இம்மலரை அளிக்கின்றோம். அண்ணாவின் வண்ண ஓவியத்திற்கே ஆயிரத்து இருநூறு ரூபாய்ச் செலவென்றால் மிச்சத்தைக் கணக்கிட்டுக் கொள்க!

இராப்பகல் உழைத்துழைத்து அலுவலகத்தார் இம்மலரை நும் கரத்தில் அளித்துவிட்டு, வாழ்த்துக்கு ஆவல் காட்டுகின்ற காட்சி பாரீர்!

தம்பி செல்வமும், மல்லியும், அடியாரும், தினகரனும் மலர் மணந்திடக் காரணமாயினர்.

அழகூட்டும் ஓவியத்தால் செல்லப்பன், புறப் பொலிவைச் சிறப்பித்த ஓவிய மன்னர் மாதவனார் பாராட்டுக்குரியவர்கள்!

இந்நாடு காப்பதற்குச்
செந்நீர் சிந்திடவும்
தயங்காத போர்வீரர்
குடும்பங்களுக்கும்;
தமிழ் காக்கத் தீக்குளித்த
செம்மல்களின் காலடிகட்கும்

இம்மலர் காணிக்கை!





கே. கே. நீலமேகம்

வாளுக்குப் பெயர்தான் நின்வார்த்தை-உன்
தோளுக்குப் பெயர்தான் இமயம்-நின்
தாளுக்குமலர் தூவித் தமிழ்வளர்ப்போம்;
தன்மானப் புகழ் குவிப்போம். மு. க.

# 'வழி வழி' வந்திடும் செழிப்பு

பல் போன கிழவனவன் எனினும் அந்த
பொக்கைவாய்ச் சிரிப்பினுக்கு ஈடாகவில்லை! முப்
பத்திரண்டும் முல்லைகளென்று வெளியே தெரிந்திட
அந்த இளைஞன் உதிர்த்திடும் சிரிப்பு. இளைஞன் சிரித்த
காரணம் அவன் பெற்ற மகன் மன்னன் நடை நடந்து, கரும்
பைச் செங்கோலாகக் கொண்டு, பெற்றவளைத் துரத்து
கிறான், 'அப்பா சொல்வதைக் கேள்! கேள்' என்று
கூவியபடி. எனக்காக என் மகன்! என்று இடி
இடியெனச் சிரிக்கிறான் இளைஞன்! குழவி
யைத் தாங்கிஇருந்த மணிவயிறு
கொண்ட குலவிளக்கு 'அவள்'
என்று அறிந்திருந்தும்,

அறிஞர்

**அண்ணா**



முதியவர் முறுவலித்திருக்கிறாரே, அவரை அந்த இளைஞன் கவனித்ததாகவே தெரியவில்லை.

'முடிந்துபோன கதை' என்றாகிவிட்டது என்ற நினைப்போ? இருக்கும்!

ஆனால் முதியவரின் முறுவலுக்குக் காரணம், கதையின் துவக்கமேதான்! என் மகன் அவன்: அவன் மகன், "அந்தச் சிங்கக் குட்டி" என்பதை எண்ணிக் கொண்டதுதான்.

வழிவழி வந்திடும் செழுமை, ஈடற்ற சுவைகொண்டது.

"வாழ்ந்தேன்; என்னுள் வாழ்வு பெற்றவர்களில்லை" என்று கூறிடத்தக்க நிலையினராக இருந்திட நேரிடின், அவர்கள் ஒரு வரலாற்றை உருவாக்கிடவில்லை. தங்கள் காலட்சேபத்தை நடத்திக்கொள்கிறார்கள் என்று மட்டுமே பொருள்பெறும்.



'வழிவழி' கிடைத்திட வேண்டும்; ஒரு வாழ்வு மற்றோர் வாழ்வுக்கு வித்தாதல் வேண்டும் என்ற நெறி அறிந்ததனாலேயே தமிழர் இல்லறத்தை நல்லறமாக்கினர். இல்லறம் நல்லறமாகிடும் போதுதான் பொக்கைவாய்க் கிழவனின் முறுவலும், கலகலவென சிரிப்பு உதிர்க்கும் இளைஞன், களிப்பினைக் கன்னத்துக் குழியாலே மொழிந்திடும் காரிகையும் கரும்பைச் செங்கோலாகக் கொண்டிடும் மன்னனும் இல்லத்தில் இருந்திடும் நிலை காணமுடியும்.

"அப்பன் கப்பலேறிச் சென்றான்; ஆண்டு பத்து முடிந்துவிட்டது; அம்மா ஆப்பக்கடை நடத்த ஆலையூர் சென்றுவிட்டாள்; நான் 'கொண்டவள்' குமுறுகின்றாள். இலவச மருத்துவமனையில் எனக்குப் பிறந்த 'செந்தேள்' எங்கோ வளையிலேபுகுந்து கொண்டுளது; இங்கு நான் இருக்கின்றேன், இறக்கவில்லை" என்று கூறிடும் முதுமைக் கோலம் பெற்றிட்ட இளைஞன், 'வழிவழி' கிடைத்திட்ட செழுமைக்கு எடுத்துக்காட்டு அல்ல.

குடும்பம் மட்டுமல்ல, நாடே, 'வழிவழி' செழுமை பெற்றிடவேண்டும். அப்போதுதான் சென்றவரின் சிறப்பும் 'உள்ளவரின்' உயர்வும், 'வருபவரின்' ஏற்றமும் முறைப்படி இருந்திட இயலும்.

'வழிவழி' செழித்திடும் குடும்பத்தின் மாண்பு, மற்ற எந்த நாளிலும் விளக்கம் பெறாத அளவு பொங்கற் புதுநாளில் விளக்கம் பெற்றிடல் இயல்பு. அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுவதிலேகூட ஒரு தனி மகிழ்வு.

'வழிவழி' சிறந்துளது, செழித்துளது என் நாடு என்று செப்பிடும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றால் அதனினும் ஓர் எடுப்புமிக்க விழா உணர்ச்சி வேறிருக்க முடியாது.

ஆனால் திறமை போதவில்லை. வீடு எனினும், நாடு எனினும், முன்பு இருந்ததனை எண்ணி ஏக்கம் கொள்வோரும், நாளை என்னவோ என்று எண்ணி கலக்கமடைவோருமான மக்களின் தங்குமிடமாகவே இருந்திடக் காண்கின்றோம்.

வீடும், நாடும், வாழ்விடம்—நமக்கு மட்டுமல்ல வழிவழி வருவோர்க்கெல்லாம் வாழ்வு அளிக்கும் இடம் என்றிருத்தல் வேண்டும்.

அந்நிலை, எண்ணுவதால் கிடைத்திடுவதன்று; தூய பணியின் மூலமே கிடைத்திடக் கூடியது; பல தோல்விகள், ஏமாற்றங்கள், இன்னல்கள், இழப்புகளுக்குப் பிறகு.

"தாத்தா! முறுக்கு!" என்று தந்திட வருகிறாள், துள்ளிடும் புள்ளிமான் குட்டி.



தத்தித்தத்தி நடப்பதைப் பார்த்து, அந்தத் தாய், உலக நாட்டியப் போட்டியிலே அந்த மான் வெற்றிப் பதக்கம் பெற்றுவிட்டதாகவே எண்ணி மகிழ்கின்ருள்.

"எனக்கா தங்கம்! முறுக்கா கண்ணு" என்று கேட்டபடி அதனை வாங்கி சிறு சிறு அளவினதாக்கி, கொடுத்த குலக்கொடிக்கே 'தாத்தா' ஊட்டுகிருர் குதப்பித் தின்பது கண்டு, எவராலும் இயலாத செயலொன்றை அச்சிறுமி செய்திட்டதாக எண்ணிக் கன்னத்தை முத்தமிட்டு மகிழ்கின்ருர். முறுக்கைத் தின்றிட இயலவில்லை; பல் இல்லை! முறுக்குசெய்திடப் பயன்பட்ட கருவி இருக்கிறதே, அதனை அவர்தான் முன்பு ஓர் நாள் மூட்டை சுமந்து சென்று சந்தையில் விற்பனை செய்திடச் சென்றபோது வாங்கிவந்தார். இன்று அக்'கருவி' யால் செய்யப்படும் முறுக்கு அவருக்கல்ல, வழி வழி வந்தவர்க்குத்தான்! எனினும் 'வழிவழி' வந்துளது என்பதனை எண்ணும் போது, அவருக்கு வாலிபம் திரும்புகிறது. அதனைக் கண்டிடும் இளைஞனுக்கோ எதிர்காலம் தெரிந்திடும்; கருத்துள்ளவனுனல்.

இருப்பது, கிடைப்பது, எனக்கு மட்டுமல்ல, என் குடும்பத்துக்கு என்ற எண்ணம் இயல்பானது; அன்ருெர்நாள் யாரோ ஒரு பிடி அவல் கொடுத்தார்கள் கிழவனுருக்கு. கொடுத்தவர் காணும்படி சிறிதளவு வாயினில் போட்டுக்கொண்டு மற்றதைத் துணியில் முடிந்து எடுத்து வந்து, அதோ! "ஆச்சா! இன்னமுமா ஆகவில்லை! பசி வயிற்றைக் கிள்ளுகிறது" என்று அணிமயிலை மிரட்டுகிருனே, பொய்க்கோபம் காட்டி இளைஞன்! அவன் ஏழெட்டு வயதுள்ள சிறுவனாக இருந்தபோது, அவனுக்குத்தான் கொடுத்தார். இன்று அவன் தன் மகனுக்கு ஊதுகுழலும் ஆடும் குதிரையும், பாடும் பறவையும் ஓடும் மானும் கொண்டுவந்து கொடுத்திடக் காண்கின்ருர்; 'வழிவழி' எனும் முறை தெரிகிறது.

ஆனுல் இந்த 'வழிவழி' குடும்பத்திற்கெனினும் நாட்டிற்கெனினும் கிடைத்திட வேண்டுமெனின், இடையிலே நலிவு ஏற்படாதிருக்க வேண்டும்.

பொருள்நலிவு மட்டுமல்ல. எண்ணத்தில் நலிவு ஏற்படாதிருக்க வேண்டும்.

முதியவர், ஓர் 'இளையாளை'க் கொண்டிருந்து, அவள் பெற்ற 'மகன்' தனியே குடியிருந்தால், இந்த முதியவர், இங்கா? அங்கா? என்றலையும் நிலையும், இங்கிருந்து அங்கு எடுத்துச் செல்வதா, அங்கிருந்து இங்கு கொண்டு வந்து கொடுப்பதா என்பது பற்றிய கவலையும் கொண்டு தத்தளிப்பார்; 'வழிவழி' என்பதில் குறுக்குக் கோடுகள் விழுந்து விடுவதால்.

இந்தக் கோடுகள், விரிந்து விரிந்து பள்ளமே



ஆகிவிடின்? "உன் வழியைப் பார்த்துக்கொள்! என் வழியை நான் பார்த்துக்கொள்கிறேன்!" என்ருகிவிடும்.

எனவேதான் 'வழிவழி' செழித்திட வேண்டுமெனின், பொருள் நலிவு மட்டுமல்ல, பொருத்த நலிவும் ஏற்படாதிருக்க வேண்டும். எண்ணத்தில் நலிவு ஏற்படாதிருந்திட வேண்டும்.

பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் நாட்டுக் குடும்பத்தில் எண்ணத்தில் நலிவு ஏற்படாதிருக்கும் நெறியில் பெரும் அளவுக்கு வெற்றி கண்டிருக்கிருர்கள்.

தொழில் வளர்ச்சியும், வாழ்க்கைப் பரபரப்பும் மிகுந்திடும் வேகத்தில், இந்த நிலை எதிர்காலத்தில் வெகுவாகப் பாதிக்கப் படக்கூடும்.

குடும்ப அளவில் குறிப்பிடத்தக்க முறையில் இந்த 'வழிவழி' காப்பாற்றப்பட்டு வருகின்றதென்ருலும், நாட்டைப் பொறுத்த அளவில், 'வழிவழி' செழிப்பினைப் பெற்றுள்ளோம் என்று கூறிடுவதற்கில்லை.

அற்றைத் திங்கள்
அவ் வெண்ணிலவில்
எந்தையும் உடையேம்!
எம்குன்றும் பிறர் கொளார்,

என்ற நெகிழ்ச்சி தரும் கவிதையே நினைவிற்கு வருகிறது.

நாட்டின் நிலையில் 'வழிவழி' செழிப்பு காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று கூறிப் பெருமிதம் கொள்வதற்கில்லை.

காரணம்? செல்வம் இழந்தோம்? பொருள் செல்வத்தைக் குறிப்பிடவில்லை; பூக்கள் உதிர்ந்து போனுல் என்ன, கொடி வாடாதிருக்கும் வரையில் குறிப்பிடுவது பொருள் போனதுபற்றி அல்ல; கருத்துச் செல்வத்தை இழந்துவிட்டோம். அதனுல் வந்த நலிவு 'வழிவழி' செழிப்பினை நாடு இழந்துவிட்டிருக்கிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,

யாதும் ஊரே யாவரும் கேளிர்.

எத்தனை எத்தனையோ கருத்துச் செல்வங்களை இழந்துவிட்டோம், நலிவு தாக்கிடக் காண்கிறேம்.

அந்தக் கருத்துச் செல்வங்களைத் திரும்பப் பெற்றிட வேண்டும். மாசுநீக்கி தூசு போக்கிப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

எண்ணம் சிறந்திட்டால் ஏற்றம் கிடைத்திடும்; 'வழிவழி' செழித்திடும் மாண்பினைப் பெற்றிடுவோம்.

பொங்கற் புதுநாளைக் காட்டிலும் பொருத்தமான வேருேர் நாள் இல்லை, இந்த எண்ணம் பற்றி எண்ணிட.

எனவே இந்நாளில், நம் நாடு 'வழிவழி' பெற்றிருந்த வண்ணம் வளம் அத்தனையும் இழந்திட்ட காரணத்தைத் துருவிக் கண்டறிந்து, பின் இந்த நிலைமையினைத் திருத்தி அமைத்திட வழி யாது என எண்ணி, பணியாற்ற உறுதிகொண்டு, பயணம் துவக்கிடுதல் வேண்டும்.

இச்சைக் கினியாள் அதோ இஞ்சி நறுக்குகின்ருள்; இருமிக் காட்டுகின்ருய், இங்கு வா என்பதற்கு. கண்டுகொண்டாளா என்று கவனித்திடின், அந்தக் குறும்பு விழி 'ஆம்' என்று காட்டிடுது. ஆயினும் வேலை முடித்திட வேளை இது என்று வேல்விழி கூறிடுது.

வேலையில் ஈடுபடுவோர்க்கு வேலைதான் கட்டளை பிறப்பித்திடும் காவலன்! நமக்காக மட்டும் என்ற வேலை அல்ல;

தொடர்ச்சி 16-ம் பக்கம்



# இயற்கை தரும் இன்பம்

வினையை முடித்துக் கொண்டு தலைவியைக்காணும் காதல் விருப்பத்தோடு தலைவன்தேர் ஏறி வருகிறான். தேரை இழுத்துவரும் குதிரை வீடு செல்லும் விருப்பத்தோடு நாலுகாற் பாய்ச்சலில் ஓடி வருகிறது.



காடுசார்ந்த பகுதிகளைக் கடந்து, கடற்கரை சார்ந்த பகுதியை அடைகிறது தேர். நெய்தல் நிலச் சூழல் காட்சியளிக்கிறது. மணற்பரப்பில், இரும்பு போன்ற கிளைகளையும் நீல மணியை ஒத்த இலைகளையும், வெள்ளியை ஒத்த ஒளிரும் மலர்களையும், தங்கத்தை ஒத்த மகரந்தத்தையும் கொண்ட புன்னைமரம் தென்படுகின்றது. பொன்னிறமோ வெண்ணிறமோ என்று சண்டறிய முடியாத மணற்பரப்பிலும், புன்னையின்பச்சை இலைமீதும் புன்னையின் பொன்னிறத் தாது உதிர்ந்து கிடக்கின்றது. தொலைவிலிருந்து காணும் போது மணல் என்றும், மரமென்றும், இலையென்றும், மலரென்றும், மகரந்தம் என்றும் பகுத்துக் காணமுடியாதவாறு, பல நிறங்களின் தொகுப்பு மட்டும் தோற்றமளிக்கிறது. இந்தத் தோற்றத்தைக் கண்டவுடன் குதிரை முதலில் அஞ்சி, ஓடத்தயங்குகிறது. பின்னர் முன்னைக் காட்டிலும் விரைவாகப் பந்துபோல் தாவித் தாவி ஓடுகிறது. குதிரையை நிறுத்த முயன்றும் தலைவனால் முடியவில்லை. குதிரையின் தயக்கத்திற்கும், பின்னர் அது தாவித்தாவி ஓடுவதற்குமான காரணத்தைத் தலை

நாவலர்
இரா. நெடுஞ்செழியன்



வனால் முதலில் கண்டு கொள்ள முடியவில்லை. தலைவன் சுற்று முற்றும் பார்க்கிறான். விளங்கிக் கொள்ள முடியாத பல நிறத் தொகுப்பையும், அந்தப் பக்கமிருந்து ஏதோ ஒரு ஒலி வருவதையும் அறிகிறான். அந்த ஒலி புலியின் உறுமல் போலவும், அந்தத் தொகுப்பு புலி பதுங்கிக் கிடக்கும் புதர் போலவும் அவன் கண்களுக்குப் படுகின்றன. புன்னை மரத்தின் அருகே நெருங்க நெருங்க அந்தத் தொகுப்பு புன்னைமரம் என்பதையும், அந்த ஒலி, புன்னை மலர்களின் தேனைப் பருக சூழ்ந்திருக்கும் வண்டுகளின் ஒலி என்பதையும் அறிந்து கொள்கிறான். குதிரை காட்டுப் பகுதியைத்தாண்டி வந்திருப்பதாலும், காட்டில் வாழும் புலி பற்றிய நினைப்புடனே வந்திருப்பதாலும், புன்னை மரத் தோற்றமும், வண்டுகளின் ஒலியும் முறையே அந்தக்குதிரைக்குப் புலியையும், அதன் உறுமலையும் நினைவுபடுத்தியிருக்கின்றன என்று எண்ணிக் கொள்கிறான். அதனால்தான் புலிக்கு அஞ்சிய குதிரை பந்து போல் தாவித் தாவி ஓடுகிறது என்பதைக் கண்டு கொள்கிறான். குதிரையின் அந்த விரைவும் தலைவியைக் காண தனக்குப் பயன்படுகிறதே என்று எண்ணித் தலைவன் வாய்விட்டுச் சிரித்து மகிழ்கிறான்.

இந்த இயற்கைக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டி, படித்துப் படித்து இன்ப முறுமாறு நம்மைச் செய்பவர் உலோச்சனார் என்ற புலவர் பெருமானாவார்.

இரும்பின் அன்ன
கருங்கோட்டுப் புன்னை
நீலத்து அன்ன
பாசிலை அகந்தொறும்
வெள்ளி அன்ன
விளங்கிணர் நாப்பண்
பொன்னின் அன்ன
நறுந்தாது உதிரப்
புலிப்பொறிக் கொண்ட
பூநாறு குரூஉச்சுவல்
வரிவண்டு ஊதலின்
புலிசெத்து வெரீஇப்
பரியுடை வயங்குதாள்
பந்தின் தாவத்
தாங்கவும் தகைவரை
நில்லா.

[நற்றிணை—249]

வழி வழி (தொடர்ச்சி)

நாட்டுக்காக என்றுள்ள வேலை.

'தொண்டு' என்று பண்டையோர் கூறினர் இந்தத் தூய வேலையினை.

இத்தொண்டில் ஈடுபடுவோர் பெறும் வெற்றியின் அளவினதே, நாடு போற்றிடவல்ல 'வழிவழி'

அத்தொண்டு புரிந்து இன்பம் தேடிடும் கழகத்தார், பெறும்வெற்றி, நாட்டின் பொலிவினை மீட்டுத் தந்திடும் பெரு வெற்றியாகிடும்.

ஆயின் இடையே நலிவு நுழைந்திடலாகாது.

அதோ! பாற்பொங்கல்! பத்து விநாடிகளில் பதமாகும் என்பதனைப் பாவை உணருகின்றாள்; பார்வையால் கூறுகின்றாள். பரபரப்பு காரணமாய், அவள் கணவன் எடுத்திடும் பாத்திரம் கவிழ்கிறது. நீர் கொட்டி நெருப்பு அணைகிறது புகை கப்பிக்கொள்கிறது. என்னாகும்? பாற் பொங்கல் கிடைத்திட நேரம் அதிகமாகும். புகைபோக்கி புது விறகிட்டு, தழல் எழுப்பி, தையலவள் பாற் பொங்கல் சமைத்திடவேண்டும்.

எனவே தொண்டுதனில் பயன் காண, பரபரப்பு குறைந்து அமைதியுடன் உறுதியது இணைந்து இருந்திட வேண்டும்.

தூய இம்முறையினிலே ஈடுபட்டு வெற்றி காண, திறமை நமக்குளதோ, இல்லையோ நானறியேன்! என்று அறிவேன், இந்த நன்முயற்சியிலே ஈடுபட்டுள்ளோர் தொகை அதிகமில்லை; நாம் சிலரே.

எனவே நம் பொறுப்பு மிகப்பெரிது; நம் இலக்கு மிக இனிது; 'வழிவழி' செழித்திடத்தக்க நிலையினை நாம் பெற, அந்தச் சூழ்நிலையில் வீடும் பெறப் பாடுபடுதல் நம்நோக்கம்.

இந்த நல்நோக்கம், நெஞ்சில் இடம்பெற வேண்டும்; உதட்டுறவு போதாது.

கரும்புச் சாறினிலே நாளெல்லாம் போட்டெடுத்திட்டாலும், மூங்கில் கரும்பாகாது. உதட்டளவு ஆர்வம் உள்ளத்தில் ததும்பிடும் ஆர்வத்தின் தரம் பெறாது.

உள்ளம். இந்த உன்னதம் பெறுவதற்கு, உழைத்திடுவோர் உயர்ந்திடுவர் என்ற நெறிகளாலும் திருநாளாம் பொங்கற் புதுநாளில் முயற்சி மேற்கொள்வோம்; முனைந்து முன்னேற்றம் காண்போம்.

★



# தலை கேட்டான்



கரும் பெடுத்துத் தமிழ் பிழிந்து — மலரில்
சுரும் பெடுத்து வருகின்ற தேன் கலந்து
அரும் பெடுத்துச் சிரிக்கின்ற மகளிர் கூட்டம்,
'' எறும் பெடுத்துச் செல்கின்ற உணவு கூட
எம் மன்னன் குமண வள்ளல் தந்த '' தென்று
எழுச்சி நடை போடுகின்ற கொங்கு நாடு.

*

தமிழ் பாடும் புலவரெல்லாம் குமணன்
புகழ் பாடி வந்திடுவார்—
இமிழ் கடலின் அலைபோலச் சொல் முழங்கும்
அமிழ்த மெனும் தமிழ் மொழியின் பண் முழங்கும்
கமழ்கின்ற கவிதை மலர்த் தோட்டம் — அன்பு
தவழ்கின்ற நெஞ்சத்தின் கூட்டம்.

*

## தம்பி



கருணாநிதி



முத்திரைத் தமிழால் கவிதை யாத்திடும் புலவர் —பெருஞ்
சித்திரனுர் என்ருெருவர் — பேரறிஞர் !
பத்தரை மாற்றுத் தங்கம் போல் பத்தினி—
புத்திரச் செல்வம் — புலவரை யீன்ற வயிறு — அவர்
இத்தரையில் கண்ட சுகம் வறுமையே என்று
மெத்த இளைத்திட்டார் — நித்த நித்தம் பட்டினியால் !
பூப்போல வாடி வதங்கிடுவாள் துணைவி
புழுப்போலச் சுருண்டு படுத்திடுவாள் அன்னை
பூனைபோலப் பானை உருட்டிடுவான்
பசியாலே பிள்ளை !
கைபிசைந்து நின்றிருந்த கவிஞருக்குக் கொடையாலே
கைசிவந்த குமண வள்ளல் நினைவுவரக் கிளம்பி விட்டார்.

*

பாரிக்கும் காரிக்கும் பின்னர்க் கொடை வழங்க
யாரிருப்பார் என நினைத்த நினைப்பறுத்து
வாரிக் கொள் நான் வழங்குகின்ற செல்வத்தை !
மாரிக்குப் பெயர்தான் குமணனென்று மார்தட்டும் கொங்குமன்ன !
கோரிக்கை யொன்றுமக்கு என் குடும்பம்
வாழ்வதற்குப் பொன் வேண்டும்.
எனக் கேட்டார் ! அள்ளித் தந்தான். “ நான்
வருகின்ற பாதையிலே வாழ்கின்ருன் வெளிமான் என்று
—அவன்
தருகின்ற பொருள் வாங்க நடந்து சென்றேன் ; அந்தோ மன்ன !
அவனிறந்து ஆண்டொன்று ஆனதாலே — அவன் தம்பி
இளவெளிமான் இருக்கின்ருன்—கொடை வழங்க மறுக்கின்ருன்.
கொடிய பதில் உரைக்கின்ருன்.
வளங் கொட்டும் முதிரமலை ஆள்கின்ற காவலனே !
தரங் கெட்ட இளவெளிமான் தருக் கடக்க
ஆனை ஒன்று தரவேண்டும் — அதனை அவன்றன்
காவல் மரத்தில் கட்டி வைத்துக்
கடையனவன் தலைகுனியச் செய்ய வேண்டும்;
தருவீர் ” என்ருர். தந்துவிட்டான்.

*

வீர வெளிமானுக் கொரு தம்பி இளவெளிமான் போல்
வேந்தன் குமணனுக்கு முண்டு; இளங்குமணன் அவன் பேர்.
அணிமணிகள் ஆனை சேனை அரண்மனைகள் அத்தனையும் ;
—அண்ணன்
கவிமணிகள் வாழ்வதற்கே தந்துவிட்டால்
துணி மணியும் இல்லாத ஆண்டி மடம் ஆகிவிடும்
நமது நாடு—.
இனியுமிதை அனுமதிக்க முடியாதண்ணா ;
இப்போதே பிரித்துவிடு என் பாகம் என்றான்.
“கனிகள் உதிர் முதிரமலைத் தருக்கள் கண்டேன்—செங்
காய்கள் உதிர் தம்பி யுந்தன் வாயுங் கண்டேன்.
அணி மணிகள் எவை வேண்டும் எனக்கு ?
அரண்மனையில் எது வேண்டும்—
ஆனையென்ன சேனையென்ன அனைத்தையுமே எடுத்துக்கொள்...
அண்ணனுக்குத் தம்பியென்ற அன்பை மட்டும் கொடுத்துவிடு !
எனச்சொல்லி ;
அழுதுவிட்டான் குமண வள்ளல் — தம்பியிடம்
விழுது விட்டு வளர்கின்ற பகை உணர்வோ அடங்கவில்லை.
பழுதுபட்டுப் போய்விட்ட உள்ளங் கொண்டோன்—வானில்
உழுது விட்டுப் போன செங்கதிரோன் திரும்புமுன்னே
—என் நாட்டைத்
தொழுதுவிட்டுக் காடேகு என ஆணையிட்டான் ;
குமணன் சென்று விட்டான்.

*





மானினமும் தேன்சிட்டும் மயில் குயில் மாடப்புருவும்
மனித இனம் காட்டுகின்ற அன்பைவிடப் பெரிய அன்பை,
மன்னனிடம் காட்டியதால் மகிழ்ந்திருந்தான் — காட்டில்
கன்னல் மொழித் தமிழ் வழங்கப் புலவரில்லை ; நீங்கா
இன்னல் அஃதொன்றே — வேறில்லை !
கொழுந்துவிட்ட துரோகத்தின் விளைவாகக்
கவர்ந்து விட்டான் செங்கோலைத் தன் கையில்—தம்பி !
மகிழ்ந்தானா அந்த மட்டில் ? மனதில்
அழுந்திவிட்ட பகையுணர்வைக் கிளறிவிட்டார்
கொடிய நண்பர் !
"பொறுத்திருந்தேன் இது நாள் மட்டும் — என்மேல்
போர் தொடுக்க முனைந்து விட்டான் அண்ணன்.
தடுத்திடாதீர் ; தம்பியென்னை ; அண்ணன் தலை,
அறுத்தெடுத்து வருபவர்க்குப் பத்தாயிரம் பொன்
பரிசே !" என்றான்.

*

"தலையறுப்பதோ ; என்ன
குலை யறுக்கும் செய்தி இது !
அலையடிக்கும் கடல்வெல்லும் பரந்த உள்ளம் — தமிழ்க்
கலை வடிக்கும் புலவர்க்கெல்லாம் கொடை நீ ரூற்று !
முதிரமலை கரைந்துவிடும் — முடிமன்னன் தலைகொய்தால்—எம்
உதிர மெலாம் உறைந்து விடும்" எனச் சொல்லிக்
காரி உமிழ்ந்தனர் காவலன் காட்டிய பொற்கிழியை !
கோத்திடும் தமிழ்மலர் கொற்றவன் தோளில்
சேர்த்திடும் நினைவுடன் புலவர் வந்தார்—
சாத்தனார் அவர் பெயர் — குமணன்
காட்டினில் இருப்பதை அறிந்து கவன்றார்.

*

பாலையிற் சோலையைக் கண்டது போலும்
மாலையில் தென்றலை மணந்தது போலும்
காலையில் கவிஞரைக் கண்டான் குமணன்,
ஓலையில் தமிழை உண்டான் மிகவே !

“அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை அடைந்தாய்
தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்து
விலைதனைப் பெற்றுன் வறுமை நோய் களையே!”
என்றான் குமணன்—எடுத்தான் வாளை
தடுத்தார் புலவர்—விடுத்தார் அடவி!

*

அடுத்தார் பேச்சால் அழிந்த தம்பி
எங்கே என்றார்—தொடுத்தார் கணைகள்
“தம்பியுடையான் படைக்கஞ்சான் என்றிருந்தான் அண்ணன்
தம்பியவன் கழுத்தறுத்தாய்—தலையறுத்துத் தருபவர்க்குப்
பொன்பரிசு தருவதாக வாக்களித்தாய்—அவன்
தலையறுத்த வாள் இதுதான்
தந்திடுவாய்ப் பரிசை” என்றார். அண்ணனின்
வாள் கண்டான்—வாள்முனையில் செங்குருதி தனைக் கண்டான்.
வீழ்ந்தாயோ அண்ணா! என்று வீறிட்டு அலறிவிட்டான்
விஷ உள்ளம்—வெறியுள்ளம்—அண்ணன் உயிர்தந்த செய்தியாலே



வெடிவைத்த மலைபோலச் சிதறிற்று—வெள்ளையுள்ளம் தம்பியுள்ளம்
வாய்விட்டுக் கதறிற்று.
"ஆவிதரநேரிடினும் அருந்தமிழ்க்கே தருவேனென்று
காவியுடைக் குமணனவன் கானகத்தில் உரைத்திட்ட பொன்மொழியை
பாவி நீ புரிந்திட்ட பாதகத்தால் யான் கற்றேன்
தாவி நீ ஓடிச்சென்று அன்னவனின் தாள்பணிந்தால்
தமையன் உயிரல்ல; தமிழுக்கே உயிர் வந்துவிடும்
தயங்காமல் வந்துவிடு; தடவிப்பார் வாள்முனையை!
ரத்தமல்ல; செவ்வண்ணம்" என்றுரைத்தார்

*

ஏன் நிற்பான் இளங் குமணன்?
தேன் விற்பார் தமைச் சுற்றும் ஈக்கள்போல்
வான் தமிழால் கவிதை பின்னும் புலவர்கூட்டம்
வட்டமிடும் குமணமன்னன் காலடியில்
வணங்கி வீழ்ந்தான்—வள்ளல் தழுவிக் கொண்டான்
தமிழ்ச் சாத்தனுர்க்குத் தலையைக் கொடையாய்த் தரச் சம்மதித்தோன்
தம்பிக்கும் ஒரு மன்னிப்பைக் கொடையாய்த் தந்தான்
தம்பி, குடையைத் தந்தான்
தனக்கினி வேண்டாமென்று; அதனை அண்ணன்
தமிழுக் கீந்தான்!




காங்கிரஸ் ஆட்சி நீடித்தால்...
இன்று
நாளை
தொழிலாளி
முதலாளி
உணவு
பணவீக்கம்


இன்று
நாளை
இந்தி
हिन्दी
இந்தி
தமிழன்
ரேஷன் கார்டு
அரிசி கார்டு
மண்ணெண்ணெய் கார்டு
பேபி உணவு கார்டு
சர்க்கரை கார்டு
பேபி உணவு
அரிசி
சர்க்கரை
புளி
பருப்பு
உளுந்து
கடலை எண்ணெய்
மந்திரி
கருப்புச்சந்தைக்காரன்
மந்திரி
அடக்குமுறை

# கல்லறைச் சொற்பொழிவு

சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு

(கிரேக்கப் பெருவீரன் பெரிக்ளிஸ் வீரர்களின் கல்லறையில் ஆற்றிய உரை)

இம் மனிதர்களும் இவர்களைப் போன்ருேருமே ஏதன்ஸ் நகரை மாட்சிமையுடையதாக்கினர். கிரேக்கர் சிலரைப் போன்று அவர்கள் ஆற்றியிருக்கும் செயல்களால் மிகைப்படுத்திக் கூற முடியாது.

இங்கே நாம் காணும் முடிவு உண்மையிலே காட்டுவது, நல்ல உயிர் என்பது அதன் சக்தியின் முதல் அடையாளத்திலிருந்து முடிவில் அதன் முதிர்ச்சி வரையில் எத்தகையது என்பதனையாகும். ஏனென்ருல் வாழ்வின் முந்திய குறிப்பேடுகள் தவறுகளையும் கேள்விகளையும் காட்டியிருந்தால் கூட அவை எல்லாவற்றிற்கும் சமதையாக வீரமிக்க கடைசி நாழிகைக் கடமையின் உறுதியை மதிப்பிடுவது நீதியாகும். அவர்கள் தீமையை நன்மையின் மூலம் துடைத்தனர். நகரத்திற்கு அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் செய்திருந்த தவறுகளைவிட படை வீரர்களாக மிகுந்த பணியாற்றியுள்ளனர். அங்கே எந்நெஞ்சங்களும் மங்கலடையவில்லை. ஏனெனில் அவர்கள் தற்புகழ்ச்சியைவிட செல்வத்தை மிகுதியாக விரும்பினர். எங்கும் ஏழையின் செல்வக் கனவில் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. இவை எல்லாவற்றையும் நகரத்தின் பொருட்டு போர் புரிவதற்காக புறத்தே ஒதுக்கி வைத்தனர். நகரனையின் புகழுக்காக பழிவாங்கத்திரியும்ஓர் உயர்ந்த புகழ் வாய்ந்த வீரச் செயலாக எண்ணிக் கொண்டனர். நம்பி- உறுதிகாண முடியாத நம்பிக்கை தெய்வமும் அவர்களை விருப்பம் போல் அனுப்பியதும், அவர்கள், தங்களை எதிரிகள் நெருங்கிய வுடன் தங்கள் ஆண்மை வலிமையுடன் எதிர்த்தனர். பின்னர் போரின் அதிர்ச்சி வந்தபோது, அவர்கள் மிகக்கூடுதலாக துயர்படுவதையே பல வீனத்தின் மூலம் உயிர் பிழைப்பதை விட விரும்பித் தேர்ந்தெடுத்தனர். ஆனல் அவர்களைப் பற்றிய நினைவு மனிதர் உதடுகளில் தோன்றும் இழிவுரைகளைத் தப்பி விட்டது. ஆனல், அவர்கள் அதற்குப்



பதிலாக தங்கள் உடல்
களில், மனிதக்கரங்கள்
அளித்த அடையாளப்
பொறிகளை தாங்கியதுடன்,
ஒருகண நேரத்தில், தங்கள்
வாழ்வின் மேலுச்சக் கட்டத்
தில், அவர்களுடைய இறக்
கும் கண்கள் அச்சத்தாலன்றி
புகழினால் நிறைக்கப்பட்டி
ருந்தமையால் இவ்வுலகை
விட்டு எடுத்தேகப்பட்டனர்.

அத்தகைய மனிதர்கள்
இங்கு வீழ்ந்துள்ளனர்.
அவர்களது நகரமும் அவர்
களுக்கு அத்தகைய உள்ளு
யிர்ப் பூட்டியது. பிழைத்தி
ருக்கும் நாம் துதிக்கக் கூடி
யது அவர்களுடைய கடுமை
யான நேரத்திலிருந்து நாம்
விட்டு வைக்கப்படுவோமாக
என்பதே. ஆனால் நாம் வெற்
றியின் குறைந்த ஊக்கத்
துடன் நமது பகைவரை
எதிர்ப்படுதலை உறுதியாக
அறுவறுக்க வேண்டும். நாம்
பலம் பெறுவோம். இருமுறை
கூறிய வாதங்களிலிருந்து
மட்டுமே யன்றி போரிலே
வீரத்தைக் காட்டுவது எவ்வ
ளவு நேர்த்தியானதாகவும்
இருக்கிறது. ஆனால் நாள்
தோறும் நமக்கு முன்னால்
இருக்கும் நமது பெரிய நகரத்
தின் வாழ்க்கைக் காட்சிகளை
யும், அவற்றைப் பார்க்கும்
போது நகரிடத்து மென்மே
லும் காதலுற்றும், இன்னும்
நகரத் தாயின் இப்பெருமை
யனைத்தும் அவளுடைய
குழந்தைகளின் வீரத் துணி
வுக்கும், தம் கடமையை
உணர்ந்த அறிஞர்க்கும்,
நல்ல மனிதனின் தற்காப்புக்
கட்டுப்பாட்டு பணிக்கும்,
அவள் சார்பாக உயர்ந்த
காணிக்கையாகத் தங்கள்
உயிர்களைத் தியாகம் செய்த
மனிதர்களுக்கும், கடமைப்
பட்ட தென்பதை நினைவி
விருத்திக் கொண்டு, நகரின்
சுறுசுறுப்பான காட்சியிலி
ருந்து உரம் பெறுவோமாக.
அவ்வாறு அவர்கள் தங்கள்
உடல்களை பொது நன்மைக்
குத் தந்துவிட்டு, ஒவ்வொரு
வருக்கும் தமது சொந்த
உரிமையாக என்றும் இற
வாப் புகழையும், அதனோடு
அனைத்தினும் நனியுயர்வாக
கல்லறைகளில் அவர்க
ளுடைய எலும்புகளை வைத்
திருப்பதன்று. ஆனால் மனி
தர்களின் உள்ளங்களில் வீட
மைத்து பசுமையாகவே
இருந்து அங்கு அவர்களு
டைய புகழை உள்ளங்கிளர்
பேச்சாக வெளிப்படுத்தவும்,
அல்லது அம்மனிதர்களும்
வாய்ப்பிற்கு தக்கவாறு
செயல் புரிந்திடும் படியான
உயர்வை பெறுகிறார்கள்.
ஏனென்றால் உலகம் முழு
வதுமே-புகழ் பெற்ற மனிதர்
களின் கல்லறையே! எவ்வா
றெனில் அவர்களுடைய வர
லாறு அவர்கள் பிறந்த மண்
ணின் புதைக் குழிக்கல்லின்
மேல் மட்டுமே செதுக்கப்பட்
டிருக்கவில்லை. ஆனால்
தொலைவில் உள்ள உயிர்க
ளின் க்ண்ணால் காணக்
கூடிய அடையாளத்துட
னன்று. ஆனால் மற்ற மனி
தர்களின் உயிர்ப் பொருள்க
ளுடன் இணைக்கப் பட்டிருக்
கிறது. இப்போது நீங்கள்
அவர்கள் ஆற்றியுள்ளவற்
றில் அவர்களை மிஞ்சுவதற்கு
போட்டியிட வேண்டும்.
எனவே நான் இறந்துபட்
டோரின் பெற்றோருடன்
புலம்பவில்லை. அவர்களுக்கு
ஆறுதல் கூறுவேன்.

ஏனென்றால், அவர்களுக்
குத் தெரிந்தவை, அவர்கள்
பல வகைப்பட்ட வாய்ப்பு
கள் கொண்ட உலகத்தில்
பிறந்திருப்பதும், எவனுக்கு
நல்ல வாய்ப்புகள் கிடைக்கப்
பெறுகிறதோ, அவனே
மகிழ்ச்சியாக இருப்பவனாகக்
கணக்கிடப்படலாகும்!

எனக்குத் தெரியும் உங்
களுக்கு தேறுதல் கூறுவது
எளிதன்று என்பது. மற்றவர்
கள் மகிழ்ச்சியுறும் போது,
அடிக்கடி உங்களுக்கும் அது
முன்பு அவ்வாறு சொந்த
மாயிருந்ததைப்பற்றிய
நினைவுகள் தோன்று மென்
பதுடன், மேலும் மனிதர்கள்
தாங்கள் என்றுமே சுவைத்
தறியாத ஒன்றை இழப்பதற்
காக வருந்துவதில்லை. ஆனால்
தங்களுக்கு விருப்பாகிப்
போயிருந்த ஒன்று தங்களிட
மிருந்து பறிக்கப்படும் போது
மிக்கத் துயரடைகிறார்கள்
என்பதையும் நானறிவேன்.

ஆனால் நீங்கள் இப்பொழுது
மற்ற மக்களின் நம்பிக்கை
யுடனும், துணிவான நெஞ்
சத்துடனும் இருக்க வேண்
டும். இப்போது வயது வந்த
வர்கள் அதைசாதிப்பார்கள்.
எம்மனிதனும் மற்றவர்களைப்
போலவே நகரத்தின் பேரிட
ரானவேளையில் தன் குடும்ப
மும் இடரான தருணத்தில்
இருந்தாலொழிய-ஒரு நியாய
மான, உண்மையான அறிவு
ரையை ஒரு மன்றத்தில்
வழங்கிவிட முடியாது.

வீரியத்தின் வயதைக் கடந்
துள்ளோருக்கு நான் கூறு
வது:- நீண்ட ஆண்டுகளிலி
ருந்த மகிழ்ச்சியை இன்னும்
இருக்கக்கூடிய குறுகிய கால
வழிக்கு முன்பாக நிறுத்திக்
கொண்டு, உங்கள் பளுவை
இறந்தவனின் புகழால்
குறைத்துக் கொள்ளுங்கள்.
ஏனென்றால், புகழால் ஏற்
படும் காதல் மட்டுமே காலத்
தால் பழமைபட்டுப் போவ
தில்லை. இப்புகழே இவர் கூறு
வது போல் பொன் என்று,
தடுக்க முடியாத வாழ்விறு
தியின்போது போற்றிப்
பாராட்டப்படுகிறது.




பாளையங்கோட்டை தனிமைச்சிறையில் என்னைத்தான் அடைத்து விட்டார்கள். என் எண்ணங்களை அவ்வாறு செய்ய முடியுமா? அவை, இந்தச் சிறை அரண்களைத்தாண்டிக் கொண்டு நடக்கும் - பறக்கும் - மிதக்கும் - ஓடும் திரும்பிவரும் - விரும்பிச் செல்லும்! அதன் நடவடிக்கைகளின் பல கோண வடிவங்களே இந்தத் தொகுப்பு.

*　　　*　　　*

இந்தத் தனிமைச் சிறைக் கொடுமைக்கு நான் பயந்து விடமாட்டேன். குளவிக் கூட்டின் புழுப்போல, சூழ்நிலையின் காரணமாகப் பல்லாயிரம் முறை கொட்டப்பட்டுக் கொட்டப்பட்டுத் தயாரிக்கப்பட்டவன் நான்.

*　　　*　　　*

பிரசவத்தின் போது ஏற்பட்ட வேதனைகளின் காரணமாக, ஒரு பெண், தன் கணவனையே பிறகு ஏறெடுத்தும் பார்க்காமல் இருந்து விடுவதில்லை.

அதைப்போலத்தான் இலட்சியவாதிகளும் அடக்குமுறையின் கொடுமையில் சிக்குண்டு வெளிப்பட்ட பிறகும் தங்கள் இலட்சியத்தையே நாடிச் செல்லுகிறார்கள்.

*　　　*　　　*

கடவுள் மட்டும் உண்மையிலேயே இருப்பாரேயானால் அவரைப்பார்த்து நான் வேண்டிக்கொள்வேன்; குற்றமற்றவன் என்று ஒருவனைத் தனக்கு நன்றாகத் தெரிந்தும் வேண்டுமென்றே தண்டனை வழங்குகிற நீதிபதிகள் யாராயிருந்தாலும் அவர்கள் பூண்டற்றுப் போக வேண்டுமென்று!

*　　　*　　　*



சிறையில் என்னைக் காணவந்த அண்ணு, முதல் செய்தியாக உன் மருமகன் மாறனும் நேற்றிரவு கைது செய்யப்பட்டு விட்டான் -என்று கூறினுர். கூறிவிட்டு ஒரு பெருமூச்சு விட்டார். அந்தப் பெருமூச்சு என் குடும் பத்திற்குக் கிடைத்த புகழ்வாழ்த்து அல்லவோ? 'முரசொலி'யில் ஏதோ தவருக எழுதிவிட்டதாக என்மீதும் மாறன் மீதும் மற்ருெருவழக்காம். நியாய வாதங் களுக்குத் "தவறு" என ஒரு புதுப்பொருள் உண்டென்ருல் அந்தத் தவறை என் தலை முறை தலைமுறையாக எல்லோரும் செய்து கீர்த்திக் கொடி நாட்டட்டும்!

* * *

மார்க்சிம் கார்க்கி எழுதிய "தாய்" எனும் நூலை மூன்ருவது முறையாகப்படித்தேன். அதில் வரும் வாலிபன் பாவேலுடன் அந்தத் தாய் எந்த அளவுக்கு உணர்ச்சிகளில் பங்கு கொண்டு அந்த மகனின் பொது வாழ்வுப் பணிகண்டு பூரிக்கிருள் என்பதை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். அந்தத் தாய் போலத் தானே என் தாயும் இருந்தார்கள் என நினைத் தேன். சிறையில் நான் அழுதது இப்போது தான்.

* * *

கார்க்கியின் பாவேல் கொடி ஏந்திக் கொண்டு ராணுவத்தை ஊடுருவி முன்னேறு கிருன் அமைதியாக! அசைவற்ற மனத் தோடு! அடடா; அந்தக்கட்டம்... பாவே லாக நாம் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

* * *

"ஒரு மனிதன் எத்தனை ஆண்டு வாழ் கிருன்?"

"அவன் இறந்து போன நாளில் இருந்து கணக்கிட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியது."

* * *

நண்பர்களின் கோழைத்தனத்தை விடப் பகைவர்களின் மூர்க்கத்தனம் ஆயிரம் மடங்கு மேல்.

* * *

தனிமைச் சிறையில் எனக்கு ஒரு அணி லின் துணை கிடைத்தது. ஆனுல் பாவம்; அதுவும் என்னைப்போல் ஒரு நோயாளி. காக்கையோ பருந்தோ கொத்தியதால் அதன் உடலில் காயம்! என்னைப்போல் உள்ளத்தில் அல்ல! காரணம்; அதற்கு அரசியல் தெரியாதே! அதன் வேதனைக்கு மருந்து போட்டேன். தின்னப் பழங்கள் கொடுத்தேன். ஆயினும் அதற்கு "விடுதலை" யைவிட வேறு எதுவும் பிடிக்க வில்லை. அதன் விஷயத்தில் நான் பக்தவத் சலமாக விரும்பவில்லை. எனக்கு இருதயம் இருந்து தொலைகிறதே; அதனுல் அந்த அணிலை விடுவித்துத் தோட்டத்துப்பக்கம் அனுப்பி விட்டேன். அணில் என்னைப் பிரிந்து சென்று விட்டது. நான் அதனைப் பிரிந்து விட்டேன். இனி அதற்கு என்னை நினைவிருக்காது. நான் அதன் நோய்க்கு அளித்த மருந்தோ, வாய்க்கு அளித்த கனி களோ அதன் ஞாபகத்திற்கு வரப்போவ தில்லை. ஆனுல் நான் பிரிந்து விட்ட அணி லின் முதுகில் உள்ள மூன்று கோடுகள் மட்டும், "கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு" என்ற மூன்று சொற்களை என் உள்ளத்தில் முழங்கிக் கொண்டிருக்கும். நான் எங்கிருந் தாலும் அந்த முழக்கம் கேட்டுக் கொண்டே யிருக்கும்.

* * *

கண்ணுக்குள் இருப்பதற்குப் "பாவை" என்றும் "பாப்பா" என்றும் பெயர் வரக் காரணம்?

அந்த இரண்டையும் தனிப்பரிவுடன் பார்ப்பதால் இருக்கலாம்!

* * *

மனிதனுக்கு இறக்கைகள் இருந்து பறக்கத் தெரிந்திருந்தால்...?

அதிலும் கழுகுகள் இருக்கும்; புருக்கள் இருக்கும்!

*           *           *

ஒருவனின் பெருந்தன்மையை இன்னொருவன் கோழைத்தனம் என்று கூறக் கூடாது. தனது கோழைத்தனத்திற்குப் பெருந்தன்மை என்று பெயர் கிடைக்குமென்று நம்பி ஏமாறவும் கூடாது.

*           *           *

“அய்யோ நான் உயரவேண்டிய அளவுக்கு உயரவில்லையே” என்று ஏங்குகிறவன் யாராயிருப்பினும் அந்த ஏக்கப் பெரு மூச்சிலிருந்து விடுபடத் தனது பழைய நிலையைத் திரும்பிப் பார்த்துக் கொண்டால் ஒருவகை திருப்திக்கு வந்து சேருவான்.

*           *           *

இதுதான் நமது உச்சி என்று எதையும் கருதாமல் - சோர்வடையாமல் - மேலும் மேலும் ஏறிட முயல்பவன் உழைப்பின் பலனை உறுதியாக அறுவடை செய்தே தீருவான்.

*           *           *

பாளையங்கோட்டையில் தனிமைச் சிறைவாசத்தின் கொடுமையைக் கோடைச் சூரியனின் நெருப்புக்காற்று அதிகமாக்கிக் கொண்டிருந்தது. உடலெல்லாம் வெந்து கருகியது. மூச்சு விடமுடியவில்லை. அவ்வளவு தகிப்பு. மாலைவந்தது. இனிய தென்றலும் வந்தது. பகல் நேரத்துக் கொடுமைகள் அனைத்தும் மறந்து போய்விட்டன. ஒரு நாள் எனைக்காண அண்ணா வந்தார். சிறைக்கொடுமைகள் மட்டுமல்ல; அரசியல் நினைவு அலைகள் கிளப்பிய மனக்குமுறல்களும் மறைந்து போய்விட்டன. எது தென்றல்? எது அண்ணா? என்று தெரியாமல் திகைத்துப்போய் அந்தத்திகைப்பில் ஒரு இன்பங் கண்டேன். மறுநாள் மீண்டும் பகல் வந்தது. “மாலை நேரம் வருமா?” எனக் காத்துக்கிடக்கிறேன்.

*           *           *

சிறைக்குச் செல்வது-ஒருபெண்ணின் முதல் இரவு அனுபவத்தைப் போன்றது!

சிறையில் வாழ்வது தாயின் கர்ப்பத்திற்குள் இருப்பது போன்றது.

சிறையிலிருந்து விடுபெறுவது-ரத்த சேமிப்பு நிலையத்திலுள்ள ரத்தம், காயமடைந்த போர் வீரனின் உடலில் பாய்ந்தோடுவது போன்றது!

இத்தனையும் இலட்சிய வாதிக்கு!

*           *           *

சுதந்திரவேட்கையும் - மொழிப்பற்றும் ஒன்றையொன்று ஆறைகூவலுக்கு அழைக்கக்கூடிய உணர்ச்சிகள்.

ஆனால் தமிழகத்தைப் பொருத்தவரையில் இந்திய சுதந்திரப்போராட்டகாலத்தில் காட்டிய உணர்ச்சியை விடத் தமிழ் மொழிப் பாதுகாப்புப் போராட்டத்தில் காட்டியுள்ள உணர்ச்சி மிகையானது. தமிழுக்காகச் சாகிறோம் என்று பள்ளி ஆசிரியர்-மாணவர், விவசாயி - தொழிலாளி எனும் விதத்தில் பத்துப்பேர் தங்களைத் தீயிலே கருக்கிக் கொண்டு உயிர்விட்டிருக்கிறார்கள். இது உலக வரலாற்றில் மொழிக்காகச் செய்யப்பட்ட மகத்தான தியாகமாகும்.

*           *           *





''கடப்பாரையை விழுங்கி விட்டுச் சுக்குக் கஷாயம் சாப்பிடுவது'' என்பார்களே; அது என்ன தெரியுமா?

இந்தி தான் ஆட்சி மொழி என்று சொல்லி விட்டு, அது ஜீரணமாவதற்காக ''திருத்தங்கள்'' என்று அலைகிருர்களே; இதுதான் அது.

* * *

தளதளவென்றிருக்கிறவேப்ப மரத்தில் ஒரு குச்சியை ஒடித்துப் பல்துலக்கினுல், அந்தக் குச்சி, தன் மனக்கசப்பைக் காட்டிக் கொள்கிறது.

தமிழ் மொழியின் எதிர்காலம் திட்டமிட்டு ஒடிக்கப்படுகிறது. தமிழர்கள் கசப்பைக் காட்டிக் கொள்ளக்கூட உரிமையில்லையாம்!

வேம்பிலும் தாழ்ந்தவனு தமிழன்?

* * *

எந்த ஒரு கட்சியும் ''என்னுல் கட்சிக்கு என்ன பலன்'' என்று கேட்டுக்கொண்டு பணி யாற்றுகிறவர்களின் தொகை குறையாமலிருக்கிறவரையில் வலிவோடுதான் இருக்கும்.

''கட்சியினுல் எனக்கு என்ன பலன்'' என்று கணக்குப் போடுகிறவர்கள் பெருகப் பெருகக் கட்சியும் அனல் பட்ட மெழுகென உருகிப் போய்விடும்.

* * *

எவனெருவன் தனக்குக்கிடைக்கும் புகழையும் பெயரையும் கட்சியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிருனே; அவனே அந்தக்கட்சியின் பிரதான ரத்தநாளம்!

எவனெருவன் கட்சிக்கு கிடைக்கும் செல்வாக்கினைத் தன் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டுப் பணியாற்றுகிருனே; அவன் கட்சியில் வளரும் புற்றுநோய்!

* * *

நேதாஜி உயிரோடு இருக்கிருர் என்று ஒரு சாராரும்; இல்லை; இறந்துவிட்டார் என்று பிறரும் வெகுநாட்களாகக் கூறி வருகிருர்கள். இன்னும் பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு கூட நேதாஜி வாழ்ந்து கொண்டு தான் இருப்பார்.

இலட்சியவாதிகளுக்குச் சாவு ஏது?

* * *

கடுந்தவமியற்றிய இளைஞன் ஒருவனைப் பார்த்து புத்தர் சொன்னுர்:-

''வீணையை அதன் நரம்புகளை மிகையாக முறுக்கி இசைத்தாலும், அல்லது நரம்புகளைத் தளரவிட்டாலும் தரமான இசை கிடைக்காது.''

காங்கிரஸ் அரசு தரமான இசையை விரும்பாது; தரமான இசை தேவைப்படுகிறவர்கள், தகுதியான பாடகனைத்தான் நாடிச் செல்லவேண்டும். தரமான இசை, மிகையாக முறுக்கப்படும் வன்முறையிலோ அல்லது தளரவிடப்படும் உணர்விலோ கிட்டாது. தியாக உணர்வுடன் கூடிய அறப்போர் அடிப்படையில் அமையும். ஜனநாயகத்தில்தான் அதனைப் பெற முடியும்.

* * *

காங்கிரஸ் பேசுகிற ஜனநாயக சோஷலிசம் எப்படிப்பட்டது?

முன்னது; இட்லரின் ஆயுதக்கிடங்கில் தயாரானது.

பின்னது; டாட்டா, பிர்லா, டால்மியா முதலியவர்களின் வீட்டில் தூக்கி எறியப்பட்ட எச்சிற்கலையில் பொறுக்கியது.

* * *

விண்வெளிப் பயணத்தில் முதன் முதலாகச் சென்ற மனிதனைப் பற்றியும், தொடர்ந்து வரிசையாகச் சென்ற மனிதர்களைப் பற்றியும் பேசுகிருேம். ஆனுல் முதன்முதலில் விண்வெளிக்குச் சென்ற நாயை மறந்துவிட்டோம்; உதாரணமாக, புகழின் உச்சிக்கு

வந்துவிட்ட சிலர் இப்படித்தான் நாயை மறந்துவிட்டது போலத் தங்களைக் கைதூக்கி விட்டவர்களை மறந்துவிடுகிறார்கள்.

*   *   *

புகைவண்டி ஓடலாம் என்பதற்குப் பச்சை விளக்குப் போடுகிறார்கள். ஆனால் சட்ட சபையில் உறுப்பினர்கள் பேசலாம் என்பதற்குச் சிவப்பு விளக்குப் போடுகிறார்கள்; என்ன காரணம்?

அளந்து- நிதானமாக- எச்சரிக்கையாக- பொறுப்புடன்-அழகுடன் பேசவேண்டும் என்பதற்காகத்தான் சிவப்பு விளக்கு எரிவதாக நான் கருதுகிறேன்.

*   *   *

மிருதுவான பாதங்களுடைய பூனைக்குத் தான் சொர சொரப்பான நாக்கும் கூர்மையான பல்லும் நகமும் இருக்கின்றன.

மென்மையாகப் பேசி மென்மையாக வாழ்ந்து காட்டுகிறவர்களும் அப்படித்தான் தீய குணங்களை மறைத்து வைத்துக் கொண்டு உலவுகிறார்கள்.

*   *   *

குட்டக் குட்டக் குனிகிற எதிர்க்கட்சிகள் இருந்தால், குனியக் குனியக் குட்டுகிற ஆளுங்கட்சிக்குக் கொண்டாட்டந்தான்.

*   *   *

பசுவுக்குத் தீனி வைத்தது நான்தான்; குளிப்பாட்டியது நான்தான்; பால் பாத்திரத்தை அடுப்பிலே வைத்ததும் நான்தான்; என்ன செய்வது?

பால் அடுப்பிலேயிருக்கும்போது கொஞ்சம் பராக்குப் பார்த்துவிட்டேன்; அத்தனையும் பொங்கி வழிந்துவிட்டது என்று சொன்னால், அவனை யாரும் பாராட்டிக் கொண்டிருக்கமாட்டார்கள்.

*   *   *

நீர்வீழ்ச்சியிலிருந்து 'குளு குளு' என்று கொட்டுகின்ற தண்ணீரின் வேகத்தில் உற்பத்தியாகிற மின்சாரம், பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுக்கு ஒளியும் வழங்குகிறது. தவறாகக் கையாள்பவர்களைக் கொன்றும் விடுகிறது. அமைதியான உள்ளத்திலிருந்து கிளம்புகின்ற அன்பு நீர் வீழ்ச்சிக்கும் இந்த இருவித சக்திகள் உண்டு.

*   *   *

பாதரசம் நிரம்பிய பாத்திரத்தில் இரும்புத் துண்டுகூட மிதக்குமே தவிர, கீழே அமிழாது!

தீயவர் நெஞ்சங்களில் என்னதான் வலிந்து நற்கருத்தை நுழைத்தாலும் புகாது.

*   *   *

அறிவு எங்கே அஸ்தமனமாகிறது?

முட்டாள் தனமென்னும் மேற்குத் திசையில்!

*   *   *

ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றது தொழிலாளிவர்க்கம் என்பது சரிதானா? தவறு! முக்காலும் தவறு! ஒரு நாட்டுக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரையில் உள்ள உடலமைப்பின் கூறுகளைப் போன்றவை தான் தொழிலாளி வர்க்கப் பகுதிகள்.

மார்பில் முளைத்துள்ள ரோமம் போன்றது முதலாளி வர்க்கம்; தேவையற்றது!

*   *   *

அதிகார வர்க்கம், முள் நிறைந்த ரோஜாவாக இருக்கலாம்; ஆனால் அது முள்ளம் பன்றியாக சிலிர்த்துக் காட்டக்கூடாது.

*   *   *





வலிமையான குதிரைகளின் வளர்ப்பு வர வரக் குறைந்துவிடாமல் இருப்பதற்காக குதிரைப் பந்தயங்களைத் தொடர்ந்து நடத்திக்கொண்டுதான் இருக்க வேண்டுமென்று தமிழக சட்டசபையில் அமைச்சர் வெங்கட்ராமன் (மார்ச் 1965) விளக்கமளித்திருக்கிருர்.

''சூதாட்டம், பாரத காலத்திலிருந்து பிரசித்தி பெற்ற ஒரு கலை. அந்த பாரதக் கலை நமது பாரதத்தில் நசித்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் குதிரைப் பந்தயம் நடக்கிறது'' என்று அமைச்சர் விளக்கம் அளித்தாலும் ஆச்சரியமில்லை.

நல்ல விளைவு காட்டுகிற விவசாயிகட்குப் பரிசளிப்பது போல், நல்ல குதிரை வளர்ப்பவர்க்கும் பரிசளித்து ஊக்கப்படுத்தலாம். சில பல குதிரைகளின் வளர்ச்சிக்காக எத்தனை ஆயிரம் குடும்பங்கள் சந்தியிலே நிற்பது?

தரமான மாடுகள் இனவிருத்தி செய்யப் படுகின்றன. மாட்டுப் பந்தயம் வைத்தா அந்த விருத்தி ஏற்பட்டு வருகிறது? அப்படி நிகழும் சில மாட்டுப் பந்தயங்களிலும் மாடுகளின் பெயரில் பணத்தைக்கட்டி, ஆயிரமாயிரம் குடும்பங்கள் அழிவது கிடையாதே! குதிரைகூட வளரவேண்டாம். குடும்பங்கள் வாடாமல் இருந்தால் போதும் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

குடிப்பழக்கங்கூட ஆளை மெல்ல மெல்லக் கொல்லுகிறது. குதிரைப் பந்தயம் சிலரை அதேயிடத்தில் கொன்றுவிடுகிறது. இந்த பயங்கரப் பகிரங்கச் சூதாட்டத்திற்கு அனுமதியளித்துவிட்டு, சில்லரைச் சூதாட்டங்களைப் பிடித்து வழக்குப் போடுவது என்பது, போலீசாரின் வழக்கு எண்ணிக்கைக் கணக்கை உயர்த்தத்தான் பயன்படுமே தவிர ஒழுக்கத்தை உயர்த்தாது.

* * *

வளைந்து நெளிகின்ற தன்மை நாக்கிற்கு உண்டு. எதிரிகளுக்கு நேரே அதனை வளைய விடாமல் நிமிர்த்தி இயக்குகிற சக்தி வீரனது உள்ளத்திற்கு உண்டு.

* * *

மனிதனுடைய புத்தி, நாயின் வாலைப் போல் நிமிர்க்க முடியாமலும் இருக்கக் கூடாது; அதன் நாக்கைப் போல எச்சில் சொட்டத் தொங்கிக் கொண்டும் இருக்கக் கூடாது.

* * *

இறந்தவர்களை உயிருட்டிப் பிழைக்க வைக்கும் ஆற்றலை எந்த சர்க்காராவது பெற்றிருக்கிறதா?

ஓ! தாராளமாக!

துப்பாக்கிப் பிரயோகத்தில் நூறுபேர், கொல்லப்பட்டால் ஐம்பது பேர்தான் என்று கணக்குக் காட்டி, மிச்சம் ஐம்பது பேரைப் பிழைக்க வைத்து விடுகிருர்களே!

* * *

தாய்மொழி-தாய்நாடு-இரண்டில் சிறந்தது எது?

இரண்டும் தனித்தனித் தாய்கள் அல்ல! ஒரே தாய்தான்!

மொழி உணர்ச்சி-சுதந்திர உணர்ச்சி இரண்டும், ஒரு குழந்தைக்குப் பால் தருவதற்கு அதன் தாய்க்கு இரு தனங்கள் இருப்பது போல!

# மக்களாட்சியும் குடியரசும்

பேராசிரியர் அன்பழகன்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முன்னுரை இது. "இந்தியக் குடிமக்களாகிய நாம், இந்தியாவைத் **தன்னுரிமை மக்களாட்சிக் குடியரசு** ஆக அமைப்பதென்று முழு மனதுடன் உறுதி செய்து கொள்வதோடு, அதன் குடி மக்கள் அனைவருக்கும்—

சமுதாய, பொருளியல், அரசியல் துறைகளில் **நீதியும்** எண்ணம், கருத்துவெளியீடு, நம்பிக்கை, சமயப்பற்று, வழிபாடு ஆகியவற்றில் **சுதந்திரமும்** —

சமூக நிலை, முன்னேறும் வாய்ப்பு ஆகியவற்றில் **சமத்துவமும்,** உரித்தாகுமாறு செய்வதற்கும்—

குடிமக்கள் அனைவரிடையிலும், தன் மதிப்பையும், தேசிய ஒற்றுமையையும் காக்கும் சகோதரத்துவம் வளரச் செய்வதற்குமாக—

இந்த 1949 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26–ம் நாளாகிய இன்று, நம்முடைய அரசியல் நிர்ணய சபையின் மூலம் இந்த அரசியல் சட்டத்தினை உருவாக்கி, நிறைவேற்றி நமக்கு நாமே வழங்கிக் (உரித்தாக்கி) கொள்கிறோம்,

இந்திய மக்களின் உரிமைக் காவலராக அரசியல் நிர்ணய சபையில் அமர்ந்தோர் மூலம் உருவான அரசியல் சட்டத்திலேயே அதன் நோக்கம் தெளிவாகக் காணப்படுகிறது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக காணப்பட்ட அரசியல் நடைமுறைக்கான அமைப்பு, "தன்னுரிமை மக்களாட்சிக் குடியரசு"—சுதந்திர சனநாயகக் குடியரசு ஆகும். பிறநாட்டார் ஆதிக்கமும் குறுக்கீடும் அற்ற நாட்டு மக்கள், மக்களாட்சி உரிமை அடிப்படையில் தாங்களே அமைக்கும் குடியரசு இது–என்பது பெயராலே பெறும் விளக்கமாகும்.

இந்தியா ஆங்கிலேயர் மேலாதிக்க ஆட்சியினின்றும் விடுதலை பெற்ற நாளிலிருந்தே, தன்னுரிமை (சுதந்திரம்) உடையதாகி விட்டது. இன்று இந்த உரிமையை மறுப்பாரும் ஐயுறுவாரும் இல்லை.

அடுத்து, மக்களாட்சிக் குடியரசு என்பதுதான் இந்திய அரசியல் சட்டத்தால், ஆட்சியில் இடம் பெறுபவர்களால், அவர்களை அந்த இடத்தில் அமர்த்தும் குடிமக்களால், செயல் முறையில் நிலைநாட்டப்படவேண்டியதாகும்.

மக்களாட்சி–குடியரசு என்னும் இரு சொற்களும் ஒரு பொருளுடையனவாகவே காணப்படுவன. எனினும், ஓர் அரசியல் அமைப்பைச் சுருங்கக் கூறுமிடத்து, இன்றியமையாத பொருட் சிறப்புக்கு இடமிருந்தாலன்றி, ஒரே பொருளைக்குறிக்க இரு சொற்கள் இடம் பெறுவது இயல்பன்று.

வழக்கிலே 'இந்தியக் குடியரசு' என்றே அழைக்கப் படுவதைக் காணுமிடத்து, இந்திய ஆட்சிமுறையின் அமைப்பு–குடியரசு என்னும் சொல்லால் விளக்கப்பட்டதாகிறது. இந்திய ஆட்சிமுறை, முன்னைய பேரரசர், மன்னர் முதலானோரின் முடியரசு முறைக்கு இடமில்லாதது என்பதும், மன்னர் வழிமுறையினரோ, தனிப்பட்ட சிலரோ, உரிமை கொண்டாட இடமற்றது என்பதும், 'குடியரசு' என்பதால் தெளிவாகும். சுதந்திர இந்தியாவின் ஆட்சி உரிமை நாட்டுக் குடிமக்கள் அனைவருக்குமாகவே உரியதாகும் என்பது இதனால் உறுதி பெற்றது.

பின்னர், குடியரசு என்பதனுடன் 'மக்களாட்சி' என்பதையும் இணைத்து-மக்களாட்சி

குடியரசு என்று வழங்கியதன் பயன்தான் என்ன?

மன்னரை நீக்கிய குடியரசு ஆட்சி அமைப்புக்களில் பல வகைகள் உள. ஒரே அங்கமாக இயங்கும் குடியரசு, பல அங்கங்கள் விரும்பிச் சேர்ந்து உருவான குடியரசு, அங்கங்களின் தனி உரிமைகள் சிறந்து விளங்கும் குடியரசு, பல அங்கங்களின் கூட்டு அமைப்பாக உரிமைகள் மிகுந்து நிற்கும் குடியரசு, அமைச்சரவை மூலம் நிருவாகத்தை நடத்தும் முறையுள்ள குடியரசு, தேர்ந்தெடுக்கப்பட்ட தனித் தலைவர் (பிரசிடெண்ட்) நிருவாகப் பொறுப்பேற்கும் குடியரசு, எனப் பலவாறு குடியரசுகள் செயல்படுவன.

ஒரு நாட்டின் குடியுரிமை அந்நாட்டு மக்களுள் ஒரு சாராருக்கு மறுக்கப்பட்ட நிலையிலும், மன்னன் இல்லாததாலேயே குடியரசு ஆகிவிட்டதாகக் கூறிக்கொள்ளலாம். குடிமக்கள் அறியாமையைப் பயன் படுத்தி சில பெரிய பண்ணைகள் பரம்புரை ஆதிக்கவாதிகள் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாம். குடியரசு, பசுத்தோல் போர்த்திய புலி போன்று, நாட்டையே காடாக மாற்றிக் கொண்டு உலவி வரலாம். குடிமக்கள் குருதியைக் குடித்தும், உயிரைப் பறித்தும், வாழ்வை அழித்தும் கேடு செய்யும் ஆட்சியும் 'குடியரசு' பெயரால் நிலவிடலாம்.

'குடியரசு' என்று மட்டும் கூறுவதால் ஒருவேளை அதன் குறிக்கோளுக்கு ஏற்ற நெறியினின்றும் விலகி விட இடந்தரலாம் என்று அஞ்சியேதான், தெளிவும், விளக்கமும் தருதற்கு 'மக்களாட்சிக் குடியரசு' என்று அழைத்திருக்க வேண்டும்.

மக்களாட்சி என்பது, மக்களால், மக்களுக்காக, மக்களைக் கொண்டு செயற்படுவது. ஒரு நாட்டு மக்கள் தம்முடைய நலனைக் காக்கத் தக்கவரைக் கண்டு, அவரைத் தேர்ந்தெடுத்து ஆட்சியில் அமர்த்துவது மூலம் நிருவாகத்தை நடத்துவதே மக்களாட்சி.

மக்களாட்சி முறையிலும் இருவகை உண்டு. மன்னரைப் பெயரளவில் தலைமைக்குரியராகக் கொண்டு, ஆட்சிப் பொறுப்பை மக்கள் மன்றத்தார் மேற்கொண்டு நடத்துவது ஒருவகை. மன்னர் இன்றியே நடத்தும் குடியரசு மற்றொருவகை. இந்தியா, இந்த வகையிலுள்ள குடியரசாகவே உள்ளது.

ஆனால் 'மக்களாட்சிக் குடியரசு' என்னும் பெயருக்கேற்ற நிலையை, இந்தியா பெற்றுள்ளதா என்பது தான் கேள்விக்குரியதாக உள்ளது.

'குடியரசு' மக்களாட்சி முறை நிறைவேறுவதற்கு வகுக்கப்படும் அமைப்பாகும். 'மக்களாட்சி' குடியரசு அமைப்பு நிறைவேற்ற வேண்டிய 'குறிக்கோளும்' இயங்க வேண்டிய 'பண்புமாகும்!

பொது மக்களில் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை; சில ஆண்டுகட்கு ஒருமுறை எல்லாச் சட்டமன்றங்கட்கும் பொதுத் தேர்தல்; அரசியல் கட்சிகள் தேர்தலில் பங்கு பெறும் வாய்ப்பு; வெற்றி பெற்றவர்களைக் கொண்டு சட்டமன்றங்கள் செயல்படும் முறைமை; அந்த மன்றங்களில் எடுக்கப்படும் முடிவுகள்; அவற்றிற்கேற்ப செயல் படுத்தும் நிருவாக ஆட்சிமுறை, ஆகியவை 'குடியரசு' அமைப்பின் உறுப்புக்கள். இந்த உறுப்புக்கள் குறையற்றதாக இருந்து, உடம்பு நிறைவுடையதாக யிருப்பினும், அதனாலேயே—மக்களாட்சியின் நோக்கம் நிறைவேறியதாகாது.

பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று வருகிறான் சிறுவன் என்பதாலேயே அவன் கல்வியில் கருத்துடையவன் ஆகிவிடுவதில்லை. எழில் நலம் வாய்ந்தாள் ஒருத்தி என்பதாலேயே இனிய குண நலமும் கொண்டவளாவதில்லையன்றோ! தோற்றத்தால் ஆண்மைப் பொலிவுடையார் எல்லாம், நெஞ்சத்தால் வீரம் உடையவராவார் என்பதற்குச் சான்றில்லை யல்லவா?

கற்றறிவுடைய சிறுவன், நாணம் என்னும் பண்புள்ள நங்கை; வீரமுள்ள ஆண் என்னும் தொடர்களால் அவர்களிடத்தில் எத்தகைய பண்புச் சிறப்பு விரும்பப் படுகிறதோ, அவ்வாறே குடியரசும் மக்களாட்சிப் பண்பில் சிறக்க வேண்டும் என்பதே இப்பெயராலும் எதிர் நோக்கப்படுவதாகும்.

'குடியரசு' அப்பண்புச் சிறப்பினை உடையதாக வேண்டுமெனில், 'மக்களாட்சி' யின் அமைப்பை, முறையை இயல்பை, அது வழங்கும் உரிமையை அனைவரும் தெளிய வேண்டும்.

மக்கள் ஆட்சியின் உயர்த்தன்மை, குடியரசின் உறுப்புக்களால் மட்டும் சிறப்படைவதில்லை. அவற்றைப் பயன் படுத்தும் மக்கள் அறிவாற்றலையும், தெளிவையும் பொறுத்தே அமைவதாகும்.

பொது மக்களின் குடியுரிமையால் பிறக்கும் வாக்குரிமையே குடியரசின் அடிப்படை. ஆனால் அந்த வாக்குரிமையை ஒரு நாட்டு மக்கள் எவ்வாறு பயன் படுத்திக்

கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் அவர்தம் உரிமையைக் காக்கவும், விருப்பத்தை நிறைவேற்றவும் உள்ள வழி வகைகளைப் பொறுத்துமே 'மக்களாட்சி' உண்மையாகும். வாக்குப் பதிவு உரிமை இருந்தும், அதன் அருமையை, பயனை, விளைவை, அறியாத மக்களாலும், அந்த உரிமையைக் காத்துக் கொள்ள முடியாத நிலையாலும் 'வாக்குரிமை' அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதில்லை.

ஒரு பெண்ணை ஒரு ஆடவனுக்குத் திருமணம் செய்து வைப்பதாகச் சொன்னால் மட்டும் போதுமா? அவள் விரும்பிய மணாளனைக் கைப்பிடிக்கும் உரிமையும், அவனை மணந்து கொள்ளும் வாய்ப்பும் மறுக்கப்பட்டால் நிலை என்னாகும்? திருமணத்தில் தாலி கழுத்தில் ஏறுவதன்றிப் பயன் என்ன?

அது போன்று வாக்குரிமை இருந்தால் மட்டும் போதாது. வாக்குரிமையுடைய மக்கள் தம் அடிப்படை விருப்பங்கள், இயல்பான உரிமைகள் புலப்படுவதற்கு வாய்ப்பாகவும், பின்னர் அவை சட்டமன்றங்களில் ஏற்கப்படுவதற்கு வழியாகவும் தேர்தல் முறை அமைய வேண்டும்'

தேர்தல் முறையால் ஒவ்வொரு தொகுதியிலும், போட்டியிடுபவர்களுக்குள் அதிக வாக்குப் பெற்றவர்கள் வெற்றி பெறுவதும், மற்றவர்கள் தோல்வியுறுவதும் முறையாகவே தோன்றும். ஆனால் நாடெங்கும் பெரும்பாலோராக உள்ள ஒரு சமயத்தாரோ கட்சியினரோ, வகுப்பாரோ, தங்களுக்கு நியாயமாகக் கிடைக்கக் கூடியதைவிட அதிக இடங்களில் வெற்றி பெறுவதும், ஆங்காங்கே வாழும் சிறுபான்மையினர் அவர்கள் போட்டியிடும் சில இடங்களிலும் தோல்வியுறுவதும் நேருகிறது. இந்த உண்மையை ஏற்றேதான், இன்றைய சமுதாயத்தில் பிற்பட்ட நிலையிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைசாதியினருக்கும் தனி இடங்கள் ஒதுக்கி வைத்துள்ளனர் என்பது தெளிவு.

ஆனால் இந்த 'ஒதுக்கீடு, முறை ஒன்றாலே மட்டும் அவர்கட்கும் முழு நியாயம் கிடைத்து விடுவதில்லை. அந்தத் தனித் தொகுதிகளில் தேர்தலுக்கு நிற்பவர்களுள் எவர், மற்றமேல் வகுப்பாரின் வெறுப்புக்கு ஆளாகாமல், அவர்களது ஆதரவைப் பெற்றவராக உள்ளாரோ அவர்தான் அத்தொகுதியினில் வெற்றி பெறக்கூடிய நிலை இருக்கிறது. தமது சமூக உரிமைகளை வற்புறுத்தக் கூடியவர்கள், வெற்றிபெற முடியாமல் போவதும் கண்கூடு.

ஆனால் தனி வாக்காளர் பட்டியல் அமைக்கும் முறையைக் கைக்கொள்ளலாமோ என்றால், அதனால் ஒரு சமுதாயத்தினர் பிற சமுதாயத்தினரோடு ஒத்து வாழ்கின்ற மனமற்றவர்களாகவும் வேற்றுமை வளரவுமே இடம் ஏற்படும் என்பதால் அதனையும் ஏற்பதற்கில்லை.

இந்நிலையில், ஒரு கட்சியினரோ, ஒரு வகுப்பாரோ, ஒரு நிலைக்கு ஆளானவரோ, ஒரு கொள்கை வழி இணைந்தவரோ, ஓரளவேனும் சட்டமன்றத்தில் இடம் பெற்றுத் தம்முடைய விருப்பங்களை எடுத்துக் கூறும் வாய்ப்புப் பெறவேண்டுமெனில் தேர்தல் முறை மாறத்தான் வேண்டும்.

தனிப்பட்டவர்கள் சி[illegible]ர் (சுயேச்சைகள்) தேர்தலில் [illegible]டு

## பழமொழி-புதுஉரை!




ஓட்டைப் பானையில்விட்ட தண்ணீர் போல.

படுவது தவிர்க்க முடியாதது என்றாலும், அவர்கள் ஒரு கொள்கையை அறிவித்து அதன் அடிப்படையில் நாடெங்கும் தொடர்பு கொண்டு தேர்தலில் நிற்பவர்கள் அல்லவாதலின் அவர்கள் பெறும் வெற்றியும் தோல்வியும் அத்தொகுதியோடு முடிந்து விடுவதேயாகும்.

ஆனால் ஒரு கொள்கை அடிப்படையில், கட்சி முறையில் நாடெங்கும் பல தொகுதிகளில் போட்டியிடுபவர்கள் பெறும் வெற்றி தோல்விகளைக் கொண்டே அவர் தம் கொள்கைக்கு உள்ள மக்கள் ஆதரவைக் கணக்கிடுதல் தவறாகும். தொகுதியிலே தோல்வி காணினும், அவர்தம் கருத்து நாட்டிலே தகுந்த அளவு ஆதரவுடையதாய், அரசினர் ஒப்புக் கொள்ளத் தக்கதாய் இருக்க முடியும். அப்படிப்பட்ட கொள்கைகளும் சட்ட மன்றங்களில் உரிய இடம் பெற்றால் தான், மக்கள் ஆட்சி முறையின் நோக்கத்திற் கேற்ப மக்களின் கருத்தை உள்ளவாறு அறியக் கூடும். அதற்கு ஏற்றவழி, நாட்டில் அவ்வக் கட்சியினர் பெற்றுள்ள மொத்த வாக்குகள் அடிப்படையில் இடம் அளிக்கும், விகிதாசார பிரதிநிதித்துவம் (Proportional-Representation) முறையேயாகும்.

இன்று அமைந்துள்ள தேர்தல் முறையால் பொது மக்களின் எண்ணத்தின் உண்மையான வலிவு சட்ட மன்றங்களில் புலப்படவில்லை. மக்கள் கருத்தின் ஒரு குறிப்பிடத் தக்க பகுதி ஒதுக்கப்பட்டதாகிறது. மக்கள் கருத்துக்களே மக்களாட்சி முறையின் அடிப்படையும் அதன் பண்பு சிறப்பதற்குக் கருவியும் ஆதல் உணரப்பட்டால், சட்ட மன்றங்கள் உண்மையான மக்கள் கருத்தினை அளவிட்டறியும் இடமாக அமைவதற்குத் தேர்தல் முறையை, தொகுதி அடிப்படையினின்றும், மொத்தவாக்கு விகித அடிப்படைக்கு மாற்றுவதன் பயன் விளங்கும்.

தேர்தலுக்குப் பின்னும், வெற்றிபெற்று வருபவர்கள் தம் கடமை யாற்றும் உணர்ச்சிக் குறைவாலும், தகுதிக் குறைவாலும், ஓரளவு மக்கள் கருத்து புலப்படுத்தப்படாமல் போகிறது. மேலும் ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஆளுங்கட்சியின் முடிவை முன்னதாகவே ஒத்துக்கொண்டுவிடுவதாலும், கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டே செயல்படுவதாலும், ஆட்சியாளர் கொண்டுவரும் சட்ட திட்டங்களுக்கு மக்களிடத்திலே உள்ள மாறுபாடு சட்டமன்றத்தில் இடம் பெறாமலே மறைகிறது. கருத்தால் மாறுபட்டு நிற்கும் ஆளுங் கட்சியை சார்ந்த உறுப்பினர்களும், தம் கருத்தைக் கைவிட்டு அரசினை ஆதரித்துப் பேசுவதும், வாக்களிப்பதும் நாடறிந்ததாகும். இதனாலும் மக்களாட்சியின் பண்பு கெடுகிறது.

அடுத்து, பெரும்பான்மையோராக சட்டமன்றங்களில் இடம்பெற்று ஆட்சி நடத்துவோர், மக்களுடைய இயல்பான விருப்பங்கள், அடிப்படை உரிமைகள் இவைகளைக் காக்கத்தான் தாம் பொறுப்பேற்றிருக்கிறோம் என்பதை உணராமல், தமது கட்சி அடிப்படையிலேயே எண்ணியும் அதன் வெற்றியே பெரிதென மதித்தும், பெரும்பான்மை வலிவுள்ளது என்பதால் எழுகின்ற சிக்கலான பொருளைப் பற்றியும் ஆழ்ந்து எண்ணாது துச்சமாகக் கருதுவதாலும், மக்களாட்சியின் குறிக்கோள் பாழ்படுகிறது. இவைகட்கு மேலாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளோரில் பலரது தன்னல நோக்கம், ஆதிக்க விருப்பம், அதிகார ஆணவம் ஆகியவற்றாலும், மக்கள் கருத்து புறக்கணிக்கப்படுகிறது. எது மக்கள் கருத்து என்று கண்டறியும் தூய விருப்பம் எழாதபடியும், அதற்கான முயற்சி இல்லாமலும், மக்கள் ஆட்சியின் உயிர்த்தன்மை, அறிந்தோ அறியாமலோ சாகடிக்கப்படுகிறது என்றால் அது தவறாகாது.

மக்களாட்சியின் நடைமுறை, பெரும்பான்மையின் முடிவுப்படிதான் நடக்க முடியும் என்பதையும் அதற்கான இடம் சட்டமன்றங்கள்தான் என்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் சட்ட மன்றங்கள் அமையும் வழி முறை மாறுவதாலும், கட்சி அடிப்படை நோக்கம் மாறுவதாலும் —இந்தப் பெரும்பான்மை என்பது எழுகின்ற கேள்விக் (பிரச்னை) கேற்ப மாறத்தான் செய்யும்.

இங்கிலையில்தான் எதிர்க் கட்சிகளின் பங்கை ஆராய வேண்டும். எதிர்க்கட்சிகள் ஆளுங் கட்சியின் மாற்றுக் கட்சிகள் தான். கட்சி அடிப்படையில் போட்டியிடுபவை தான். ஆனால் சட்ட மன்றத்திற்குள் அவை வெளியிடும் கருத்துக்கள் — ஆளுங் கட்சியின் பெரும்பான்மை வலிவை மனத்தில் கொண்டு ஒதுக்கப்படக் கூடாது. அந்தக் கருத்துக்கள் மக்களின் கருத்தேயாதலை எண்ணி—அவற்றை முடிந்த அளவு ஏற்றுச் செயல்படவே ஆளுங் கட்சி முயல வேண்டும். ஆளுங்கட்சி கொண்டுவரும் எந்தத் திட்டத்தையும், எவ்வகைச் சட்டத்தையும் எதிர்ப்பது என்பது ஒரு எதிர்க்கட்சிக்கு எப்படி

ஏற்றதாகாதோ, அப்படியே எதிர்க்கட்சி சொல்வதனைத்தும் மறுக்கப்படவேண்டியது என்னும் கருத்து ஆளுங் கட்சிக்கு அறவே கூடாது.

ஆனல்—எதிர்க் கட்சி தவருக நடந்தாலும்—அக்கருத்து வெற்றிபெறும் வாய்ப்பின்மையால், மக்கள் இழப்பது ஒன்றுமில்லை. ஆளுங்கட்சி தவருக எண்ணிச் செயல்படும்போதோ, அவர் தம் கருத்து நிறைவேறிச் செயல்படும் நிலை இருப்பதால் மக்கள் அடையும் துன்பமும் தொல்லையும் பலவாகும்.

இந்தப் போக்கும் இன்று வளர்ந்துள்ள நிலையால், மக்களாட்சியின் குறிக்கோள் நிறைவேருமற் போகிறது. இந்தக் குறை தவிர்க்கப்படுவதற்கு, மக்கள் வாழ்க்கையோடு ஒட்டிய ஒரு முக்கியமான கேள்வி எழும்போது, சட்டமன்றங்களைக் கொண்டு மட்டும் முடிவு எடுக்காமல், மக்களிடையே வாக்கெடுத்து (Referundum) முடிவுகாணவேண்டும். அப்படிப்பட்ட வாக்கெடுக்கும்போது, அரசாங்கம், தன்னை ஒரு சார்புக்கு ஆளாக்கிக்கொள்ளாமல். அந்தக் கருத்துக்கு உடன்படுவார் கூறும் விளக்கம், மாறுபடுவார் கூறும் விளக்கம் ஆகிய இரண்டையும் மக்களிடையே எடுத்து வைக்க வேண்டும்.

மேலும் ஆட்சிப் பொறுப்பேற்ருேர், இயல்பாக ஏற்படும் நெருக்கடி நிலைமையைத் தமக்கு வாய்ப்பாக ஆக்கிக் கொள்வது, தேர்தல் நடைபெறவேண்டிய காலத்தைத் தமக்கு வெற்றி தரக்கூடிய காலமாகத் தீர்மானிப்பது, மாற்றுக் கட்சியினர் ஓரளவு வெற்றி உடையவர்களானலும் அவர்களைப் பொறுப்பேற்கவிடாமல் சட்டமன்றத்தையே கலைப்பது, மாற்றுக் கட்சியினர் இயல்பாகப் பெறும் வளர்ச்சியைத் தடுக்க குற்றச் சாட்டுகளைப் புனைவது போன்ற பல செயல்களும் மக்கள் ஆட்சியின் மாண்பை உணராததாலேயே யாகும். மக்கள் ஆட்சியில் எய்தும் வெற்றியும் தோல்வியும் பெரிதல்ல. அவை மக்கள் விருப்பத்தை அளக்கும் கோல்களே என்னும் தெளிவு இருந்தால்தான் மக்களாட்சி நிறைவுடையதாகும்.

எப்படி எப்படியோ வெற்றி பெற்று, ஆட்சியைக்கைப் பற்றி, குடியரசை மறந்து, முடியரசு மயக்கம் ஏற்பட்டு தடியரசு நடத்தினும்-தேர்தல் முறை இருப்பது ஒன்ருலேயே அது மக்களாட்சியே என்று கருதுவது தவருகும்.

மேலும் தூய மக்களாட்சி இயங்கவேண்டுமெனில், ஒரு நாட்டு மக்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடி, நம்முடைய சார்பில் சர்க்கார் ஒருவரை அல்லது சிலரைத் தேர்ந்தெடுத்து அவரிடத்தில் ஆட்சியை ஒப்படைக்கவேண்டும். கலப்பற்ற மக்களாட்சி (Pure Democracy) நிகழ இத்தகு வாய்ப்பு இருக்கவேண்டும். அது மிகமிகச் சிறிய, ஒரு நாட்டிலே, நகர நாட்டிலே (City State) தான் நடக்கக் கூடும். அதற்கு நேர் மாருக, மிகமிகப் பெரியதொரு துணைக் கண்டமாக நிற்பது இந்தியா. இங்குள்ள ஒவ்வொரு மாநிலமுமே ஒரு நாடு என்று மதிக்கும் அளவுடையது. எனவே இங்கு எந்த நாளிலும் மக்கள் அனைவருமாக, நேரடியாகத் தெரிந்தெடுத்தவர்களைக் கொண்டு நிருவாகம் நடத்துவது இயல்வதன்று.

இன்ருே சட்ட மன்றங் கட்குப் பலரை மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியபின், சட்டமன்றங்களில் இடம் பெறும்

## பழமொழி-புதுஉரை !




கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல்

பெரும்பான்மையோர் ஆட்சியாளர்களைத் (அமைச்சர்களை) தேர்ந்து கொள்கிறார்கள். இதுவே—மக்களாட்சி நெறியில் ஓர் வகையில் மக்களின் உரிமையைக் குறைத்துவருகிறது. மேலும் மாநில அளவில் உள்ள சட்ட மன்றங்களுக்கு மேலான அதிகாரத்தோடும், ஆதிக்க உரிமையோடும்—மக்கள் சபை (பாராளுமன்றம்) இயங்குகிறது.

மக்களாட்சியில், மக்களது பிரச்சினைகள் அவர்களிடமிருந்து நெடுந்தொலைவு விலகிச் சென்று தீர்மானிக்கப்படலாகாது. அவர்களுடைய தொடர்புள்ள சூழலிலேயே அந்தந்த மாநிலத்திலேயே, உணவு, உடை, உறையுள், மொழி, கல்வி, மருத்துவம், உழவு, தொழில், உற்பத்தி, சுகாதாரம், வணிகம், போன்ற பலவற்றைக் குறித்து எழும் கருத்தும் முடிவு கட்டப்படவேண்டும். மக்கள் வாழ்க்கையோடு கலந்த பிரச்சினைகளையும், அவர்கட்குத் தொடர்பில்லாத தொலை மன்றத்தில் தீர்மானிப்பது என்பதும், மக்களாட்சியின் பயனைக் கெடுக்கும்.

குறிப்பாக, மக்களாட்சியின் நோக்கம் நிறைவேற, பல மொழி, நாகரிகப் பண்பாடுடைய பல இனமக்கள் வாழும் இந்தியக் குடியரசில், மத்திய அமைப்பு—பல சுயாட்சியுள்ள மாநில அரசுகளின் இணைப்பாக இருக்கவேண்டுமேயன்றி, மத்திய ஒருமித்த ஆட்சியாக இருத்தல் ஆகாது. அதிகாரங்கள் பரவலாகி, அந்தந்த வட்டாரத்து மக்களிடையே நெருக்கமான தொடர்புடைய மாநில அரசுகளே, மக்கள் பிரச்னைகளைத் தீர்மானிக்கும் வாய்ப்பு இருக்கவேண்டுமேயன்றி, மத்திய அரசில் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட நிலை கூடாது. அவ்வாறு குவித்திருப்பதால்தான் அவரவர் தாய்மொழி (மாநில ஆட்சி மொழி) மூலம் மத்திய ஆட்சியும் நடைபெறும் என்று பெற்றுக் கொண்டிருக்க வேண்டிய மக்கள் ஆட்சி முறைக் கருத்து இன்னும் ஏற்கப்படவில்லை. மொழிச் சிக்கல் வளரக் காரணம் மத்திய ஆட்சியின் அதிகார மிகுதியும், 'மக்கள் ஆட்சி' உணர்வுக் குறைவுமேயாம்.

மக்கள் ஆட்சி முறையில் சிறந்து விளங்கும் இங்கிலாந்துலேயே சில நூற்றாண்டுகள் கடந்தும், மக்களாட்சி முறை இன்னும் வளரவேண்டியதாகத்தான் உள்ளது என்றால், நம்முடைய நாட்டில் எடுப்பார் கைப் பிள்ளையாகத்தானே இருக்கமுடியும்? 'குழந்தை' நிலையில் உள்ள மக்களாட்சி, தத்தித்தடுமாறி நடைபோடும் குடியரசு, உண்மையான மக்களாட்சிப் பண்புடைய குடியரசாக நிலவ, ஆட்சியாளர்கள் சிந்திப்பார்களா?

'தன்னுரிமை மக்களாட்சிக் குடியரசு' அமைத்த காலை அறிவிக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற, மக்களாட்சிமுறை செயற்படும் வகையை நாம் சிந்திக்கவேண்டும். ஒற்றுமையும், தனி மனிதனது மதிப்பும் வளர இடம் செய்யும் உடன்பிறப்புரிமை—மக்கள் நலம் கருதும் விரிந்த நோக்கத்தை மக்களாட்சி முறையில் கைக்கொண்டால்தான் நிலவும்.

குடிமகன் என்னும் நிலையிலும், முன்னேறுவதற்கான வாய்ப்பிலும், 'ஒப்புரிமை' தழைக்க வேண்டுமெனில், அனைவருக்குமாகவே ஆட்சி என்னும் மக்களாட்சி முறையின் அடிப்படையை மறக்கலாகாது.

ஒரு கருத்தைக் கொள்ளவும், வெளியிடவும், ஒரு சமயத்தை நம்பவும், பின்பற்றி ஒழுகவும் முழு உரிமை அளிப்பதில் குறையில்லாதிருக்க வேண்டுமானால், ஆட்சியாளர்கள், மாற்றுக் கட்சியினரின் வாயடைக்கும் வழி முறைகளைக் கைவிட்டு, அவை அனைத்தும் மக்கள் குரலே என்பதை ஏற்றுச் செயல்பட முன்வரவேண்டும்.

சமுதாய வாழ்வு, செல்வப் பங்கீடு, அரசியல் கட்சிச் சார்பு ஆகியவற்றில் எவருக்கும் அடிப்படை உரிமை மறுக்கப்படாத நிலைதோன்ற வேண்டுமெனில், ஆட்சியாளர்கள், சட்டத்தைத் தங்கள் கைக்கருவியாக எண்ணுவதும், காவல் துறையைத் தங்கள் கட்சி நலத்துக்குப் பலியிடுவதும் நிறுத்தப்படவேண்டும்.

இவை யாவினும், நாட்டின் உண்மையான ஆட்சி உரிமையுடையவர்கள், பொது மக்களே என்பதும் ஆளுங்கட்சியினரோ, அமைச்சர்களோ அல்ல என்பதும், தெளிவாக உணரப்பட வேண்டும்.

மத்திய அரசில் குவிந்துள்ள அதிகாரங்களும், வளர்ந்துள்ள ஆதிக்கமும்—மாநில அரசுகளின்மூலம் பரவலாக்கப்பட்டு 'மக்கள் ஆட்சியின்' பயன் மக்களுக்கு எட்டும் படிச் செய்யவேண்டும். இன்றுள்ள குடியரசு அமைப்பு முறையிலும், அதற்குரியவர்களைத் தேர்ந்து கொள்ளும் தேர்தல் முறைகளிலும், மக்கள் கருத்தறியும் வழிதுறையிலும், மக்கள் ஆட்சியின் தன்மை வெளிப்படுவதற்கான மாற்றங்கள் காணவேண்டும். எவருடைய உரிமையும் பறிக்கப்படாதவாறு, மக்களாட்சி முறையைக் காக்கப் பொது மக்கள் நாளும் விழிப்புடையவர்களாக இருக்கவேண்டும்! இருப்பார்களா? இருந்தால் தான் இந்தியக் குடியரசு, அறிவித்த நோக்கத்திற்கிசைய 'மக்களாட்சிக் குடியரசு' ஆக முடியும்! ○

# கெடுத்தாள்!

இராம. அரங்கண்ணல்

தேர்தலில் நிற்க வேண்டுமென்கிற எண்ணம் திருவாளர் தீனதயாளனுக்கும் வந்துவிட்டது என்று கேள்விப்பட்ட ஊரார் முதலில் நம்பவில்லை. தானுண்டு தன் வட்டிக்கடையுண்டு, கோயிலுண்டு, அங்கே கிடைத்த தர்மகர்த்தா பதவியுண்டு என்று இத்தனை நாளும் இருந்துவருகிறவர் அவர். எந்த அரசியலும் அவருக்குப் புரியாது; ஏதோ இருக்கிறது ஒரே பெண்; அதற்கு ஒரு நல்ல இடமாகப் பார்த்து நாலு பேர் மெச்சும்படியாக ஒரு நல்ல காரியத்தை முடிக்க வேண்டும் என்பது தவிர வேறெந்த இலட்சியமோ கொள்கையோ அவருக்குக் கிடையாது. அப்படிப்பட்டவர்தேர்தலுக்கு நிற்கிறார் எப்படியும் எம்.எல். ஏ. ஆக வேண்டும் என்று துடிக்கிறார்—எலக்ஷனுக்காக ஏழெட்டுக் கலரில் போஸ்டர்கள் போடச் சொல்லி விட்டார்-சின்னத் தலைவர்கள், பெரிய தலைவர்கள் எல்லோருக்கும் பொதுக்கூட்டத்துக்கு அழைப்பு வைத்துவிட்டார்—'ரேஷன்' காலமாதலால் வருகிறவர்கள் சாப்பாட்டுக்கெல்லாம் எச்சரிக்கையாக ஏற்பாடுகள் செய்யச் சொல்லி யிருக்கிறார்—என்று செய்திகள் பரவப்பரவ முதலில் நம்ப மறுத்த ஊரார் கொஞ்சங் கொஞ்சமாக நம்பவேண்டியதாயிற்று.

"என்ன தெரியும் அவருக்கு? எத்தனை தடவை ஜெயிலுக்குப் போயிருக்கிறார்? காந்தியடிகள் வரலாறு தெரியுமா? நேரு பண்டிதர் நினைவாவது உண்டா? என்ன கொள்கை அவருக்கு? இவர் போய் என்ன சாதிக்கப் போகிறார் சட்டமன்றத்தில்?" என்று எதிர்வேட்பாளர் முழக்கமிடலானார்; ஒவ்வொரு கூட்டத்திலும்! இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை—பெயரைக் கேட்டாலே ஊரார் ஆதரிப்பார்கள்—அந்தத் தெருவில் இவரைத் தெரியும்—இந்த வீதியில் இன்னார் எனக்குச் சொந்தம்—எனவே பயமில்லை என்று ஆரம்பத்தில் எண்ணிய தீனதயாளனுக்குத்தான் தேர்தலில் நிற்க முடிவு செய்ததற்கான உண்மையைச் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் ஏற்பட்டு விட்டது.

"உலகம் வரவர ரொம்பக் கெட்டுப் போய்க்கிட்டேயிருக்கு! இல்லேன்னா நான் ஏன் தேர்தல்லே நிக்கணும்? எனக்குக் கொள்கை உண்டா, கோட்பாடு உண்டா என்றெல்லாம் எதிர்க்கட்சிக்காரங்க கேட்கிறாங்களே. நானும் ஒரு கொள்கைக்காகத்தான் பிடிவாதமாயிருக்கிறேன் எனக்கு வயசு 57 ஆகுது எனக்குக் கல்யாணம் காட்சியாகி 30 வருஷமாகுது. ஆனால் ஊரிலே இப்போ ஒழுங்கா ஒரு பெண்டுபிள்ளைங்க குளம் கோயிலுக்குப் போய்த் திரும்ப முடியல்லே. பேப்பரைத் திருப்பினா அங்கே அவளை அவன் கையைப் பிடிச்சான்—இங்கே யொருத்தனை இன்னொருத்தன் 'சதக் சதக்'குன்னு வெட்டினான், காரணம் காதல் கோளாறுங்கிற நியூஸ்தான் நிறைய வருது ஒரு வயசுப் பெண்ணு நீட்டா டிரஸ் பண்ணிக்கிட்டு வெளியே கிளம்பினா நிம்மதியாத் திரும்பி வரும்னு நினைக்க முடியல்லே, காலம் கெட்டுப் போச்சு! காலித்தனம் பெருத்துப் போச்சு. விபச்சாரம் அதிகமாகிக்கிட்டேப் போகுது. இதைத் தடுக்கணும். சரியான சட்டமாகக் கொண்டாந்து பெண்ணைப் பெத்தவங்களுக்கெல்லாம் மனசிலே ஒரு சந்துஷ்டியை உண்டாக்கணும். இதுக்காகத்தான் நான் எலக்ஷனிலே நிக்கறேன்..."

கூட்டத்தில் தன் மனதிலுள்ளதை அப்படியே பேசினார் தீனதயாளன். ஒரே பெண் **நல்லநாயகியை** நினைக்கும் தோறும் அவருக்கு இப்படிப்பட்ட பயம் உண்டு. ஊரில் எல்லோரும் ஏதோ தன் பெண்ணைச் சிறைப் பிடிக்கக் காத்திருக்கும் காத்தவராயன்களாகவே அவர் கருதி



னார். நல்லநாயகி, அவரைப் போல அல்ல; நல்ல அழகி! ஒரே பெண் என்பதால் எப்பொழுதும் மகளை நினைத்த படியே இருப்பார். மகளுடைய எதிர்காலம்தான் அவருக்குத் தாரக மந்திரம். அவளும் அழகியாக இருந்துவிடவே எப்போதும் அச்சமும் ஐயமும் உடையும் குணத்தை இயற்கையாகவே பெற்றார். பழுத்த அரசியல்வாதிகளைப் போல எதையும் சகிக்கும் தன்மை, அவருக்குத் தெரியாதது. சினிமாப் போஸ்டர்களில் ஒருவனும் ஒருத்தியும் கட்டிப் பிடித்துக் கொள்வது போலிருந்தால், அந்தப் போஸ்டர் தன் வீதியில் எங்கேயும் தென்படாதபடி ஆளைவிட்டுக் கிழிக்கச் சொல்வார். மற்ற பெண்களைப்போலத் தன் பெண்ணுக்கும் கெட்ட குணம் வந்துவிடுமென்று கருதி பத்து வயதுக்கு மேல் எந்தப் பள்ளிக்கூடத்துக்கும் அனுப்பவில்லை. எவ்வளவோ பாடுபட்டு அருமை பெருமையாகப் பெண்ணை வளர்க்கிறோம்! இப்படித்தானே ஒவ்வொரு அப்பா அம்மாவும் வளர்ப்பார்கள். இப்படி ஆசையோடு சீராட்டிப் பாராட்டி வளர்க்கும் பெண்களை இந்தக் காலத்து வாலிபப் பிள்ளைகள் காதல் கத்தரிக்காயென்று சொல்லிக் கெடுத்து விடுகிறார்களே. நெஞ்சால் நினைக்க முடியாத தப்புகளெல்லாம் நடக்கின்றனவே. ஜட்ஜ் சாம்பு மகள் கோர்ட்டு குமாஸ்தா குப்புசாமியைக் கல்யாணம் செய்து கொண்டாளாமே—கூலிக்கார குப்பன் மகன் இலட்சாதிபதி ஏகாம்பரம் பெண்ணோடு ஓடிவிட்டானாமே — நடுத்தெருவில் குடிவந்திருக்கும் நளினா நல்ல குடும்பத்தில் பிறந்தும் ஒருவனை நம்பி ஏமாந்ததால்தானே இந்தக் கதிக்குவந்தாளாம்—சேச்சே! இதையெல்லாம் எப்படியும் தடுத்தாக வேண்டும்? என்ன பேசுகிறார்கள் சட்டசபையில்? அரிசியில்லை, ஆற்றுக்கு அணையில்லை, விலைவாசி உயர்ந்தது என்பதுதான் பேசப்படுகிறதே யொழிய பெண்ணைப் பெற்றவர்களுக்கு என்னென்ன பாதுகாப்புத் தரவேண்டும் என்று யார் பேசுகிறார்கள்? நான் ஒருத்தனாவது ஜெயித்துப்போய் இதற்காகச் சண்டை போட வேண்டும்?—என்று முதலில் சாதாரணமாக எண்ணினார். 'சத்தியாக்கிரக' **சங்கரன்** அறிமுகமான பிறகு கொஞ்சம் தீவிரமாக எண்ணினார். இப்போது இரண்டு மூன்று கூட்டங்களில் பேசிய பிறகு, இந்தக் காரியத்தை நிறைவேற்றவே தான் பிறந்ததாக எண்ணலானார்.

"கேட்டீங்களாய்யா விளக்கத்தை! ஊர் உலகத்திலேயிருக்கிற எல்லாப் பெண்களையும் எல்லா வாலிபர்களும் கெடுத்துக்கிட்டே யிருக்காங்களாம். சொல்றார் தீனதயாளன்! இந்த அவமானத்தைப் பொறுத்துக்கிட்டு நாம்பள்ளாம் வாலிபன்னுச் சொல்லிக்கிட்டு இருக்கோமே இந்த ஊர்லே? நமக்கெல்லாம் என்ன, அக்கா தங்கச்சிங்க இல்லியா? நம்ப தமிழ் நாடு என்ன அவ்வளவு மோசமா ஆயிட்டா? எலக்ஷன்லே ஏய்யா நிக்கிறேன்னு என்ன விளக்கம் சொல்றாரு பார்த்தீங்களா, விளக்கம்!!"

எதிர்க்கட்சி ஒலிபெருக்கிகள் இப்படி முழக்கமிட்டன.

வாலிபர்களுடைய உணர்ச்சி தூண்டப்பட்டன. சாரை சாரையாக எதிர்க் கட்சிக் கூட்டங்களுக்குப் போகலாயினர். வாலிபர்கள் மட்டுமல்ல; வயோதிகர்கள்கூடச் செல்லலாயினர். எல்லோரும் தீனதயாளனைப் போலத் தன் பெண்ணை வைத்தா அரசியலை எடைபோடுவார்கள்?

தனக்குக் கூட்டம் சேருவதில்லை என்பதைக் கண்ட தீனதயாளன், சங்கரனிடம் கலந்தார். தன்னுடைய கருத்தை விளக்கிக் காரசாரமாகப் பேசுவதற்கு ஆள் கொண்டுவரச் சொன்னார். "சோடா பாட்டில் சொக்கப்பனை ஏற்பாடு பண்ணியிருக்கேன் சார்! சோடா குடிக்காமலே அஞ்சு மணி நேரம் பேசுவார். அதனாலேதான் அவருக்கு இந்தப் பேரே வந்திருக்கு. இனிமேப் பாருங்க" என்றான் சங்கரன். தீனதயாளன் பெருமூச்சு விட்டார். ஏனெனில் "சோடா பாட்டிலை"ப் பற்றி அவரும் கேள்விப்பட்டிருக்கிறார். வாங்குவாங்கென்று எதிர்க்கட்சிகளை வெளுத்து வாங்குவதில்

## பழமொழி-புதுஉரை!




கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிகொண்டதுபோல்



பெரிய புலி அவன். வந்து இரண்டு கூட்டம் பேசியதுமே தீனதயாளன் வாயெல்லாம் பல்லாகி விட்டது "மகாத்மா காந்திக்குப் பிறகு இன்னொரு மகாத்மா இல்லையே — ஒழுக்கத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஒரு ஆத்மா இல்லையே என்று நாம் குறைபட்டோம். தமிழ் நாடு குறைபட்டது. இந்தியாவே குறைபட்டது — ஏன்? உலகமே குறைபட்டுக் கலங்கிக் கொண்டிருந்தது. அந்தக் குறையைப் போக்க அவதரித்தவர்தான் இந்த ஊர்த் தீனதயாளர்!"

"என்னைப் பற்றி ரொம்பவும் அதிகமாப் பேசறீங்க......" என்று இழுத்தாற்போல் சொன்னாலும், சோடா பாட்டில் பேச்சில் ஒரு 'போதை' யிருப்பதை உணர்ந்தார். தேர்தலில் வெற்றிக்கொடி நாட்ட சோடா பாட்டிலின் துணை மட்டுமிருந்தால் போதும் என்கிற எண்ணம் அவருக்கு ஆழமாகப் பதிந்து விட்டது. கூட்டங்கள் — ஊர்வலங்கள்—பிட் நோட்டீஸ்கள். எலக்ஷன் நடைபெற இன்னும் நான்கே நாட்களிருந்தன. எங்கெங்கோ சுற்றி அலைந்துவிட்டு வீட்டுக்கு வந்தார் தீனதயாளர்.

நல்ல பசி நேரம். சாப்பாடு 'ரெடி'யாகி யிருந்தது. வழக்கத்துக்கு மாருக அக்காள் அம்புஜம் பரிமாறிக் கொண்டிருந்தாள். என்றைக்காவது ஒருநாள் இப்படி அக்காள் பரிமாற தான் சாப்பிடும் நிலை வரும் என்பது அவர் உணர்ந்ததுதான். அந்த நாள் இவ்வளவு சீக்கிரம் வரும் என்று அவர் எண்ணவில்லை. ஏனெனில், வீட்டுக்குள் நுழைந்தால், அவருக்குச் சாப்பாடு போடுவது முதற்கொண்டு எல்லாக் காரியங்களையும் நல்ல நாயகி செய்தால்தான் அவருக்குத் திருப்தி வரும். இன்று நேர்மாருக இருக்கவே, கொஞ்சம் யோசித்தார். பசி வயிற்றைக் கிள்ளவே முதலில் அந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் செய்துகொண்டு, "எங்கே தங்கச்சி?" என்ருர் ஆவலோடு.

"யாரு; நல்ல நாயகியா? அங்கே ரூம்லே யிருக்கு!" என்ருள் அம்புஜம்.

அறையின் பக்கம் மகளைக் கூப்பிட்டுக் கொண்டே போனார் தீனதயாளன்.

பதில் வரவில்லை. அவர் மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது.

அறையில் வழக்கம் போல் இருக்க வேண்டிய விளக்கு— வெளிச்சமில்லை. ஆனல் கட்டில் அசைவது போன்ற சப்தம் மட்டும் கேட்டது. தீனதயாளரின் மனதில் ஓராயிரம் எண்ணங்கள் புகுந்து குடைந்தன. மனதைத் திடப்படுத்திக்கொண்டு அறைக்குள் நுழைந்தார்.

தட்டுத் தடுமாறிய வண்ணம் விளக்கு 'ஸ்விட்சைப்' போட்டார். அவருடைய மகள் நல்ல நாயகி கட்டிலில் தலைகுப்புறப் படுத்திருந்தாள். "நல்லா! நல்லா!! என்னம்மா...?" என்று அழைத்தபடியே அருகில் சென்ருர் தீனதயாளன். தேனைவிட அருமையான தன் மகள் தேம்பித் தேம்பித்அழுது கொண்டிருப்பது தெரிந்தது. நடுங்கியபடியே "நல்லா! என்னம்மா!" என்ருர்.

"அப்பா! ஒரு அயோக்கியன் ......"

"என்னம்மா சொல்றே?"

"இந்த ரூமுக்குள்ளே வந்தான். எங்கே நீங்க என்று கேட்டான். நான் பதில் சொல்லி முடிக்கிறதுக்குள்ளே பக்கத்திலே வந்தான் ......"

"பக்கத்திலே வந்து......"

"அதை ஏம்பா கேட்கிறீங்க? திடீர்னு என்மேலே பாய்ஞ்சு, என்னை அந்தக் கட்டிலிலே தள்ளி......"

"தள்ளி......?"

"மோசம் செய்யப் பார்த்தான்! ஒரு திமிரு திமிரிக்கிட்டு அங்கே கிடக்குப் பாருங்க விளக்குமாறு அதையெடுத்து நல்லா அடிஅடின்னு அடிச்சு விரட்டிட்டேன்......"

வீராங்கனையைப் போல நின்ருள் மகள். பெருமூச்சுவிட்டபடியே கேட்டார் தீனதயாளம்,

"யாரம்மா அந்தப் பய?"

"வேறு யாருமில்லேப்பா! எலெக்ஷனுக்காகப் பேச வந்திருக்கானே சோடா பாட்டில்......!"

"அவனு......?" என்று வியப்போடு கேட்டார் தீனதயாளன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வியப்பு மாறி, முகத்திலே சோகம் படர்ந்தது. அவரையறியாமலேயே இந்த வார்த்தைகள் வெளியே வந்தன:—"எலக்ஷனுக்கு இன்னும் நாலு நாள் தானேம்மா யிருக்கு! அதுக்குள்ளே காரியத்தையே கெடுத்திட்டியே!" ●


நாதசுரம்
ஆ... ஆ
ஜுரம்... ஊம்
வாள் வாள்!
நந்தா விளக்கு

# நந்தியூர் நரியப்பன்

அன்புள்ள நரியப்பருக்கு நந்தியப்பன் வணக்கம். நந்தியூர் நண்பர்கள் அனைவரும் நலமாக இருப்பார்கள் என்று நம்புகிறேன். வருகின்ற போட்டியிலும் நந்தியூரார் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறவேண்டுமென்று சாமுண்டீஸ்வரியை பிரார்த்திக்கின்றேன். என்ன இருந்தாலும் எனது நரியூர் மக்களுக்கு நந்தியூரார் மீது வருத்தம் இல்லாமல் இல்லை. அவர்களது அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமானவனாக; அவர்கள் வணங்கும் இரண்டாவது கடவுளாகப் பூஜிக்கப்பட்டவன் நான். நரியூரை ஒளியூராக மாற்றி நானிலமெங்கணும் தனித்ததோர் கீர்த்தியை அந்த ஊருக்குப் பெற்றுத் தந்தவன் என்ற முறையில் என்னிடம் அபார பக்தியை எனது ஊர் மக்கள் செலுத்தி வந்தனர். இன்றைக்கும் செலுத்தி வருகின்றனர். உலகிலேயுள்ள ஒப்பற்ற சோலைகளில் ஒன்று நரியூரில் இருப்பதும்; ஒளி சிந்தும் ஒய்யார மாளிகை ஒன்றுக்கு நான் உரியவனாக இருப்பதும் தாங்கள் அறியாததல்ல! கள்ளங்கபடமற்ற எனது ஊர் மக்களின் அன்புக்கும், பாசத்திற்கும் நான் என்றென்றும் கடமைப் பட்டவன் என்பதையும் தங்களிடம் பல முறை நான் கண்கலங்கக் கூறியிருக்கிறேன். என்னை மிக மேலான— கெளரவமிக்க— அந்தஸ்து நிறைந்த—ராஜீய மரியாதை மிகுந்த—இடத்திலே வைத்து வணங்குவதைத் தாங்கள் பெற்றுள்ள பாக்கியம் என்று இன்றைக்கும் எனது ஊர் மக்கள் கருதிக்கொண்டிருப்பதை உலகறியும்.

என்ன செய்வது; சூழ்ந்தடித்த விடுதலைப் புயலின் விளைவாக எழுந்த தேசீய எழுச்சியும்; அதற்குப் பிறகு வீசத்தொடங்கிய சுதந்திரத் தென்றலும்; எங்கள் நரியூரை மட்டும் விட்டுவிடுமா என்ன? இப்போதுள்ளவர்கள் கையில் அன்றைய நிலைமைகள் இருந்திருக்குமேயானால் எனக்குரிய ஆடம்பரந்ததும்பும் ராஜாங்க அந்தஸ்த்துக்கள் பறிக்கப்படாமல் இருந்திருக்கக் கூடும். ஆனால் அன்றிருந்த இரும்பு மனிதர் அதையெல்லாம் பொருட் படுத்தவில்லை. அவர் விழியசைப்பதற்கு முன்; நான் விஷயத்தைப் புரிந்துகொண்டு விட்டுக் கொடுக்க வேண்டியவைகள் அனைத்தையும் விட்டுக் கொடுத்து விட்டேன். ஒரேயடியாக என் உள்ளத்தைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காகவோ என்னவோ; எனக்குரிய இடத்திலேயே என்னை அமரவைத்து; அதன் மூலம் என்பால் பக்தி கொண்ட நரியூர் பிரஜைகளுக்குச் சிறிது மன ஆறுதலையும் சில ஆண்டுக் காலம் வழங்கி வந்தனர். ஆனால் அதற்குள் அவர்களுக்கு வந்த நெருக்கடி; என் இருப்பிடத்தை நரியூரிலிருந்து மாற்றி உங்கள் நந்தியூருக்கு வருமாறு வலியுறுத்திக் கூறி விட்டார்கள். இடமாற்றத்

மு. கருணாநிதி

தோடு இருந்தால்கூட ஏற்றுக்கொள்வதில் எனக்கு இவ்வளவு சங்கடம் வந்திருக்காது. நந்தியூரில் நடைபெறும் நாட்டாண்மைக்காரர்களின் நிர்வாகத்திற்கு நான் ஒப்பம் அளிப்பவராகவும்; மேற்பார்வையாளராகவும் இருக்க வேண்டுமாம். இந்தப்பதவியையே நந்தியூர் மக்கள் விரும்பவில்லை யென்றும்; இது ஆட்டுக்குத் தாடி போல ஒரு தேவையற்ற பதவியென்று அவர்கள் வெறுக்கிறார்கள் என்றும் நான் கேள்விப்பட்ட பிறகு; நானே அந்தப்பதவிக்கு வருவதை எவ்வளவு தர்ம சங்கடமாகக் கருதுவேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். தங்கப்பூண் போட்ட கைத்தடியை வாங்கிக்கொண்டு தடிக்கம்பு ஒன்றைக் கையிலே கொடுத்ததுபோல் ஆகி விட்டது என் கதை! அந்தத்தடிக் கம்பாவது பாம்பு அடிக்க உதவுமா என்றால்; நிச்சயம் உதவாது! உங்கள் நந்தியூரில் என் மீது திணிக்கப்பட்டுள்ள பதவிக்கு என்னதான் வேலை? ஆற்ற வேண்டிய பணிஎன்ன? வெறும் "ஒப்பக்காரர்" வேலை தான்!

நாட்டாண்மைக்காரர்கள். தங்களது குமாஸ்தாக்களைக் கொண்டு எழுதிக் கொடுப்பதை எழுந்து நின்று ஊர்ப் பிரமுகர்கள் மத்தியில் படிக்க வேண்டும். நான் படித்ததைப் பற்றி பிரமுகர்கள் பலர் நல்லது கெட்டதை எடுத்து விமரிசிப்பார்கள். எங்கள் நரியூரில் என் கருத்துக்களை யாரும் விமர்சித்ததே இல்லை. இப்பொழுது வந்துள்ள வேதனை; என் கருத்துக்களை அலசி ஆராய்ந்து விருப்பும் வெறுப்பும் தெரிவிக்கிறார்கள். அதிலேயே இரண்டாவது வேதனை; அந்த விமர்ச்சிக்கப்படுகிற கருத்துக்களாவது என் கருத்துக்களா என்றால்; அதுவுமில்லை. நாட்டாண்மைக் காரர்களின் சொந்தக் கருத்துக்கள்! அவர்கள் செய்கிற தவறுகளுக்கு, எதிர்த்துவரும் கணைகளைத் தாங்கிக் கொள்ளும் கேடயமாக நான் பயன்படுத்தப் படுகிறேன்.

அப்படிப் பழக்கப்பட்டவனா நான்? விடிந்து எழுந்தால் விதவிதமான உல்லாச விளையாட்டுக்கள்— மகிழ்ச்சிகரமான பொழுது போக்கு—ஆடாது அசையாத அமைதியான வாழ்க்கை—ஆண்டவனின் சிந்தனை—இப்படியொரு மனோகரமான அடிப்படையில் குழந்தை முதல் வளர்ந்து விட்ட எனக்கு; நான் சொல்வதே வேதம் என்று நவில்வதற்கு நரியூர் மக்கள் காத்திருக்கும்போது; நந்தியூர் நாட்டாண்மைக் காரர்களின் பாதுகாப்புக் கேடயமாக விளங்கும் பதவி எதற்காக?

பல லட்சமல்லவா வருமானம் என்பீர்கள்! லட்சங்களைக்காணாதவனா நான்? மகிஷாசூரியின் மகத்துவத்தால் மாணிக்கமும், வைடூரியமும், மரகதமும், கோமேதகமும், தங்கமும், வைரமும், பச்சையும், பவளமும், நான் படுத்துப் புரளும் பஞ்சணையின் கால்களில் மட்டுமல்ல; என் கால்கள் மிதிக்கும் பாதைகளிலும் பதிக்கப்பட்டுள்ளன என் அரண்மனையில்!

என்னமோ; ஒரு சூழ்நிலை இந்த 'ஒப்பக்காரர்' பதவிக்கு ஒப்புக் கொள்ள நேரிட்டுவிட்டது. ஏற்றுக் கொள்ளும்போதே; எனது எண்ணம்...... நாடாறுமாதம் காடாறு மாதம் என்று விக்கிரமாதித்த மகாராஜன் ஆண்டான் என்பார்களே; அது போல நானும் இந்த ஒப்பக்காரப்பதவியில் ஒரு வாரம் இருந்தால் ஒன்பது வாரம் வேறு யாரையாவது உட்கார வைத்துவிட்டு ஊர் சுற்றக் கிளம்பி விடுவது என்று தீர்மானித்துக் கொண்டேன். அப்படி வேறு யாரை உட்கார வைப்பது என யோசிக்கும்போது தங்கள் நினைவுதான் எனக்கு வந்தது. ஒப்பக்காரர் பதவியில் உட்காருவதற்குத் தகுதி படைத்த இன்னொரு ஆள்; உள்ளூர்ப் பஞ்சாயத்துக்காரர்தான் என்றும் நந்தியூரில் ஒரு முறை இருக்கிறதல்லவா? அந்த முறைப்படித் தங்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்க முடிவு செய்து விட்டேன். ஒப்பக்காரருக்கு எப்போதாவது தவிர்க்கமுடியாத அளவுக்குத் தடங்கல் ஏற்பட்டாலும்; உடல் நலிவு ஏற்பட்டாலும்; அல்லது காலமாகி விட்டாலும்; அப்படிப்பட்ட சங்கடமான சூழ்நிலையில்தான் பஞ்சாயத்துக்காரர் அந்தப் பதவியில் சிலநாள் அமர்ந்திருப்பது வழக்கம். ஆனால்; நான் அந்த வழக்கத்தை மாற்றி; தங்களையே ஒப்பக்காரர் என்றுஊரார் சொல்லுமளவுக்குச் செய்துவிட்டு; எனது பழைய பட்டத்தை, மக்கள் மறந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ளப் போகிறேன். தாங்கள் இதனை மறுக்கமாட்டீர்கள் என்று திடமாக நம்புகிறேன். இந்த விஷயத்தில் என்னை யாரும் குறை சொல்ல முடியாது. நந்தியூர் நாட்டாண்மைக்காரர்களுக்கு இந்த 'விக்கிரமாதித்த முறை' பிடிக்காமல் இருக்குமேயானால்; அவர்கள் புத்திசாலித்தனமாக ஒப்பக்காரப் பதவியையே ஒழித்துக் கட்டிவிட்டு நல்ல பெயர் வாங்கிக் கொள்ளலாம். அதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை யென்றால்; நான் சத்தியமாகச் சொல்லுகிறேன்; அந்த நாட்டாண்மைக்காரர்கள் எழுதிக் கொடுப்பதை ஊரார் முன்னே படித்துக் காட்டுவதற்கு நானல்ல ஆள் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளட்டும். இந்த என் முடிவு, தங்களுக்கு எல்லையற்ற பூரிப்பை அளிக்குமேயானால் நான் புன்னகை புரிவேன்.

அன்புள்ள

**நந்தியப்பன்.**

# நரியூர் நந்தியப்பன்

## மு. கருணாநிதி

பெருமை மிகுந்த நந்தியப்பருக்கு; நந்தியூர் பஞ்சாயத்துக்கார நரியப்பன் மிக்க வணக்கம். தங்களின் புனிதக் கரம் வரைந்த பொன் மடல் கிடைக்கப் பெற்றுப் புளகாங்கிதமுற்றேன். தங்களின் முடிவு; அரசியல் புலமை படைத்த அனைவராலும் போற்றத் தக்கதே யாகும். தாங்களோ; கோடி சூரியப்பிரகாசமுள்ள வைரவைடூரியங்களைக்கூடத் துச்சமென மதிக்கத் தக்க குபேர சம்பத்து வாய்க்கப் பெற்றவர்கள். தங்களுக்கு வீசப்படும் ஆலவட்டம் ஒன்றின்விலை; இங்குள்ள நாட்டாண்மைக்காரர் வைத்துள்ள காரின் விலைக்குச் சமானமாகும். தரணி வாழ் மக்கள் எலாம்; தங்களின் தர்பார்மண்டபத்துக்கோலாகலக் காட்சி காணத் தவங்கிடப்பர். எரிகின்ற ஒளிவிளக்கோ; வானின்று வீழ்ந்துவிட்ட விண்மீனின் கூட்டமோ என வியக்கத்தக்க அளவில் எங்கு நோக்கினும் தங்கள் நகரில் தகதகாயம் காணலாம்!

காலத்தின் கோலம்; இத்தனை இருந்தும் இருக்க வேண்டிய அந்தஸ்து இல்லாமல் பறிக்கப்பட்டுவிட்டது. அதனுல் என்ன ; காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ? கறைச்சேற்ருல் தாமரையின் வாசம் போமோ? காலத்தின் சுழற்சியால்; கடவுள் பேரில் தங்களைக் கருதிடும் மக்களின் பேருள்ளத்திலிருந்து தங்களை யார்தான் அகற்ற முடியும்?

நரியூரின் நாயகரே! நான்பல முறை எண்ணியதுண்டு; ஏங்கியதுண்டு; நரியூரில் தங்கள் பரிபாலனத்தின் கீழ் ஒரு குடிமகனுய் இருந்திட வேண்டுமென்று! அதற்குத்தெய்வானுகூலம் எனக்குச் சித்திக்கவில்லை. இன்றே தாங்கள் நந்தியூர் வந்திறங்கிவிட்டீர்கள். நந்தியூரின் சிறப்புக்களையும்; இங்கு பரிபாலனம் புரியும் நாட்டாண்மைக்காரர்களின் பெருமைகளையும் தாங்கள் உணர்ந்தே யிருப்பீர்கள். இந்த ஊரில் நான் எத்தனை பஞ்சாயத்துக்களை மிக்க திறம்பட நடத்தி யிருக்கிறேன் என்ற பட்டியலையும் இந்த மடலுடன் அனுப்பியுள்ளேன். நாட்டாண்மைக்காரர்களுக்கும் ஊர்ப்பொது மக்களுக்கும் ஏற்படுகின்ற வழக்கைத்தவிர; மற்ற எல்லா வழக்குகளிலும் நடுநிலைமையான நல்ல தீர்ப்புக்களையே நான் வழங்கியிருக்கிறேன். நாட்டாண்மைக்காரர்கள் பக்கம் நான் நின்று; நியாயத்தை எதிர்த்திட வேண்டிய பல கட்டங்கள் எனக்கு விலக்க முடியாதவைகளாகி விட்டன. இனி; தாங்கள் வேறு தற்காலிக ஒப்பக்காரர் பதவியை எனக்கு வழங்கிவிட்டால் என்பாடு மிகச் சிரமத்திற்குரியதாகிவிடும். பழைய காலத்து நாடகங்களில் முன் மாதகி;

பின் கர்ணகி என்று ஒரே ஆளே இரண்டு வேடங்களைப் போட்டுக்கொள்வார். அது; ஆண்கள், பெண்வேடங்களைப் போட்டுக் கொள்ளும் காலம்! இயற்கையான அழகு இருக்காது! எல்லாம் செயற்கையான அழகு!

அமைக்க வேண்டியதை அமைத்து—மறைக்க வேண்டியதை மறைத்து—அரிதாரம் பூசிக்கொண்டு அரங்கில் வந்து தோன்றுவார்கள். அஃதே போல்தான் என் இரு பதவிகளுமே இயற்கைக்கு விரோதமான போலியாகி விடக்கூடும். நாடகத்து மாதவியும் கண்ணகியும் இருவேறு பண்புகளைக் கொண்டவர்களாக— ஒருவரையொருவர் பகைத்துப் பழிப்பவர்களாக இருப்பர். அதைப் போலத்தான் என் "பஞ்சாயத்தார்வேலை. "ஒப்பக்காரர்" ஒப்பமளிக்கும் பலவிஷயங்களைப் பகைத்துப் பழிப்பதாயிருக்கும். இரண்டு பதவியும் மாறி மாறி எனக்குச் சகடு போல் சுழன்று வந்து கொண்டிருக்குமேயானால்; என் முடிவை நானே எதிர்த்துத் தீர்ப்பு வழங்க வேண்டிய நிலைமைகள் உருவாகும்.

பிரபூ! தாங்கள் 'பராசக்தி' என்ற ஒரு படம் பார்த்திருக்க மாட்டீர்கள். அதில் ஒரு சுவையான சம்பவம்! குணசேகரன் என்ற பைத்தியக்காரன்; ஒரு சுமைதாங்கிக் கல்லின் அருகே இருந்து கொண்டு சில விஷயம் பொதிந்த வேடிக்கைச் சேட்டைகளைச் செய்வான்.

"மந்திரி! நமது மாநகர் தன்னில் மக்கள் எல்லாம் சுகமா?" —என்று ராஜாபோல நினைத்துக்கொண்டு கேட்பான். அதற்குப் பதில் கூற மந்திரி வேண்டுமே! அவனே கீழே வந்து நின்று மந்திரியாகவும் நடித்து; "மகராஜா! மக்கள் எல்லாம் பட்டினி கிடந்து சாகிறார்கள்!" என்று பதில் சொல்வான்.

நான் பஞ்சாயத்தார் பதவியையும் ஒப்பக்காரர் பதவியையும் வகிப்பது அது போன்ற பைத்தியக்காரக் கூத்தாகத்தான் இருக்கும். ஆனால்; தங்கள் முடங்கல் கண்ட பிறகு நான் ஒருமுடிவு செய்து கொண்டேன். ஏற்கனவே; சரிபாதி நாட்டாண்மைக்காரர் பக்கம் இருந்தேன்- இப்போது முழுக்க முழுக்க நாட்டாண்மைக்காரர் பக்கம் வந்து விடுவது என்பதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை.

தங்கள் கௌரவத்திற்கும்—அந்தஸ்துக்கும்—இந்த ஒப்பக்காரர் பத்வி; பொன் வைத்த இடத்தில் பூவைத்தது போல! எனக்கோ; இது பொன் பூ! புகழ்ப்பூ! நாட்டாண்மைக்காரர் எழுதியதைத் தாங்கள் படிப்பதென்பது தங்களால் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றுதான். நான் அதனைத் தங்களுக்காகச் செய்கிற தியாகமாகக் கருதாமல்; எனக்கு வந்த பெருவாய்ப்பாகக் கருதித்தான் ஏற்றுக் கொள்கிறேன். மடலில் தாங்கள் உறுதியளித்துள்ளபடி; ஒப்பக்காரர் பதவியில் ஒருவாரமும்—ஊர் சுற்றுவது ஒன்பது வாரமும் என்ற முறையைக் கடைப்பிடிப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்படிச் செய்வீர்களேயானால்; நானும் என் பந்து மித்திரர்களுடன் பல்வேறு க்ஷேத்திரங்களை சுற்றிப் பார்த்து பகவத் அனுக்கிரகத்தைத் தங்களுக்கும் சேர்த்துப் பெறுவதற்கு அனுகூலமாயிருக்கும். இறுதியாக ஒன்று; இது தேவையற்ற பதவியென்று தாங்களும் கருதுவதாகத் தெரிகிறது. இந்த நந்தியூரில் தேவையற்ற பதவி; இது மட்டுந்தானா? எத்தனையோ உண்டு! பத்தோடு பதினொன்றாக இதுவும் இருந்து விட்டுப் போகட்டுமே; என்னைப் போன்றவர்கள் அனுபவிக்க வேண்டாமா?

தங்கள் நன்றியுள்ள

**நரியப்பன்.**

## பழமொழி-புதுஉரை !




ஊருக்கு உபதேசம் செய்யும பல்லி, கழுநீர் பானையில் விழுமாம் துள்ளி.

# தை பிறந்தது; வழி பிறக்குமா?



என்.வி.நடராசன். எம்.எல்.சி.

பொங்கல் திருநாள்! தமிழர்களின் தேசியத் திருநாள்! அறுவடையின் பயனை அறுசுவை உண்டி மூலம் சுற்றம் சூழ சுவைக்கும் நன்னாள்! தமிழ்நாட்டின் நாகரிகம், பண்பாடு ஆகியவைகள் ஒளிவீசும் பெருமைக்குரிய நாள்!

தமிழர்களின் தன்னிகரற்ற இந்தத் திருநாளில், தோழர்கள் ஒருவரையொருவர் சந்தித்து வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வார்கள். குழந்தைகள் தங்களின் பொன்னான வாய் திறந்து பெற்றோர்களைப் புன்னகையால் பூரிக்கச் செய்வார்கள். புதுமணத் தம்பதிகளும், தலைப்பொங்கல் கொண்டாடும் தம்பதிகளும் தங்களுக்குற்ற வாழ்க்கையின் பெருநாளாக எண்ணி களிப்படைவார்கள். தமிழகத்தின் நாட்டுப்பற்று கொண்ட தலைவர்கள் நற்சேதி வழங்குவார்கள். உழவர் பெருமக்கள் உழைப்பின் பயனை எண்ணியெண்ணி உள்ளம் பூரிப்பார்கள்! வறுமையால் சூழப்பட்டு வாழ்க்கையில் அல்லல்படுவோர்கூட பொங்கற் புதுநாளில் புதுமுகம் காட்டுவார்கள்.

ஆனாலும், இந்த ஆண்டுத் திருநாளில் சில இல்லங்கள் மட்டும் ஒளி விளக்கை இழந்து இருள் சூழ்ந்திருக்கும்! ஆம்! இந்திய எல்லையில் ஆக்ரமிப்பு நடாத்திய அக்கிரமக்காரர்களின் ஆணவத்தைத் தகர்த்தெறிய, தன்மானப் போரில் ஈடுபட்டு, தங்களின் இன்னுயிரை அர்ப்பணித்த வீரர்களின் இல்லங்கள் ஒளி இழந்துதான் இருக்கும்!

•

இந்திய மண் அந்நியனுக்கு அடிமையாதல் கூடாது என்ற கடமை உணர்ச்சியுடன் காட்டிய வீரம், உறுதி, ஆற்றல் அனைத்தையும் உலகம் புகழ்கிறது. தங்களது குடும்பங்கள் ஒளி இழந்தாலும், இந்தியத் துணைக்கண்டத்தின் தன்மானத்திற்கு ஊறு நேரக்கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்திற்காக தங்களின் வாழ்க்கை இன்பத்தையே தியாகம் செய்த மாவீரர்களுக்கு இந்திய மக்கள் ஒவ்வொருவரும் வணக்கம் செலுத்தவும், அக்குடும்பங்களில் மீண்டும் ஒளி வீச வேண்டும் என்ற எண்ணத்தை நமது உள்ளங்களிலே உருவாக்கிக்கொள்ளவும் வேண்டியது நமது முதற் கடமையாகும்.

அந்நிய ஆக்ரமிப்பிலிருந்து இந்திய மண்ணை மீட்ட வீரப் போரில் தமிழ்நாட்டு வீரர்கள் ஆற்றிய அரும்பணி குறிப்பிடத் தக்கதாகும். இதைப் பற்றி இந்தியப் பிரதமர் சாஸ்திரி அவர்களே புகழ்ந்து பேசியிருக்கிறார்கள் என்பதால் நான் அதிகம் விளக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

நமது இராணுவ வீரர்கள் ஆற்றிய மகத்தான கடமையோடு, இந்தியாவை எதிர்நோக்கியிருந்த ஆபத்து அறவே நீங்கிவிட்டதாயென்றால் — இல்லை! ஆக்ரமிப்பாளர்களின் போர் வெறி பல்வேறு வழிகளில் தலைவிரி கோலமாகக் காட்சியளித்து வருகிறது. அந்நியர்களின் போர் வெறியை அறவே தகர்த்தெறிந்தாலன்றி உழவர் பெருமக்களின்—ஏழை நடுத்தர மக்களின் வாழ்வில் நிரந்தரமான ஒளி வீசுவதற்கில்லை!

இந்தியா (பாகிஸ்தானாக விளங்கும் பகுதியும் சேர்ந்து) பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திற்கு அடிமைப்பட்டிருந்த நிலை மாறி சுதந்திர நாடாக விளங்குகின்றது. இந்தியாவும் பாகிஸ்தானும் எவ்வளவுக்கெவ்வளவு நேச நாடுகளாக வாழ்கின்றதோ அந்த அளவுக்கு இரு நாடுகளும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடையும். இரு நாடுகளும் பகைமை கொண்டிருப்பது இரு நாடுகளின் எதிர்கால நல்வாழ்வுக்கு முட்டுக்கட்டையென்பது மட்டுமல்லாமல், மற்ற நாடுகளுக்கு, குறிப்பாக வல்லரசுகளின் ஆசாபாசங்

களுககுப் படிக்கட்டுக ளா க அ மை ந் து வி ட க் கூடும். எனவே இரு நாடுகளும் தோழமையுடன் இயங்கி வர வேண்டியது இன்றியமையாத தாகும்.

இந்த உண்மையை இந்தியா மதித்து, உணர்ந்து நடப் பதைப் போல பாகிஸ்தானும் உணர்ந்து நடந்திருக்குமானல் பாகிஸ்தான் மக்கள் வாழ்க் கையில் எவ்வளவோ நல் வாய்ப்புகளை பெற்றிருக்கக் கூடும். ஆனல் பாகிஸ்தானில் அவ்வித சனநாயகப் பண்பை வளரச் செய்யும் அரசியல் உருவாகவில்லை. உருவாகி யிருந்தால், பாகிஸ்தான் இந்தி யாவுடன் போர் தொடுக்க வேண்டிய விரும்பத்தகாத நிலை ஏற்பட்டிருக்காதல்லவா? வீம்பு – வீராப்பு காரணமாக வல்லரசுகள் கூட சில சந்தர்ப் பங்களில் தங்களின் செல் வாக்கை இழக்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கின் றன. உலக வரலாறுகள் இதனை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆனல் இந்த விவேகத்தை மதித்து நடக் கும் மனவளம் சிறிய நாடான பா கி ஸ் தா னு க் கு அதன் அதிபர் அயூப்கானுக்கு ஏற் படாதது பரிதாபத்திற்குரிய தாகும்.

சென்றவைகள் சென்ற வைகளாகவே யிருக்கட்டும். ஆனல் அந்தச் சம்பவங்கள் எதிர்கால நல்வாழ்வுக்கு பாடமாக அமையட்டும்! பொங்கற் பு து ந ா ளி ன் போது உழவர் பெருமக்க ளும் ஏழை–நடுத்தர மக்க ளும் கொள்ளும் உற்சாக மும் உணர்வும் நிரந்தரமாக அமைய வேண்டும் என்று இதயப் பூர்வமாக ஆசைப் படுகிருேம். மதம், சாதி, வகுப்பு என்ற பேதா பேதங்களை யெல்லாம் கடந்து உலக மக்கள் அனை வராலும் பொதுவாகக் கொண்டாடப்படும் அறு வடை விழாவின் அடிப் படைத்தத்துவம் நீடித்து நிலைபெற, உலகில் போர் வெறி அறவே அழிந்து பட வேண்டும்.

அவ்வித மகத்தான பேற் றினை, உலக நாடுகளும்--மக்க ளும் பெறுவதற்கு, இந்தியா-- பாகிஸ்தான் ஆகிய இருநாடு நாடுகளும் முன்னேடிகளாக வி ள ங் க வேண்டுமென்றும் ஆசைப்படுகின்ருேம், அதற்கு இந்தியா நேசக்கரம் நீட்டு கிறது. ஆனல் பாகிஸ்தான் அந்த நேசத்தை எவ்வாறு பயன் படுத்தப் போகிறதோ என் ப து கேள்விக்குறியாக அமைந்திருக்கிறது.

அறிஞர் அண்ணு அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதைப் போல "காஷ்மீர் பிரச்சினை" என்பதாக இல்லாத ஒன்றை வலியுறுத்திக் கொ ண் டே யிருப்பதைவிட பாகிஸ்தா னுக்கும் இ ந் தி யா வுக்கும் உள்ள மற்ற பிரச்சினைகளைப் பற்றி மனமார விவாதித்து நட்புறவு கொள்ள பாகிஸ் தான் அதிபர் தீவிரமாக முனைய வேண்டும்.

**அவ்வாறு முனைந்தால் பாகிஸ்தானில் மட்டுமல் லாது உலக நாடுகள் அனைத் திலும் சூழ்ந்துள்ள போர் வெறி என்ற இருள் நீங்கி, தோழமை, அமைதி, நல் வாழ்வு என்ற ஒளி வீசும் என்ற நம்பிக்கை உணர் வோடு, நமது நல்வாழ்த்துக் களை அனைவருக்கும் வழங்கு கிருேம். தை பிறந்தது — வழி பிறக்கட்டும்!**

## பழமொழி-புதுஉரை!




காய்த்தமரம் கல் அடிபடும்

# முதல் இரவு




பச்சைப் பந்தலுக்கடியில் வேதியர் ஓதும் மந்திர ஒலிக்கிடையில் பிடி இடையாளின் கழுத்தில் மஞ்சள் கயிற்றில் தொங்கிக் கிடக்கும் தாலியைக் கட்டிய விநாடி முதல் கணவன் மனைவி ஆகிவிட்டனர். நாணத்தால் தலை கவிழ்ந்திருக்கும் தங்கச் சிலையின் முகத்தைக் காண அவன் துடிதுடித்தான். ஆயினும் அந்த முழு நிலவைக் காண முடியவில்லை. 'தன் துணைவி' அழகி என்பதைத் தெரிந்து கொண்டான். மகிழ்ச்சி பொங்கவீற்றிருந்தான். 'இரவு வர இன்னும் எத்தனை மணி இருக்கிற' தென்று தன் விரல் விட்டு எண்ணிப் பார்த்தான். 'அப்போது தப்ப முடியாதே' என்று அவன் நெஞ்சம் கூற ஆவலை அடக்கிக்கொண்டான்.

இரவு......ஆமாம் அது அவர்களுக்கு முதல் இரவு! இன்பத் துடிப்பால் பொங்கி வழியும் இன்ப நினைவுகளை அள்ளிப் பருகி அக மகிழ. இதயத்தே தேக்கி வைத்துள்ள

**ப. உ. சண்முகம்** எம். எல். ஏ.



கற்பனைச் சுகங்களைக் கண்டு களிக்க சங்கர் காத்துக் கொண்டிருந்தான். பயம் கலந்த இன்ப நினைவுகளோடு சாந்தாவும் ஏங்கிக் கொண்டிருந்தாள்.

'என்னென்ன கேட்கலாம்?' அவன்?

'என்னென்ன கேட்பார்?' அவள்?

கற்பனை நினைவுகள் அவை தரும் அற்புத சுகங்கள்! சிந்தனை வெள்ளம்! அதனல் வரும் இன்பம் துள்ளும்! இப்படி இருவர் உள்ளத்திலும் மாறி மாறி தேன் ஊற்றுத் தோன்றுவதும் மறைவதுமாய் இருந்தது. கற்கண்டு நினைவுகளும் கற்பனைக் கனவுகளும் அவர்கள் உடலைப் புல்லரித்துக் கொண்டிருந்தது. தேன் மாரி பெய்யும் இரவுக்காக காத்திருந்தனர். வந்து விட்டது!

மலர்ச்சரங்களால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சம் காத்திருக்க அவன் கண்டான்.

நறுமணம் கமழும் புகையை விட்டவாறே தன்னைத்தானே எரித்துக் கொண்டு சாம்பலாகிக் கொண்டிருக்கும் ஊதுபத்தி அவன் காதல் போதைக்கு தூபமிட்டவன்ன மிருந்தது. பழத்தட்டைப் பார்த்தான். 'உங்கள் கண்களுக்கு இன்று எங்களைக் கண்டால் பிடிக்குமா?' என்று பரிதாபமாகக் கேட்பது போல் இருந்தது! வானத்தைப் பார்த்தான். 'நான் போகிறேன். அதோ அவள் வந்து விட்டாள் அவளையே பார்த்துக் கொண்டிருங்கள்' என்று நிலவு சொல்லி விட்டு கோபத்தோடு மேகத்தில் மறைவது போல் தோன்றியது, திரும்பிப்பார்த்தான். தங்க ரதம் போல் தன்மனைவி சாந்தா குனிந்தவாறே நின்றிக்கக் கண்டான். அவள் வந்த வாயல் கதவை யாரோ மூடித் தாளிட்டுக் கொண்டனர்.

சங்கர் நெருங்கினன். கரு நாகம் போன்ற கூந்தலை மெள்ளத் தடவினன். "சாந்தா" என்று அவன் உதடுகள் மெல்ல முணுமுணுத்தது... மஞ்சள் பூசிவைத்தாற்போல் மேனி அழகு பூண்ட பூவையாளின் கையைப்பிடித்தான். அவள் உடலில் லேசான அதிர்ச்சி தோன்றி இவன் உடலில் பாய்ந்தது. மெள்ள பூவையாளின் முகத்தை நிமிர்த்தினன். நாணம் கலந்த புன்னகை அவள் இதழ்களில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. ஆனல் ...அவன் நெஞ்சில் ஏதோ பயம் தாக்கியது. அவள் முகத்தை மீண்டும் தூக்கினன், உற்றுப் பார்த்தான். ...ஏதோ எண்ணம் அவனை உலுக்கியது. உற்றுப் பார்த்தான்...மீண்டும் ...மீண்டும் பார்த்தான்! அவன் கண்களை அவனல் நம்பமுடியவில்லை! விட்டுவிலகினன், எட்டிச் சென்றான். அவள் கற்சிலையாளுள்! அவன் அதிர்ச்சியால் அசையாது நின்று விட்டான். அவன் நெஞ்சைப் பிளக்கும் சேதியொன்று அவன் நினைவிற்கு வந்தது.

மதுரை பார்சல் ரயில் வண்டியில் சங்கர் டிக்கட் பரிசோதித்துக்கொண்டு வந்தான். இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏறினன். அங்கு ஒரு வாலிபனும் ஒரு பருவ மங்கையும் சிரித்துக் கொண்டிருந்தனர். இவனைக்கண்டதும் அந்த வாலிபன் இரண்டு டிக்கட்டுகளை எடுத்துத் தந்தான். சங்கர் அவைகளின் பின்புறம் கையெழுத்து போட்டுகொடுத்தான். வண்டி ஓடிக்கொண்டிருந்ததால் சிறிது நேரம் காலயாக இருந்த எதிர் சீட்டில் உட்கார்ந்தான். வெட்டிக் கதைகள் பேசுவதும் வெடிச் சிரிப்புச் சிரிப்பதுமாய் இருந்த இளஞ்சோடியைப் பார்த்தான். அவள் கல்லூரி மாணவி போல் தெரிந்தது. 'உலகம் எப்படிக் கெட்டு விட்டது' என்று அவன் நெஞ்சில் தோன்றியது. வண்டி விழுப்புரம் வந்தது. சங்கர் இறங்கினன். 'ஐஸ்கிரீம்' சாப்பிடலாமென்று சென்றான். வாங்கி 'ஸ்பூனில்' அள்ளி வாயில் வைப்பதற்குள் மீண்டும் சிரிப்பொலி கேட்டுத்திருப்பிப்பார்த்தான். அவர்கள் இருவரும் வருவதைப் பார்த்தான். அவர்களும் அங்குதான் வந்தனர். ஐஸ்கிரீம் வாங்கினர். சாப்பிட்டனர். போய் விட்டனர். அந்த வாலிபனேடு சிரித்து விளையாடிக் கொண்டிருந்த அதே மங்கை'...ஆம் அதே ஆரணங்குதான்...அவளேதான் இன்று இவன் எதிரில்! தீயில் புழுவானன்! வேதனை...வெட்கம் அவனை உலுக்கியது. துடித்தான். இதயமே வெடித்து விடும்போன்ற உணர்ச்சி அவனை நிலை தடுமாறச் செய்தது, கிறுகிறுவென்று தலை–சுற்றுவது போன்ற உணர்ச்சி தோன்றியது ... வேர்த்தது ... சட்டை நனைந்து விட்டது. லேசான நடுக்கம் தோன்றியது, அவ்வளவுதான்...கீழே சாய்ந்துவிட்டான்! சாந்தா அலறினள்... கதவைத் தடதட வென்று தட்டினள், கதவைத் திறந்தார்கள் ...நடந்ததைச் சொன்னள்! டாக்டர் வரவழைக்கப் பட்டார்.

கண்ணீரால் தன் உடலைக் கழுவிக் கொண்டிருந்தாள் சாந்தா! மயக்கமுற்ற நிலையிலும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான் சங்கர்!

அன்றுமுதல் அவன் ஊமையாகிவிட்டான். அவள் அவனுக்கு எட்டியானள்! உலகோ அவனுக்கு வெட்டியாகத் தோன்றியது, மனைவியைத்

திரும்பியும் பார்ப்பதில்லை. சங்கர் ஒரு இயந்திரமாக மாறி விட்டான்.

நாட்கள் ஓடின. அவன் நெஞ்சம் எரிமலையாகிக் குமுறிக் கொண்டிருந்தது. வெடிக்கும் நிலை ஏற்படும்போது கண்ணீர்மழை பொழிவான். தணல் சற்றுத் தணியும். வெளியில் சொன்னால் வெட்கம். சொல்லாவிட்டாலோ நெஞ்சை அடைக்கும் துக்கம். நினைத்தால் கண்ணீர்! அதை நிறுத்தினால் நீள்மூச்சு! திக்குத்தெரியாத காட்டில் தவிக்கும் தனி மான்போல் அவன் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் தன் வீட்டில் சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டிருந்தான். அவன் மனம் குழம்பியபடி இருந்தது. அந்த நேரம் யாரோ வரும் காலடிசப்தம் கேட்டு வாசற்படியைப் பார்த்தான். திடுக்கிட்டான். வந்தஆள் மெள்ள அடிவைத்து தலையை நீட்டி எட்டிப் பார்த்த வண்ணம் வந்தான். உற்றுப் பார்த்தான் சங்கர் ஆம்-அவனே தான்! யாரை சந்தேகித்துக் கொண்டிருந்தானோ அவனே தான்! துள்ளி எழுந்தான் சங்கர்.

"யார் நீ?" என்றான்?

"சாந்தா..."

"சாந்தா!...பார்க்க வந்தாயா? அல்லது அழைத்துப் போக வந்தாயா?...சாந்தா... என்ன தைரியம் உனக்கு?"... என்று கோபமாக பார்த்தான்.

"என்ன சொல்கிறீர்கள்?... திருமணத்திற்கு வரவில்லையே என்ற கோபமா?...என்ன செய்யட்டும் லீவு கிடைக்கவில்லை" என்று தன் கையிலிருந்த பெட்டியைக் கீழேவைத்தான். அவ்வளவுதான் பெட்டியை எட்டி உதைத்தான் சங்கர்.

'தூக்குடா...என்னை என்ன நினைச்சுக்கிட்டே...?' என்று சப்தமிட்டான்.

உள்ளே இருந்து சாந்தா ஓடி வந்தாள்.

'என்ன இது?' என்றாள்.

'வாடி அம்மா வா...யார் வந்திருக்கிறது பார்த்தியா?... பார்...நல்லா பார்...கடைசித் தரமாப் பார்த்து உன் ஆசையைத் தீர்த்துக்கோ"

'அத்தான்...என்ன சொல்றீங்க...ஏன் இப்படி பார்க்கிறீங்க'

'எப்படிப் பார்க்கிறேன்.அவனைப்போல குளுகுளுன்னு பார்க்கலேங்கிறியா? ... பிடிக்காதடி...என்பார்வைஎப்படிப் பிடிக்கும் உனக்கு-நடத்தை கெட்ட நாயே'

'அத்தான்!...'

'அத்தான் ... மறுபடியும் சொல்லாதே...சொன்னேமறு வினாடி உன்னை பரலோகம் அனுப்பிச்சுடுவேன்..."

'என்ன நடந்தது ?...ஏன் அவபேர்ல இப்படிக் கோவிச்சிக்கிறீங்கோ?' என்றான் வந்தவன்.

'சபாஷ்!...சிபாரிசா ... அப்படிவா...அவளைத் கிட்டினா உன்னால தாங்க முடியவில்லே ...இல்லே?' ... காதல் என்ன சாதாரண மானதா?'

'காதலா?...என்ன உளறுகிறீர்கள்'

'நானாடா உளர்ரேன்...என்னைப் பார்த்து சொல்றா நானா உளர்ரேன்"

'அத்தான்...இவர் என் அண்ணன்"

'அண்ணன்...ச...பா... ஷ்! நாகரீகஉலகத்திலே கள்ளக் காதலனுக்குத் தரும் புதுப் பெயரா?"

'ஐயோ...அத்தான் உண்மையிலேயே இவர் என் அண்ணன்தான். இவர்தான் இராணுவத்தில் 'பைலட்'ஆபீசராக வேலை செய்பவர். பாகிஸ்தான் சண்டை காரணமாக இவருக்கு லீவ் கிடைக்கவில்லை. அதனால் தான் நம் திருமணத்துக்கு வரவில்லை" என்றாள் சாந்தா.

சங்கர் சிலையாகி விட்டான். சிறிது நேரம் கழிந்தது... உண்மையாகவா என்று வாய் முணுமுணுத்தது.

'சாந்தா' என்று கூவியவாறே அவளைத்தூக்கி மார்பில் போட்டுக் கொண்டான். கண்ணீர் மழையால் அவளை நனைத்தான்.

'சாந்தா என்னை மன்னித்து விடு சாந்தா" என்று கெஞ்சினான். திரும்பிப் பார்த்தான். வந்தஆளைக் காணோம். வாசற்படிக்கு வெளியே போய்பார்த்தான். தூசியைக் கிளப்பி விட்டவாறே ஒரு கார் பறந்து கொண்டிருந்தது.

தலையைத் தொங்கவிட்டுக் கொண்டே உள்ளே வந்தான். இரண்டு 'பேக்கட்டுகள்' மேசை மீது இருந்தது. ஒன்றின்மேல் "தங்கைக்கு" என்றும்—மற்றொன்றின் மேல் 'மைத்துனருக்கு' என்றும் எழுதியிருந்தது. சாந்தாவைப் பார்த்தான்—அவள் கண்ணீர்தான் வழிந்ததே யொழிய வார்த்தை பேதும் வரவில்லை.

மணிமேகலையில் ஒரு கருத்து: மனிதன் ஒவ்வொரு பருவத்திலும் இறந்து பிழைக்கிறான், இளைஞன் வயோதிகன் ஆகிறபோது இளைய மனிதன் இறக்கிறான். புதியதொரு மனிதன் பிறக்கிறான்.

இப்படிப்பல நேரங்களில்—பருவ மாற்றங்களில் பல குறிக்கோள்கள் வந்து மோதலாம்.

பல குறிக்கோள்கள் இருந்தாலும் அதில் எது பலருக்குப் பயன்படும் குறிக்கோள் என்று தேர்ந்தெடுத்து — மற்ற குறிக்கோள்களை ஒத்திவைக்க வேண்டும்.

—அறிஞர் அண்ணா

# குப்பைத் தொட்டி

வீதியோரத்தில் அந்த மாடி வீட்டுக்குக் கீழேதான் நான்நீண்ட நாட்களாகத் தவம் செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய தவம், எந்தக் கடவுளையும் வரவழைத்து அவர்களிடம் ஏதாவது அபூர்வமான வரங்கள் வாங்கவேண்டுமென்பதற்காக அல்ல! அகிலத்தைக் கட்டியாள வேண்டுமென்று அரசர்கள் பலர் தவமிருந்ததும்; தன்னை அழிப்பார் யாருமிலர் என்ற நிலை ஏற்பட வேண்டுமென்று அசுரர்கள் கொடிய தவங்களை மேற்கொண்டதும்; சாபங்களின் மூலம் பகைவர்களைப் பழிவாங்குகிற வரங்களைப் பெறுவதற்கு முனிவர்கள் தவத்தில் முனைந்ததும் எனக்கு நேற்றுத்தான் விவரமாகத் தெரிந்தது. தவம் என்றால் ஒரே நினைவுடன் வேறு எதைப்பற்றிய சிந்தனையும் இல்லாமல்- ஒரேஇடத்தில் அமர்ந்து அன்ன ஆகாரமின்றி ஆண்டவனைக் காணத்துடிப்பது; அவன் வந்தபிறகு தேவையைக் கேட்பது! என்னைப் பொருத்த வரையில் ஒரே இடத்தில் அசையாமல் அமர்ந்திருப்பது ஒன்றைத்தவிர, தவத்துக்குரிய வேறு அடையாளங்கள் எதுவுமே இல்லை.

அப்படித் தவத்தில் ஈடுபட்டவர்களே கூட ஒரே நிலையில் நினைவைச் செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். யார்; எங்கே; எப்போது தவம் செய்கிறார்கள் என்று அலைந்து திரிந்து கண்டுபிடித்து; அவர்களது தவத்தைக் கெடுப்பதற்காகவே தேவலோகத்தில் ஒரு பெண்கள் படையே தயாராக இருந்தது. அதில்குறிப்பிடத்தக்க நட்சத்திரங்கள் மேனகை, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகியோர். தவமிருப்பவர்களை அவர்கள்தான் போய்க் கெடுப்பார்களோ அல்லது அவர்கள் தங்களைக்கெடுக்க வரட்டும் என்று எதிர்பார்த்து இவர்கள் தான் தவம் செய்வார்களோ; இரண்டும் ஆராய்வதற்குரிய விஷயங்கள் தான்!

ஏதேதோ வந்துவிழுந்துகொண்டிருந்த என் வயிற்றில் நேற்று ஒரு பழைய புராணம் வந்து விழுந்தது. புத்தக உருவில் அது இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச்சில ஏடுகள்!





பாதிக்குமேல் செல்லரித்து விட்டிருந்தது! அதில் தான் தவத்தைப்பற்றிய விளக்கங்களையும் கதைகளையும் படித்துத்தெரிந்து கொண்டேன். விசுவாமித்திரர் தவத்தைக் கெடுக்க வந்த மேனகையின் சாகசங்களையும்; அவளது வலையில் முனிவர் விழுந்த பிறகு, அவள் புரிந்த சரசங்களையும்; கானகத்து அருவியோரங்களில் அவர்கள் நடத்திய காதல் கேளிக்கைகளையும்; கடவுளை நினைக்கும் தவக்கூடம்; காமவேள் நடனசாலையாகக் காட்சியளித்ததையும், மகேஸ்வரன் வருவதற்கு முன்பு மலர்மாரன் வருகைதந்து மாமுனிவரை மங்கையின் மடியிலும் காலடியிலும் உருட்டி உருட்டி மகிழ்ந்ததையும்; ஜெபமாலை இருந்த கையில் மேனகையின் துடியிடை சிக்கித் தவித்ததையும்; தாடிக்கும் மீசைக்குமிடையே மறைந்துள்ள முனிவரின் தடித்த உதடுகள் மேனகையின் மெல்லிதழ்த்தேன் பருகிடத்துடித்த விந்தையையும் வெகுசுவையுடன் நான் படித்துக்கொண்டிருக்கும் போது தானா அந்தக் குப்பை வண்டிக்காரன் வந்து தொலைய வேண்டும்.

வந்தவன் மளமளவென்று என் வயிற்றைக் காலிசெய்து அந்தக்கிழிந்த புராணத்தையும் தூக்கி வண்டியிலே போட்டுக்கொண்டு போய் விட்டான். சிலநாட்கள் என் வயிறு உப்பி நான் திக்குமுக்காடிக் கொண்டிருப்பேன்; அப்போதெல்லாம் நாலுநாள் ஐந்துநாள் என்று இந்தப் பக்கம் தலைகாட்டாத நகரசபை குப்பை வண்டி என் புராணப் படிப்பில் இப்படி மண்ணைப் போடுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. யாரோ புது ஆபீசர் இந்தப் பக்கம் வந்திருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை, இரண்டு மூன்று நாட்களாகத் தெருவைச் சுத்தம் செய்வதில் தீவிரம்காணப் படுகிறது. இதுவும் எத்தனை நாளைக்கு? "வந்தாற்போல மாமியார் பந்தடித்தாள்; வர வர மாமியார் கழுதைபோல் ஆனாள்" என்று பழமொழி சொல்வார்களே; அதுபோலத் தான் ஆகிவிடும்.

நானிருக்குமிடத்திற்கு நாலைந்து வீடுதள்ளி ஒரு பஜனை மடம். அந்த மடத்தில் அடிக்கடி புராணப் பிரசங்கங்கள் நடைபெறும். ஒலிபெருக்கியின் மூலமாகக் கேட்டுக் கொண்டிருப்பேன். பாகவதர்கள் பல விஷயங்களைப் பூசி மெழுகிப் பேசியிருக்கிறார்கள் என்பது அந்தப் பழைய புராணத்தைப் பார்த்தபிறகு தான் தெரிந்தது. கணவனில்லாத சமயம் வீடுபுகுந்து தன்னைக்கற்பழித்தவன் இந்திரன் என்று தெரிந்த பிறகும் "ஆகா! இதுவல்லவா இன்பம் இதுநாள் வரையில் ஏங்கிக் கிடந்த சுவைமிகு விருந்தை இன்றல்லவா கண்டேன்" என்ற மனநிறைவுடன் அவனைத்தழுவிக்கிடந்தாள் அகலிகை என்பதை நான் படித்தல்லவா தெரிந்துகொண்டேன்.

தாருகாவனத்துத் தபோதனர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்டோர்! அவர் தம் பத்தினிகளோ; பத்தரை மாற்றுத் தங்கங்கள்; மேனியின் பளபளப்பில்! பறிக்கப்படாத பாரிஜாதமலர்கள்! தாவாத மான்குட்டிகள்! தழுவத்துடிக்கும் பருவக்கொடிகள்! அவர் தம் இளமையின்பூரிப்பு இறைவனையே தூண்டில் போட்டு இழுத்தது. ஒன்றா இரண்டா? ஓராயிரம் பூஜைமலர்களைக் கசக்கி எறிந்தார்! வரம் கோரும் முனிவர்களின் பத்தினிகள்! வரம் தர வேண்டிய பரமன்! கரம் சிவக்கு மட்டும் கட்டித் தழுவினார்! கண்

மு. கருணாநிதி



படுக்கையில் இருக்கிருள். அவள் கொத்தலர் பூங்குழல் கொண்ட கோதை! பெயரோ நப்பின்னை!

கட்டிலும் மெத்தையும் கவினுறு மங்கையும் இருந்துவிட்டால் பூரணத்துவம் பெற்றதாக முடியாதே! அந்த மங்கையின் மாங்கனியன்ன மார்பகத்தின் மீது தனது மார்பகத்தை வைத்தவாறு பிரார்த்தனைக்குரிய ஆடவன் படுத்திருக்கிருன். யார் அந்த ஆடவன்? ஆடவனு? அல்ல; அல்ல—ஆண்டவன்! அந்த ஆண்டவனைப் பிரார்த்திப்பதோ ஆண்டாள் அம்மை! "மலர்மார்பா' வாய்திறந்து எனக்கருள்வாய்!" என்று ஆண்டவனை அழைத்திடவிரும்புகிற ஆண்டாள் அம்மையார்; அவனைத் தன் இருப்பிடத்திற்கு அழைக்காமல் அவனது பள்ளியறைக்குள்ளேயே போய் விடுகிருர். போனதும் கண்ட காட்சிதான் குத்துவிளக்கு எரிகின்ற அறையின் கோலாகலக் காட்சி!

"குத்துவிளக்கெரிய கோட்
டுக்கால் கட்டிலின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்
தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் கோதை
நப்பின்னை
கொங்கை மேல் வைத்துக்
கிடந்த மலர்மார்பா வாய்
திறவாய்"

இந்தப் பாடலைத்தான் அந்தக் கசங்கிய தாளில் நான் படித்துப்பார்த்தேன். அய்யோ நான் அமர்ந்திருக்கும் இந்தச் சாக்கடையோரம் அப்படியே சப்ரகூட மஞ்சமாகி விடக்

சிவக்குமட்டும் காமச்சேட்டை புரிந்தார்! இந்தக் கர்ணகடூரமான கதையைப் பஜனை மடத்துப் பாகவதர் எவ்வளவு நாசூக்காகச் சொன்னுர் தெரியுமா?

தாருகாவனத்து ரிஷிபத்தினிகளுக்குப் பரமசிவன் அருள்பாலித்து ஆட்கொண்டார் என்று அவர் கூறியதைக் கேட்டு ஆகா! ஆகா!! என ரசனையை வெளியிட்டுவிட்டுப் பிரசாதங்களை அருந்தி, இலைகளை என் வயிற்றுக்குள்ளே வீசி எறிந்துவிட்டுப்போயினர் பஜனை கோஷ்டியினர். அப்படி வீசி எறிந்த பக்தர்களில் ஒருவர், பிரசாதம் சாப்பிட இலை கிடைக்காத காரணத்தால் ஒரு புத்தகத்தின் தாள் ஒன்றை உபயோகித்தார் போலும். கசங்கிப்போய் சோற்றுக்கரை படிந்த அந்தத் தாளை உற்றுப்பார்த்தேன். எனக்கே வெட்கமாக இருந்தது. ஏதோ ஒரு உணர்ச்சி என்னை வளைத்துக்கொண்டது குப்பைத்தொட்டி என்ருல் உணர்ச்சிகள் இருக்காதா; என்ன? அப்படியென்ன அந்தத்தாளில் இருந்தது என்று அறிய உங்களுக்கும் ஆவல் இருக்கத் தான் செய்யும் அதையும் சொல்லி விடுகிறேனே! குத்துவிளக்குச் சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து நேரம் இரவாகத்தானிருக்குமென முடிவுகட்டி விடலாம். இரவு நேரத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை வர்ணித்து அந்த நிகழச்சித் தலைவனைப் பிரார்த்தனை செய்கிருள் ஒரு அம்மை! பெண்ணின் பிரார்த்தனையில் இரவு நேரத்து விரசங்கள் எதுவும் இருக்காது என்று தான் நினைப்போம். ஆனல் நாம் ஏமாந்து விடுகிற அளவுக்கும் பிரார்த்தனையின் ரசம் மேலோங்கி நிற்கிறது. மறுபடியும் வர்ணனையைக் கவனிப்போம். குத்துவிளக்கின் ஒளியில் கட்டில் ஒன்று தெரிகிறது. கட்டில் என்ருல் சும்மாவா? அதன்மீது மெத்தென்ற மஞ்சம்! மல்லிகை, முல்லை, ரோஜா மலர்கள் தூவப்பட்ட மஞ்சம்! விளக்கு—கட்டில்—மலர் மஞ்சம் மட்டும் இருந்தால் காட்சி ரசிக்குமா? பல்லாயிரம் நட்சத்திரங்கள் இருந்தாலும் பால் நிலவு இல்லையேல் வானத்திற்கு அழகேது? அந்தப்பால் நிலவாக ஒரு மங்கை; அந்தப்

கூடாதா? எனக்குப் பக்கத்திலே ஒரு பெண் குப்பைத் தொட்டிவந்து சேரக்கூடாதா? அப்படி ஒரு அதிர்ஷ்டம் வந்தால் அவளோடு நான் எவ்வளவு இன்பமாக இருப்பேன் புதிய புதிய காதல் மொழிகள் எல்லாம் பேசுவேன். "கண்மணீ!" என்று அழைப்பதற்குப்பதில் அவளைக் "குப்பைமணி" என்று அழைத்து அணைத்துக்கொள்வேன். அவளோடு ஊர்க்கதையெல்லாம் பேசுவேன். பிறகு எங்களுக்குப் பொழுது போவதே தெரியாது. இப்படியெல்லாம் காதல் நினைவுகளை ஆண்டாளின் கவிதை, என் நெஞ்சில் உருவாக்கியது. பாவம்; ஆண்டாள்—யார்பெற்ற பெண்ணோ பெற்றவர்கள் தூக்கியெறிந்துவிட்டுப்போய் விட்டார்கள்; யாரோ ஒரு ஆழ்வார் எடுத்து வளர்த்தாராம்! அந்த அம்மையார், கடவுளைத் தொழுவதில் இவ்வளவு காமரசத்தை ஏன்தான் கலந்தாரோ; தெரியவில்லை. ஒரு பாட்டுப் படித்துவிட்டே இந்தப் பாடுபடுகிறேனே; எல்லாப் பாட்டும் கிடைத்தால்என்னைப் பைத்தியக்கார விடுதியின் ஓரத்தில் கொண்டுபோய் வைக்கவேண்டியதுதான்.

எப்போதுமா இப்படிப்பட்ட தாள்கள், நூல்கள் கிடைக்கின்றன! பெரும்பாலும் எச்சில் இலை; வாழைப் பழத்தோல்; ஆரஞ்சு கமலா தோல்; இப்படித்தான் ஏதாவது வந்து கொண்டிருக்கும். சில நேரங்களில் செத்துப் போன எலிகளை என் வயிற்றுக்குள் போடுவார்கள். முனிசிபாலிடி வண்டி எப்போதுவரும் என்று மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பேன். தெருக்கோடியில் ஒரு வீட்டிலிருந்து இரவு 12 மணிக்கு மேல் வேலைக்காரப் பையன் என்னருகே வருவான்.

சுற்றுமுற்றும்பார்த்துவிட்டு விஸ்கி, பிராந்திமுதலிய மதுப் புட்டிகளின் மூடிகளை என்னிடம் வீசிவிட்டு விறுவிறு என்று போய்விடுவான். எனக்கு இரவெல்லாம் உடம்பு நடுங்கும்; எங்கே போலீசார் என்மீது சந்தேகப்பட்டு என்னைக்கொண்டு போய் மதுவிலக்குச் சட்டப்படி உள்ளே போட்டுவிடுவார்களோ என்று! பிறகு எனக்கு நானே ஆறுதல் கூறிக்கொள்வேன்; குப்பைத்தொட்டி எங்கேயிருந்தால் என்னவென்று!

ஒருநாள் மூன்றாவது வீட்டிலிருந்து என் பக்கமாக காரில் போன ஒருவர்; சட்டைப் பையிலிருந்த ஒருகடிதத்தைக் கிழித்து என்மீது போட்டுவிட்டுப் போய்விட்டார். பரபரப்புடன் அதைப்படித்தேன். ஒழுங்கற்ற முறையில் அது கிழிந்து போயிருந்ததால் தொடர்பாகப் படிக்கமுடியவில்லை. யாருக்கோ வாத்தியாரம்மா வேலை வாங்கித்தருவதாக வாக்களித்து அதற்குக் கைமாறாக முன்கூட்டியே முன்னூறு ரூபாய் வாங்கிக்கொண்டு ஏமாற்றி விட்டானும்; எவனோ ஒரு எத்தன். அவன்பெயரும் தெரியவில்லை, அந்தப் பெண்ணின் பெயரும் அதில் இல்லை. அவை கிழிந்து போய்விட்டன. யாராயிருந்தால்என்ன; எங்கள் "டிபார்ட்மெண்ட்" விஷயம் என்பதை மட்டும் புரிந்துகொண்டேன். யாரிடம் முறையிடப்பட்டதோ அவரும் அதனைப் பொருட்படுத்தவில்லையென்பதற்கு அடையாளமாக அந்த மடலை என்னிடம் தூக்கி எறிந்து விட்டுப் போய்விட்டார். அந்தோ! பரிதாபம்! அந்தப் பெண் என்ன ஆனாளோ? அவளை நான் பார்க்காமலே இருக்க விரும்புகிறேன். அவளைப் போன்ற அபலைகளை மட்டுமல்ல; பொதுவாக மனிதர்களைப் பார்ப்பது என்றாலே எனக்கு வரவர வெறுப்பாகி விட்டது. அவர்கள் பொறுமை யற்றவர்கள் — அலட்சியப் புத்தி படைத்தவர்கள்-வெறிகொண்டவர்கள் — விவேகத்தின் விரோதிகள்-





என்றெல்லாம் சொல்லத் தோன்றுகிறது. என்னுடைய நிழலிலேயே வாழ்ந்து கொண்டிருந்த நன்றிமறந்த ஒரு மனிதனைப்பற்றி நினைத்தாலே எனக்குக் கோபம் பொங்குகிறது. எங்கிருந்தோ ஒருநாள் வந்தான். சரியாக நடக்கமுடியவில்லை. உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது, என்னையும் மீறி அவன் மீது ஒரே துர்நாற்றம்! போனால் போகிறது என்று சகித்துக் கொண்டு "யாரப்பா?" என்று கேட்டேன். "பார்த்தாலே தெரியவில்லை... இந்த நாட்டு மன்னர்களிலே ஒருவன். உன் பக்கமிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்ய வந்திருக்கிறேன். கொஞ்சம் நிழல் கொடுப்பாயா?" என்று அவன் என்னைப்பார்த்தான். "நிழல் தருகிற அளவுக்கு நான் என்ன அவ்வளவு வளர்ந்து வளமாகவா இருக்கிறேன். வேண்டுமானால் என்மறைவில் ஒதுங்கியிருந்து ராஜரீகம் செய்வாயாக!" என்றேன். அவனும் பத்து நாட்கள் என் மறைவிலேயே உட்கார்ந்தான்—படுத்தான்—தூங்கினான் சாப்பிட்டான்! அங்கிருந்தவாறே அவன் சர்க்கார் நடந்தது. போகிறவர்களிடம் பல்லைக்காட்டி அவனது அரசாங்கத்திற்குத் தேவையான வரிகளைக் காசாகவோ பணமாகவோ வாங்கிக் கொண்டிருந்தான்.

பத்துநாள் எனக்கும் அவனோடு நல்ல பொழுது போயிற்று. அவன் பாடுகிற சினிமாப் பாட்டுக்கள்; நாடோடிப்பாட்டுக்கள்—இவைகளில் நான் என்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் இரவு அந்தப் பரதேசி மகாராஜா ஒரு பெண்ணைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு வந்தார். நான் தூங்குவது போல் நடித்து நடப்பவைகளைக் கவனித்துக்கொண்டிருந்தேன். அவள் வரும்போதே சீக்கிரம் போகணும் என்று முணகிக்கொண்டு வந்தாள், "அட பறக்காதே; இந்தா பணம்!" என்று ஒரு எட்டணாவை அவளிடம் கொடுத்தார் மகாராஜா! நான் கண்களை இறுக மூடிக் கொண்டு காதை மட்டும் தீட்டிவைத்துக் கொண்டிருந்தேன்.



'கண்ணா!'

'ஏன் மூக்கு!'

'ராஜாத்தீ!'

'அய்யோ என் மன்மத ராஜா!'

இப்படிச்சில கொஞ்சுதல் வார்த்தைகள் கரகரத்த தொண்டையிலிருந்து வெளிப்பட்டன. அந்தப்பாவி மகாராஜனுக்கு நான் ஒருவன்; அவனுடைய நண்பன் அருகே இருக்கிறேனே என்ற நாணம் கூடக்கிடையாது! சிறிதுநேரம் கழித்துக் கண்ணை விழித்துப் பார்த்தேன். என் நண்பன் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தான். மன்னிக்கவும் இந்நாட்டு மன்னர் துயில் கொண்டிருந்தார். மகா ராணியைக் காணவில்லை. அவள் அடுத்த ராஜ்யத்துக்குப் போயிருக்கக் கூடும். மறுநாள் காலையில் இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் என் நண்பனிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். தொலைவில் பேசிக் கொண்டிருந்ததால் எதுவும் புரிகிற அளவுக்குக் காதில்விழவில்லை. பிறகு, என் நண்பன் என்னருகேவந்து; 'போலீசாரைக் கண்டுபயப்படாதே! அவர்கள் என்னைக் கைது செய்ய வந்ததாக நினைக்காதே! வெளிநாட்டிலேயிருந்து யாரோ பெரிய மந்திரி வருகிறாராம்; அவரைப் பார்க்க இந்த ராஜாவை அழைக்கிறார்கள்' என்றான்.

நான் வியப்புடன்; 'அப்படியா? அந்தமந்திரியை. எங்கே போய்ச் சந்திப்பாய்?' என்று கேட்டேன்.

'நான் போய் எனது வழக்கமான ஜெயில் மாளிகையில் இருப்பேன். அவர் வந்து என்னைச் சந்திப்பார். நீ கூட

அவரைப் பார்க்கக் கூடும். ஏனென்றால் இந்தப்பக்கம் தான் அவர் ஊர்வலம் வருகிறார்.'

என்று கூறிக்கொண்டே அவன் போலீசார் கொண்டு வந்த பெரிய காரில் ஏறிப் போய்விட்டான். அவன் சொன்னபடி மறுநாள் வெளி நாட்டுமந்திரி நான் இருக்கும் வீதிப்பக்கம் வந்தது உண்மை தான். ஆனால் அந்த நண்பன் மட்டும் என்னைத் திரும்ப வந்து பார்க்கவே யில்லை. இந்தநாட்டு மன்னர்களிலே ஒருவனல்லவா, எந்தக் குப்பைத்தொட்டி மறைவுக்குப் போனானோ; தெரியவில்லை! நன்றிகெட்டவன்.

என்னமோ; போங்கள்...சத்தற்ற என் வாழ்க்கையில் எல்லாவற்றையும் சந்தித்தாகிவிட்டது. நான் படித்த கல்யாணப் பத்திரிகைகள் எத்தனை—நான் அருந்திய விருந்துகள் எத்தனை—மங்கல காரிய அழைப்புக்களும்; அமங்கல காரிய



அழைப்புக்களும்— எவ்வளவு! எவ்வளவு! காதலன்—காதலிகள் கிழித்துப் போட்ட திருட்டுத்தனமான கடிதங்கள் எத்தனை—நான் படித்துப் பார்த்து; அவர்களை நினைத்துச் சிரித்திருக்கிறேன். ஒதுக்கப்பட்டவைகள், ஒளிக்கப்பட்டவைகள் எல்லாமே என்னுடைய இரு கரங்களால் அன்போடு வரவேற்கப்பட்டிருக்கின்றன.

எதையும் பொறுத்துக் கொண்டு புன்னகை காட்டுகிற தூய்மையான துறவிகளை விட நான் ஒரு படி மேலான பொறுமைசாலி.

இந்தநாட்டில் எத்தனையோ மக்கள் வயிறாரச் சோறின்றி வாடுகிறார்கள். என் வயிறோ; காலியாகக் காலியாக நிரம்பிக் கொண்டே யிருக்கிறது. அய்யோ; உங்களோடு பேசிக் கொண்டிருக்கும்போது யாரோ ஒரு பெண் பதுங்கிப் பதுங்கி வருகிறாளே; சற்று மறைந்து கொள்ளுங்கள்; ஆம்; அவளுடைய கையில் ஒரு குழந்தையிருக்கிறது. பச்சைக் குழந்தை! இப்போதுதான் பிறந்திருக்கிறது. அடடா; அதன் கழுத்தெல்லாம் ரத்தம்! குழந்தை தூங்குகிறதா? இல்லை; செத்துவிட்டது.

கழுத்து முறிக்கப்பட்டிருக்கிறது-சரிதான் அதுதான் குழந்தையின் தாய்! குழந்தையை என் வயிற்றுக்குள் போடப் போகிறாள்-போட்டே விட்டாள்: அவள் ஓடுகிறாள்; என்னைப் போலீஸ் வரையிலே மாட்டி விட்டு அவள் ஓடுகிறாள்—ஏன் ஓடுகிறாள்? புரிகிறது! புரிகிறது அவள் கழுத்தில் தாலியைக் காணோம். ✲


# கருத்துக்கினிய கழகப் புதிய வெளியீடுகள்

- இந்திய நாகரீகத்தில் திராவிடப் பண்பு ... 3–50
  Gilbert Slaters' The Dravidian Element in Indian Culture)
- சட்டமன்ற நடைமுறை (Parliamentary Procedure ... 6–50
- இறைமாட்சி அல்லது அரசியல் ... 4–00
- சட்டவியல் (Jurisprudence) ... 6–00
- தீங்கியல் சட்டம் (The law of Torts) 8–75
- அரசாங்கத்தின் வரலாறு (Evolution of Government) ... 7–50
- தென்னாட்டுப் பழங்கதைகள் (6-தொகுதிகள்-275 கதைகள்) தனித்தனி ... 5–00
- சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை (6 பகுதிகள்) தனித்தனி ... 5–00
- ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் ... 6–75
- மறைமலையடிகள் வரலாறு ...15–00
- திருவாசகம் விளக்கவுரை 7–50
- கழகத்தின் 1008 வது வெளியீட்டு விழாமலர் (பலவகைபடங்களுடன்) 12–50
- அண்ணல் ஆபிரகாம் ... 2–00
- கலிலியோ ... 1–10
- ஆல்பர்ட் சுவையட்சர் ... 1–20
- உலகப் பேரொளி (நேரு) ... 8–50
- அண்ணல் நேருவின் அமுத மொழிகள் ... 3–00

மற்றும் பல வரலாற்று நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் கதை நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் கிடைக்கும்.

விபரங்கட்கு :-

திருநெல்வேலித் தென்னிந்திய
**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.**
திருநெல்வேலி-6 :: சென்னை-1.

# ஸ்ரீ பத்மாவதி நகர்

(தாம்பரம் அருகில்)

# ஸ்ரீ தண்டாயுதபாணி நகர்

(கூடுவாஞ்சேரி அருகில்)

★ சிறந்த வீட்டு மனைகள்

★ நவீன வசதிகள்

★ விலையும் குறைவு

★ ரூ. 350லிருந்து ரூ. 750 வரை.

★ இலவசமாக இடம் காண்பிக்கப்படும்.

விபரங்களுக்கு அணுகுக :

## ஸ்ரீ லலிதாம்பிகை டிரேடர்ஸ்

1, உண்ணுமலை அம்மாள் தெரு,

தியாகராய நகர் :: சென்னை-17.

(கோடம்பாக்கம் ரயில் நிலையம் எதிரில்)

தொலைபேசி எண்: 42740

# கைதி



கவிஞர் வாணிதாசன்

மலைகள் முப்புறம், மறிகடல் ஓர்பால்,
குலைமுதிர் வாழை, கொடிபடர் தென்னை
செந்நெல் கரும்பு செழுங்கழை சோளம்
இந்நல் வளனும் இயைந்த பேரூர்
எங்கோ மூலையில் இருண்ட நாட்டில்
தங்கம் மண்ணில் மறைந்திருப் பதைப்போல்
மலையின் சாரலில் வளர்ந்து வந்ததே!
அந்த நாட்டு மக்கள் ஆமைகள்;
வளத்தைப் பெருக்க வறுமையை ஓட்ட
அறியும் அறிவே அறியா திருந்தனர் ;
ஏய்த்துப் பிழைக்கும் எத்தர்கள் எங்கும்
இருந்ததைப் போல இருந்தனர் அங்கும்!
அவர்களில் வலியோன் சுவர்கள் எழுப்பிக்
கோட்டை அமைத்துக் காட்டைத் திருத்தி
நாட்டின் அரசன் நானென் றிருந்தான்,
ஊமை மக்கள் உயர் அறிவு இல்லார்
அடங்கி ஒடுங்கி அவன்வழி நின்றே
உழைத்தனர் ; அரசன் உண்ணக் கொடுத்தனர்.
கோட்டைச் செலவும் கொடிபடைச் செலவும்
நாட்டில் அதிகம்! நலிந்தனர் மக்கள்!
வரிமேல் வரியும் வளர்ந்ததே நாளும்!
நரிகள் கொழுத்தன : நாட்டில் வறுமை
நிறைந்ததே ; ஆனால் அரசன் செலவோ
குறைந்ததே இல்லை ; "கொடுங்கள் ! கொடுங்கள் !
பொன்னைக் கொடுங்கள்: பொன்னா லான
பொருளைக் கொடுங்கள்; பொன்னைத் திருப்பிக்
கொடுப்பேன் உண்மை! கொடுப்பேன் உண்மை"
என்றே அரசன் எங்கும் சென்றே
மக்கள் முன்னர் வாய்திறந் துரைத்தான்.
அரசன் சொல்லில் அடக்கம் இருந்தது.
மக்கள் வாழ்வில் வறுமை வளர்ந்தது.
மழையும் இல்லை; வளர்பயிர் இல்லை;
உழைத்தவர் பொருளை உண்டு திளைத்தோர்
அரசன் தயவை அண்ட வேண்டிக்
கொடுத்தனர் சிலபேர்; குறிக்கோள் இன்றியா
கொடுத்தனர் என்றே கூறினான் ஒருவன்,

நாட்டின் நிலைமை நன்கறி யாத
மடையன் மட்டி; மலைப்புற மிருந்தே
வரும்பகை அறியான்; வாயாடி என்றே
இடித்தே அவனை எல்லோரும் இகழ்ந்தனர்.
எண்ணிப் பார்க்கும் இயல்பினன் அவனை
மண்ணில் விட்டால் வருமே விழிப்பு!
விழிப்பு வான்வரு விடிவெள்ளி யாகும்!
விடிந்தால் இருளோ வெற்றிகொள் ளாது!
பின்னும் இவனே முன்வர் தேடிய
குழந்தையைக் கொன்ற கொலையாளி என்றனர்.
சிறையே இவனைத் திருத்தும் சீரிடம்
என்றனர் சில்லோர் அரசன் எதிரில்.
ஊரை ஏய்த்தே உழைப்பை ஏய்த்தே
உண்டு களிக்கும் உழையாக் கூட்டம்
பாரை ஆளும் அரசின் பாவைகள்,
சிறைஇங் கில்லை; சிறையில் தள்ளித்
திருத்த நினைத்தால் திருந்தான் இவனும்;
தலையை வெட்டித் தள்ளுதல் மேலாம்,
என்றனர்; அரசனும் அதுசரி என்றான்.
தலையை வெட்டும் தகுபொறி வாங்க
அண்டை நாட்டிற் கனுப்பினன் ஆளை.
பொறியை வாங்கப் போனவன் வந்து,
விலையைக் கூறினன்; விழித்தான் அரசன்.
வீண்பொருள் செலவேன்; வெளிச் சிறைவைப்போம்
கைதியை மறவர் காத்து வருவர்;
என்றனர்: அரசனும் ஏற்றுக் கொண்டான்.
ஆண்டுகள் சென்றன; அமைதியாய்க் கைதி,
உண்டு கொழுத்தே ஊரின் நடுவில்
இருந்த வேலிச் சிறையில் இருந்தான்.
கைதியைக் காக்கும் செலவு வரவரப்
பெருகி வந்தது; பெரும்பொருள் அழிந்தது;
செய்வ தறியாது திகைத்தான் அரசன்.
அமைச்சன் ஒருவன் அரசனை அண்டிக்
கைதியைக் காக்கும் காவ லாளை
நீக்கினல் கைதி நில்லாது ஓடுவான்;
என்றனன்; அரசனும் ஏற்றான் முடிவை.
வேலிச் சிறைக்குள் வெகுநாள் சென்றும்
கைதி ஓடக் கண்டார் இல்லை.
உணவுக் காக ஒவ்வொரு நாளும்
வந்தே உணவை வாங்கி உண்டு
வேலிச் சிறைக்கு விரைவான் கைதி!
கைதிக்குத் தப்பும் கருத்தே இல்லை!
அரசன் ஒருநாள் கைதியை அழைத்து
விடுதலை அளித்தேன்; வெளிசெல் என்றான்.
கைதி தலைமேல் கையைக் கூப்பி,
வேண்டாம் விடுதலை; வேண்டாம் விடுதலை;
உணவும் உடையும் ஊரில் யாரே
தருவார் எனக்குத் தப்பிப் போனால்?
ஆனல் அரசே அடியே னுக்குத்
திங்கள் தோறும் சிறுபொருள் கொடுத்தால்
இங்கில் லாமல் ஏகுவேன் என்றான்.
திங்கள் தோறும் சிறுபொருள் அரசன்
கொடுத்தே வந்தான்; கொலைகாரக் கைதி
அமைதி யாக அண்டை
நாட்டில் வாழ்ந்து நாள்கடத் தினனே!

மூலம்: டால்ஸ்டாய்

# ஆனைக்கரும்பு

வேர்

'சதங்கை கொஞ்சும்
பாதம் சதிமிதிக்கும், வானில்
மிதக்கும் அவள் தாமரைக்கை.
மேலும் வதங்கலிலாச்
சண்பகத்து நல்லரும்பு
சாடை புரிகின்ற விரல்.
கண்கவரும் செம்பவளக்
காம்பு'.



கவிஞர் பாரதிதாசனின் இந்தக் கவிதைக்கு அவள் ஆடற்கலை மூலம் அழகு தந்தபோது அந்தக்கலையரங்கமே மகிழ்ச்சிக் கூத்தாடியது. தாமரைக் கொடியொன்று முகமலரும், இரு மொட்டும் பெற்று, உயிர் பெற்று; ஓவிய உறுப்பும் பெற்றுக் களி நடனம் புரியவந்ததோ அந்தக் கலையரங்கில் என வியக்காதார் யாருமில்லை.

'ஆணிப் பொன்னாலே மேனி--அழகு ரத்தினத்தால் ஓர் பேழை-அது நிறைய ஒளிமுத்து -ஆடற்கலை அவள் சொத்து' என அரங்கத்துச் செயலாளர் அருள் நம்பி பாராட்டுரை பொழிந்தபோது கையொலியால் அந்த மண்டபமே அதிர்ந்தது. அமுதா, பெயருக்கேற்ற அழகின் பூரிப்பும் அங்கமெலாம் இளமையின் ஆதிக்கமும் கொண்ட ஆடலரசி. அவள் ஆடாத மேடையில்லை—அவளைத் தேடிஓடாத நெஞ்சமில்லை—அன்று நூறாவது நடன நிகழ்ச்சி. அதனைத் தனது கலையரங்கத்திலேயே நடத்த வேண்டுமென்று அருள்நம்பி பெருமுயற்சி எடுத்து வெற்றிபெற்றார். அரங்கின் செயலாளர் அவர். கவிதை புனையக் கற்றவர். கலைத்தாயின் சேவையே வாழ்வின் இலக்கு எனக் கொள்கை முழக்கம் செய்து கொண்டிருப்பவர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளைக் கடந்து, அறுபது என எண்ணத்தக்க அளவுக்கு அனுபவமும் தோற்றமுங் கொண்டவர். அவரது நிர்வாகத்தின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கிற

மு. கருணாநிதி

அந்தக் கலையரங்கத்தில் எத்தனையோ கலை நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால் அமுதாவின் நிகழ்ச்சியை அங்கு நடத்த வேண்டுமென்பதில் அவருக்கு எத்துணை ஆர்வம்! எத்துணை துடிப்பு! அவர் நினைத்தது நடந்தது...... இலக்கியங்களில் நுழைந்து; புலவர்களைக் கெஞ்சி; காவியங்களைப் புரட்டி; கடைசியாக ஒரு தமிழ்வளங் கொழிக்கும் பாராட்டுரையைத் தயார் செய்து; அதனை இரண்டு நாள் இரவுபகல் மனப்பாடம் செய்து...கனவிலே கூட அதனை உளறி...இத்தனைக்கும் பிறகு அன்று மேடையில் அமுதாவை வர்ணித்து மன்றத்தின் பாராட்டுதலைப் பெற்றார். அவர் விரும்பியது மன்றத்தின் பாராட்டு மட்டுமா? அமுதாவின் ஓர விழிகள் அவரை நோக்கி ஒருமுறை அசைந்தால் போதும்; அதற்காகவே அவர் அத்தனைநாள் கடுந்தவம் இயற்றினார். அருள்



நம்பி கலையுலகில் செல்வாக்கு மிக்கவர். தமிழ் மேடைகளில் அவர் தோன்றாதிருப்பதில்லை. விழாக் கூட்டங்களில் அவரது முத்திரை எங்காவது இல்லாமல் இருக்காது. விருந்து கேளிக்கைகளில் அவர்தான் முன்னோடி. இப்படி அனைவரது கவனத்தையும் எப்படியாவது கவர்ந்து நினைவில் தன்னை ஒட்டவைத்துக் கொள்வதில் திறமை மிக்கவர். அவரது சில பிடிக்காத செயல்களைக் கூடக் கிடக்கிறார் பாபம்; வயதானமனிதர் என்று பலர் மன்னித்து விடுவது வாடிக்கை. அவருக்கு என்னமோ; தன்னை வயதானவர் என்று குறிப்பிடுவதை விட வேறு வசை புராணம் ஒன்று இருப்பதாகவே நினைப்பில்லை: அந்த வார்த்தையைத் தவிர வேறு எதைச் சொன்னாலும் தாங்கிக்கொள்வார். உலகின் இன்பங்களை இளமை உணர்வோடு அனுபவிக்கத்தக்க ஆற்றல் அவரிடம் இருப்பதை யார் மறுத்தாலும் அவருக்கு மனம் புண்ணாகி விடும். அந்த உணர்வோடு அவர் தனது நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டிருந்தார். அப்படிப்பட்டவர் அமுதாவின் அன்புப்பார்வையை எதிர் நோக்கியதில் அவரைப் பொறுத்தவரையில் தவறில்லையல்லவா? பாராட்டுரையை நிகழ்த்தி விட்டு மல்லிகை மாலையை அமுதாவின் கழுத்தில் அணிவிக்க அவளருகே சென்றார். அதற்குள் அமுதா, அவர் இருக்குமிடம் நோக்கி வந்துவிட்டாள். மாலையைக் கழுத்திலேயேவாங்கிக் கொள்வாளா? அருள்நம்பிக்குச் சற்றுக் குழப்பம். கழுத்திலே வாங்கிக் கொண்டால், 'வயதானவர் தானே பரவாயில்லை' என்ற முறையில் வாங்கிக் கொண்டாள் என்று ஆகிவிடும். அதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது. இதையெல்லாம் அவர் நினைத்துப் பார்த்து முடிவுக்கு வருவதற்குள் அமுதா, அவர் கையிலுள்ள மாலையைத் தனது அழகுக் கரங்களால் பற்றி வாங்கிக் கொண்டாள். அடடா; அப்போது அந்தக் கரங்களின் மென்மையை அவர் உணர்ந்து கொண்டார். மாலையைப் பற்றும்போது அவளது விரல்கள் தன் விரல்களை விட்டு மெதுவாகத்தான் பிரிந்து சென்றன என்பதும் அவரைக் கிறு கிறுக்க வைத்தது. அரங்கத்தின் திரை விழுந்தது. அமுதா, ஒப்பனை அறைக்குச் சென்றாள், அவரும் கூடவே சென்றார். ஆடிய களைப்புத் தீர பாதா

## பழமொழி-புதுஉரை !




பொற்காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியின் கையில் அகப்பட்டது போல்.

மிட்ட பால்கொண்டு வந்து தந்தார்கள் அவளுக்கு! அவளோ அதனை அருள் நம்பிக்குக் கொடுத்தாள். பால் கிண்ணத்தைத் தரும்போது இரண்டாவது முறையாக அந்த மலர்க்கரத்தின் மெல்லிய ஸ்பரிசம் அவரை இன்பபுரிக்கு இழுத்துச் சென்றது. "அமுதா நாளைக்கு 'போன்' பண்ணுகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டார் அருள் நம்பி. 'அவசியம் போன் பண்ணுங்க!' என்று வணங்கி விடை கொடுத்தாள் அமுதா. 'அவசியம் போன் பண்ணுங்க!' என்ற அந்தக் குயில் மொழி காட்டும் குறிப்பை நினைத்து நினைத்து மகிழ்ந்தவாறு வீட்டுக்குச் சென்றார் அருள்நம்பி.

## பழமொழி-புதுஉரை !




ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.

## அடிக்கரும்பு

எப்பொழுது விடியும் என்று இரவுப் பொழுதை சாபங் கொடுத்து விரட்டிக் கொண்டிருந்த அருள் நம்பி, காலை எட்டுமணிக்கெல்லாம் அமுதாவின் இல்லத்திற்கு 'போன்'செய்தார். வேலைக்காரி பேசினாள். 'அம்மா தூங்குகிறார்கள்; உங்களைப் பத்து மணிக்கு 'போன்' செய்யச் சொன்னார்கள்' என்று அவள் கூறியதும் பரக்கப் பரக்கக் காலைக்கடன்களை முடித்து விட்டு, கெடிகாரத்தின் முட்களை சவுக்கால் அடித்து ஓட்டிக் கொண்டிருந்தார்.

மணி பத்தாயிற்று! அமுதா வீட்டுக்குப் 'போன்'! நீண்ட நேரம் மணி அடித்தது. யாருமே எடுக்கவில்லை. வெகு நேரம் கழித்து "ஹலோ" என்று ஒரு முரட்டுக் குரல் கேட்டது.

"யார் அமுதா வீடா? அமுதா இருக்குதா?"

"நோ! நோ! ராங்நம்பர்!"

"மன்னிக்கவும்"

அவன் இந்த மன்னிப்பைக் கேட்காமலே போனைத் 'தடால்' என்று வைத்து விட்டான். அருள் நம்பிக்கு ஏதோ ஒரு வெட்கம்; மீண்டும் எண்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே போன் செய்தார்.

"ஹலோ!"

ஆகா! அது அமுதாவின் குரல்தான். அருள் நம்பி எச்சில் விழுங்கிக் கொண்டார்.



தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"நான்தான் அருள் நம்பி பேசுறேன்"

"அமுதா தான்..வணக்கம்.."

"என்ன சௌக்யமா?"

"ஓ! சௌக்யந்தான். நீங்க சௌக்கியந்தானே?"

"நீ இருக்கும்போது சௌக்யத்துக்கு என்ன குறை?"

அமுதா சிரித்தது அவர் காதில் விழுந்தது. அதற்குள் அவர் முகமெல்லாம் 'குப்' என்று வியர்த்து விட்டது.

"ம்! அப்புறம் என்னனங்க?"

"ஒண்ணுமில்லை... என்ன, உங்க வீட்டிலே எனக்கு விருந்து கிருந்து கிடையாதா?"

"ஓ... தாராளமாக! எப்ப வர்றீங்க?

எப்பவந்தாலும் விருந்து உண்டு!"

"என்ன விருந்து?"

"எல்லா விருந்தும் உண்டு. உங்களுக்கு என்ன பிடிக்கும் மாமிசமா? சைவமா?"

"சைவமா? சேச்சே! மனிதன், மாமிசத்திற்குத் தானே அடிமை!"

"சரி, உங்களுக்குத் தனியா மாமிசம் சமைக்கச் சொல்றேன் ... நாங்கள்ளாம் சைவம்!"

"வேண்டாம் ... வேண்டாம் ...உனக்கு ஒரு சாப்பாடு; எனக்கு ஒரு சாப்பாடா? எனக்கும் சைவமே இருக்கட்டும். எப்ப வர்ரது?"

"இன்னைக்கு மத்தியானமே வாங்களேன்"

"பகல் விருந்து ரசிக்குமா? ராத்திரி எட்டு ஒன்பது மணிக்கு வரட்டுமா?"

"ஓ! வாங்க! கண்டிப்பா வரணும். வராம இருந்திடாதிங்க! நிச்சயம் வரணும்!"

அருள்நம்பி, அப்படியே ரிஸீவரைக் கன்னத்தில் அழுத்திக் கொண்டு சற்று நேரம் மயங்கிய நிலையில் அமர்ந்துவிட்டார். நினைவு வந்த பிறகு உடலில் வழியும் வியர்வையைத் துடைத்துக்கொண்டு, 'அப்பனே முருகா!' எல்லாம்; உன் அருள்!' என்று வாய்விட்டுக் கூறிக்கொண்டே திருப்புகழ் புத்தகத்தைக்கையில் எடுத்து ஏடுகளைப் புரட்டத் தொடங்கினார்.




இரவு எட்டரைமணி! வாங்க வாங்க என்று அமுதா, இள நகை சிந்தி வரவேற்க; அருள்நம்பி, உடம்பெல்லாம் தணலானநிலையில் அவள் வீட்டுக் கூடத்தில் அமர்ந்தார்.

"என்ன வீட்டில் யாரையும் காணோம்?"

"எல்லாம் ஆறரை மணி ஆட்டத்துக்குச் சினிமாவுக்குப் போயிருக்காங்க! இப்ப வந்துடுவாங்க!"

"மணி எட்டரை ஆயிட்டுதே. இப்ப வந்துடுவாங்களே?"

"அது இன்னும் ஒருமணி நேரம் ஆகும்; நீங்க இப்பவே சாப்பிடுறீங்களா?"

"நான்மட்டுமா? நீ?"

"இரண்டு பேருந்தான்! இருங்க; இதோ வர்ரேன்!"

அடுக்களைப்பக்கம் அமுதா போன அழகைப் பின்னாலிருந்து அருள் நம்பி ரசித்துச் சொக்கிப்போனார். போதாக்குறைக்கு சினிமாவில் வேறு அப்படிப்பட்ட காட்சிகளைக் காட்டி உள்ளங்களைக் கெடுத்து வைத்திருக்கிறார்கள் அல்லவா? அரைமணி நேரமாயிற்று; அமுதா திரும்பிவர! அதுவரையில் அருள் நம்பியின் நெஞ்சத்தில் அமுதாவின் எத்தனையோ விதவிதமான நடனங்கள். 'வாருங்கள்; சாப்பிடலாம்' என்ற வண்ணமொழி கேட்டு வாரிச் சுருட்டி எழுந்து அவள் பின்னால் சென்றார். அலங்காரமான மேசையில் ஆடம்பரமான விருந்து. எதிர் எதிரே இருவரும் அமர்ந்து கொண்டனர். வேலைக்காரி இருவருக்கும் பரிமாறினாள். இடையிடையே இரண்டு மூன்று தடவை. அருள் நம்பியின் கால், எதிரே வீற்றிருந்த அமுதாவின் காலில் பட்டு விட்டது. 'சிவ! சிவா!' என்பார் 'பரவாயில்லை' என்று அவள் புன்னகை புரிந்த வண்ணம் உணவு அருந்துவாள். அவருக்குச் சாப்பிடவே முடியவில்லை. மேனியெங்கும் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு வழியாக்ச் சாப்பாட்டை முடித்து விட்டு கூடத்திற்கு வந்தார்கள். தனது நடன நிகழ்ச்சி 'ஆல்பங்கள்' எல்லாவற்றையும் அவரிடம் கொண்டு வந்து கொடுத்தாள். அதைக்கொடுக்கும்போதும் வாங்கும் போதும் கைகள் உராய்ந்தன. அருள் நம்பிக்கு இருக்கை கொள்ளவில்லை. மணியும் ஒன்பதரை ஆகிவிட்டது. அறையைக் காட்டி, அவளிடம் ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அதற்குள் வாசலில் கார் வந்துநின்ற சப்தம். "ஓ! சினிமாவுக்குப் போனவர்கள் வந்து விட்டார்கள்" என்ற வாறு எழுந்து நடந்தாள். அவளது மேலாடை நாற்காலியில் சிக்கிக் கீழே விழுந்தது. அதனை எடுத்துச் சரிப்படுத்திக் கொண்டு, அவரைப்பார்த்து ஒரு சிரிப்பையும் கொட்டிவிட்டு தெருப்பக்கம் போனாள். சினிமாவுக்குப் போனவர்கள்தான் திரும்பி வந்தார்கள். அமுதா, தன் கையில் ஒரு குழந்தையைப் பிடித்துக்கொண்டு; அருள் நம்பியிடம் வந்தவாறு—

'இவனைத் தெரியுமா? என் மகன்!'

என்று அறிமுகப்படுத்தினாள். அமுதாவுக்கு ஒரு குழந்தையிருப்பது அவருக்கு முன்பே தெரியுமாதலால்; 'ஓ! நம்பப் பயலா?" என்று ஆர்வத்தோடு கேட்டார். அதை அவ்வளவாகக் காதில் போட்டுக் கொள்ளாத அமுதா; குழந்தையைப் பார்த்து;

'டே! டே! கண்ணு! எங்கே? தாத்தாவுக்கு வணக்கம் சொல்லு!'

என்று அவன் கரங்களைத் தொழுவதற்கான முறையில் கூப்பி வைத்தாள்.

அவன் அடம்பிடித்து வேறு பக்கம் போகவே: அவனைத் தொடர்ந்து போய் இழுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள்.

கூடம், காலியாக இருந்தது. அமுதா, ஒரு வெற்றிப் புன்னகையுடன் குழந்தையை முத்தமிட்டாள். ✽



# சென்னையில் ஒரு செந்தமிழ்க் கோயில்

## கவிஞர் ஆனந்தம்

முன்னாளில் சோழமன்னர் முரசொலித்து,
முறையான அரசியலின் உறையுள் ஆகிப்,
பின்னாளில் தஞ்சமென வந்தோர்க் கெல்லாம்
பிறங்காத நல்வாழ்வு நிரம்ப ஈந்துத்,
தென்னாட்டின் களஞ்சியமாய்ச் சிறப்புக் கூடிச்,
செந்நெல்லின் பசுங்கழனி ஆடை போர்த்தித்,
தன்னேரில் பெருமக்கள் பலரை ஈன்றுத்
தகைசான்ற தஞ்சாவூர்த் தரணி தன்னில்—

கீழ்வங்கக் கடலோடுந் துறையாய் நிற்கும்
கீர்த்திமிகு நாகைநகர் அவதரித்தே ;
ஆழ்கடல்போல் பரந்தமதி வாய்க்கப் பெற்றும்,
ஆங்கிலமும் ஆரியமும் முழுதுங் கற்றும்
மூழ்கிநின்ற மூதறிஞர்—தமிழால் யாவும்
முடியுமென வழிகாட்டும் மொழிநூல் வல்லார்—
வாழ்புகழின் எல்லைகடந் துயர்ந்து மேவும்
மறைமலையாம் துறவிதனை மறத்தல் ஆமோ !

பெருநெறியார் மருகர்க்கும் இளவ லாகிப்,
பிறந்தபயன் தாய்மொழியைப் பேணல் என்று,
பொருநைவளங் கொழிக்கின்ற மண்ணில் தோன்றிப்,
புதுமுறையில் தமிழ்நூல்கள் அச்சி யற்றித்
திருநெல்லை நூற்பதிப்புக் கழகங் கண்ட
திருவாளர் சுப்பையா திறமை மிக்கார் ;
திருமலியுஞ் சென்னைநகர் இலிங்கச் செட்டித்
தெருவிலொரு தமிழ்க்கோயில் சமைத்து விட்டார் !

யாம்பேசும் மொழிக்குத்தான் என்ன ஏற்றம் !
ஈரடியால் பாரளந்த குறளைப் போற்றித் ;
தாம்பேசும் மொழியிலெலாம் பெயர்த்துக் காட்டித்
தமிழ்நெறியை உலகினர்தாம் தலைமேற் கொள்வர் !
சாம்பல்நிற மேனாட்டார் மதம்ப ரப்பத்
தமிழ்நாடு போந்திங்கே தமிழைக் கற்றுத்,
தீம்பால்போல் அகரவரி சைநூல், மற்றும்
திராவிடத்தின் ஒப்பியல்நூல், உரைந டைகள்,

இத்தனையும் முதன்முறையாய் ஆக்கித் தந்தும்,
இங்கிலாந்தில் தமிழச்சும் பதிப்பித் தார்கள்.
எத்தனையோ இன்னலிடை இன்று நம்மை
எழில்மிகுந்த நூற்சொந்தக் கார ராக்கிப் ;
புத்தகங்கள் மலர்ந்தபெரும் பூக்கா டொன்றில்
புகவைக்கும் சுப்பையச் சான்றோர், ஓர்நாள்,
வித்தகராம் நாவலரும், கலைஞ ருந்தம்
விருந்தான நூலருந்த அழைத்தார் ; சென்றோம் !

நீங்காத மறைமலைக்கோர் நினைவுச் சின்னம்
நிறுவிடவே தமிழ்ஆன்றோர் முனைதல் வேண்டும்.
ஓங்கிவளர் சென்னைமக்கள் ஓய்வு கொள்ளும்
ஒப்பற்ற கடற்கரையில் சிலையை நாட்டித் ;
தீங்கான இந்தியினால் தமிழ்அ ழிக்கத்
திட்டமிடும் தீயவரின் திறனை வீழ்த்தி ;
வீங்குபுகழ் அடிகளாரின் விருப்பம் மேவ,
வெற்றிக்கோர் உருவமாக விளங்க வைப்பீர் !





# காசா லேசா!

மு. கருணாநிதி

தொகுதியைச் சுற்றிப் பார்த்து வந்த களைப்பில் மிஸ்டர் லஞ்சய்யா, வீட்டின் முகப்பில் உள்ள சாய்வு நாற்காலியில் சற்றுக் கண்ணயர்ந்தார். எப்படியோ தப்பித் தவறி மக்களின் ஓட்டுக்களைப் பெற்று அதுவும் எதிரிக்கும் தனக்கும் சரி சமமாகப் போய்விடவே திருவுளச் சீட்டின் மூலம் அந்தத் தொகுதியின் பிரதிநிதியானவர் அவர். அவருக்கென்று எந்தத் தொழிலும் கிடையாது. பாட்டன் பூட்டன் தாய் தந்தை வைத்து விட்டுப் போனதாக ஒரு அங்குல பூமியும் கிடையாது. ஒரு வேலையும் தெரியாது. தேர்தலில் வெற்றி பெற்ற ஓரிரு ஆண்டுகளிலேயே பெரிய வீடொன்றும் பத்து ஏக்கர் நிலமும் அவருக்குச் சொந்தமாகிவிட்டது. எப்படியென்று கேட்காதீர்கள். பெயருக்கேற்ற தொழில் மூலம் அவர் பெற்ற பயன் அது. அவர் இப்படியெல்லாம் பெரிய மனிதராக வேண்டுமென்று தானே ஆண்டவன் திருவுளச் சீட்டின் மூலம் அவரைத் தேர்ந்தெடுத்து மக்களுக்காக அனுதினமும் உழைக்கவைத்தான். அடடா! என்ன உழைப்பு! என்ன உழைப்பு!! அன்று கூடக் காலை முதல் மாலை வரையில் தொகுதியைச் சுற்றியதில் உழைப்புக் கேற்ற ஊதியம் கிடைக்காத காரணத்தால்தான் அயர்ந்து போய் நாற்காலியில் கட்டையைப் போட்டு விட்டார். தூக்கம் வருவதும் கலைவதுமாக இருந்தது. எதிர் பார்த்தவைகள் எதுவும் கைக்கு வராததால் தூக்கம் அவரோடு 'கண்ணாமூச்சி' விளையாடிக்கொண்டிருந்தது.

"அந்த செவத்தானுக்குக் கலெக்டர் ஆபீசில் உரத்துக்கும் உழவு மாட்டுக்கும் கடன் சிபாரிசு செய்தோம். வர வேண்டியது வரவில்லை. அந்தப் பயல் ஆளையே காணோம். அந்த டாக்டர் சிரஞ்சீவிக்கு ஏருத படியெல்லாம் ஏறி 'டிரான்ஸ்பர்' வாங்கிக் கொடுத்தோம், கவனிப்பதாகச் சொன்னவர்; நாலு நாளாய்க் கண்ணிலே படவில்லை. நேற்றைக்கு முழிச்ச முகம் சுத்த மோசம். எவனாவது பைகனத்தவன் சிபாரிசுக்கு வந்தால் நம்பபாடு யோகம்! வத்தலும் தொத்தலும் வந்தால் என்ன செய்வது; மரப்படி மாட்டில் பால் கறப்பது போல் கறக்க வேண்டியிருக்கிறது. அட! அந்த எழவு கூட இன்னைக்கு எதுவும் கிடைக்கலியே!"

நினைவு அலைகள், அவர்

இமைகளை அசைத்து அசைத்துத் தூங்க முடியாமல் தவிக்க விட்டன. கண்களை லேசாக மூடிக் கொண்டு; விழிப்புக்கும் தூக்கத்திற்கும் இடையே உள்ள ஒரு உணர்வில் தன்னையும் மீறிய சில கற்பனை நிகழ்ச்சிகளுக்கு அவரையுமறியாமல் மிஸ்டர் லஞ்சய்யா தள்ளப் பட்டார்.

அவர் குழந்தையாக இருக்கும் போதே; கையில் காலணா காசு வைத்து அழுத்தினால் தான் தாய்ப்பாலே குடிப்பார் என்று பக்கத்து வீட்டுப் பாட்டிகள் இப்போது கூட வேடிக்கையாகச் சொல்லுவார்கள். அது உண்மையோ இல்லையோ; அவர் படிக்கும் போது; ''இதுதான் பரிட்சைக்கு வருகிற கேள்வி !'' என்று சொல்லி கேள்வி ஒன்று ஒரு ரூபாய் வீதம் விற்று விடுவார் என்பதை அவரது நம்பிக்கையான நண்பர்கள் சத்தியம் செய்து சொல்கிறார்கள். அந்தக் கேள்விகள் வருமா என்பது சந்தேகந்தான்!

அப்படிப் பட்ட ஆற்றலாளர் கற்பனைத் தேரில் சஞ்சரிப்பது எப்படியிருக்கும் ?

மிஸ்டர் லஞ்சய்யா திடீரென்று ஒரு விமானத்தில் பறக்கிறார். அது அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி, பிரிட்டன், ஜப்பான், பிரான்சு போன்ற தேசங்களின் மேலே பறக்கிறது. அந்த நாட்டு மக்கள் எல்லாம் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு, விமானம் இறங்குவதை எதிர் நோக்குகிறார்கள். விமானத்திலிருந்தவாறே ஒலிபெருக்கியின் மூலம் லஞ்சய்யா பேசுகிறார். அதை அந்தந்த நாட்டு மக்களும் கேட்கிறார்கள்.

''ஓ! என் நண்பர்களே ! என் பாதம் உங்கள் நாட்டில் படுவதென்றால் சாமான்ய மல்ல; என் குடும்பத்தார் நடத்தும் கம்பெனிகளுக்கு நீங்கள் ஏஜண்டு உரிமை தர வேண்டும். என் புதல்வர்களின் தொழில் வளர எல்லா உதவிகளும் செய்ய வேண்டும். அப்படி நீங்கள் வாக்களித்தால்தான் நான் உங்கள் நாட்டு விமான நிலையத்தில் கால் வைப்பேன். என்ன சொல்லுகிறீர்கள்; பதவியைத் துஷ்பிரயோகம் செய்யாத என் பண்பைப் பாராட்டி என் சிபார்சுகளை மதிக்கிறீர்களா ?''

இந்த கண்யமிக்க உரை கேட்டு அனைவரும் கரகோஷம் செய்கிறார்கள். பறந்து கொண்டிருக்கும் விமானத்தை நோக்கி அந்நிய நாட்டு ஆடம்பரப் பொருள்கள் வீசப்படுகின்றன. ஏஜண்டு அங்கிகாரங்கள் பாய்ந்து வருகின்றன. அதன் பிறகு லஞ்சய்யா விமானத்தை விட்டுக் கீழே இறங்குகிறார். அய்யோ பாவம்; விமானம் ஆகாயத்திலிருக்கும் போதே கதவைத் திறந்து கொண்டு



இறங்கி விடுகிறார்... விழுகிறார்! விழுகிறார்; தலைகீழாக விழுகிறார்! கண்ணை உருட்டிப் பார்க்கிறார்... அவர் எதிரே மக்கள் வெள்ளம். அதன் நடுவே அமைக்கப் பட்டுள்ள ஒரு அலங்கார மான மேடை! அந்த மேடையில் ஒரு வாட்ட சாட்டமான கறுத்த உருவம் படைத்த கம்பீரமான மனிதர்! ''ஜனநாயக சோஷலிசமே எனது உயிர்—எனது மூச்சு-எனது பேச்சு—'' என்று வீரா வேசமாகப் பேசுகிறார். அந்தப் பேச்சை அங்கேயே சில விசைக் கருவிகளின் மூலம் ஒரு பெரிய ஸ்டுடியோ அதிபர் கிராமபோன் ரிக்கார்டுகளாக ஆக்கி; அடுப்பில் தோசை திருப்பிப் போடுவது போலப் போட்டுக் கொண்டிருக்கிறார். மேலே ,'விர்'' என்ற அலறல் ஒலி கேட்டு அனைவருமே தலையைத் தூக்கிப் பார்க்கிறார்கள். ''அய்யோ! என் ஆருயிர் நண்பருக்கா இந்தக் கதி ?'' என்று துடித்துப் போய் சோஷலிசச் சொற்பொழிவாளர் ஒரு குதி குதித்துக் கீழே விழப்போன லஞ்சய்யாவை அலக்காகத் தூக்கிக் கொண்டார்! அந்த அற்புதமான 'ஸ்டண்ட்' காட்சியைப் பார்த்த மக்கள் வெள்ளம் ''வாழ்க ஜனநாயக சோஷலிசம்!'' என்று கூவிற்று! அந்தப் பேரொலி மேடையை நடுங்க வைத்து, பூமியைக் கிடு கிடுக்க வைத்து, வானத்தில் பலகீறல்களை உருவாக்கி, ஏழெட்டு நட்சத்திரங்களையும் உதிரவைத்தது. சினிமா நட்சத்திரங்களையல்ல! அவர்கள் ஏற்கனவே அந்தமேடையில் உதிர்ந்திருந்தார்கள். உலகப் பிரளயம் போல எழுந்த அந்த ஜனநாயக

சோஷலிச முழக்கத்தினூடே கங்கையும் காவிரியும் கரை புரண்டு ஒன்ருயின. இந்துமாக்கடல் எது; அரபிக் கடல் எது; வங்கக் கடல் எது; என்ற வித்தியாசமே தெரியவில்லை. ஒரே நீர்க் காடு! மரம் மட்டைகள், புல் பூண்டுகள், உயிர் இனங்கள் எதுவுமே மேலே தெரிய வில்லை. தண்ணீருக்குள் மீன்கள் மட்டும் இருந்திருக் கக் கூடும். அந்த நீர்மட்டத் தின் மேலே ஒரே ஒரு ஆலிலை மிதந்து கொண்டிருக் கிறது. அந்த இலையில் ஒரு ஒல்லியான நீண்ட உருவம்; ஒட்டிப்போன கன்னங்கள்; தலையில் ஒரு வெள்ளைக் குல் லாய்; அதன் வாய்மட்டும் ''ஊழலை ஒழிக்கவே இந்த ஊழி வெள்ளத்தை உருவாக் கினேன்'' என முணு முணுத் துக் கொண்டிருக்கிறது. அப்போது ஒரு பெரிய வாளைமீன் அந்த ஆலிலையை நோக்கி வருகிறது. என்ன ஆச்சரியம்? அந்த மீனுக்குத் தலைமட்டும் மிஸ்டர் லஞ்சய் யாவினுடையது! வால் எல் லாம் மீனைப் போலத்தான்! ''லபக்!'' ஆலிலையும் அதற்குள் முணு முணுத்துக் கொண்டிருந்த ஆளும் சேர்ந்து வாளை மீனின் வயிற்றுக்குள் போய்விடு கிருர்கள் .. இலையையும் ஆளையும் விழுங்கிய மாத்தி ரத்தில் உலகில் பெரும் மாறு தல்! எல்லாம் பழையபடி ஆகிவிடுகின்றன. மிஸ்டர் லஞ்சய்யா, எங்கேயோ ஒரு நகரத்தின் ஜெனரல் ஆஸ்பத்திரி வாசலில் நின்று கொண்டிருக்கிருர். ஏன்? யாராவது அவரது உறவினர் உடல் நலமில்லையா? அப்படியொன்றுமில்லை; உள்ளேவருகிறவர் போகிற வர்களுக்கு அவர்தான் கதவு திறந்து விட்டு அனுமதி வழங்க வேண் டும். உள்ளே வருகிறவர்கள்? அந்தக் 'கேட்' டுக்கு வெளியே இருந்து மிஸ்டர் லஞ்சய்யாவைப் பார்த்து ஏதோ கெஞ்சுகிருர்கள். லஞ்சய்யா, அவர் கள் மீது சீறி விழு கிருர். பிறகு அவர் கள் தங்கள் சட் டைப் பைக்குள் கைவிட்டும்; முந் தானையிலுள்ள முடிச்சுக்களை அவிழ்த்தும் அவ ரிடம் எதை எதையோ கொடுக்கிருர்கள். அவைகளை வாங்கும்போது லஞ்சய்யா வின் விழிகள் அவரைச் சுற்றி வட்டமிடுகின்றன. பிறகு கதவு திறக்கப்படு கிறது. உள்ளே உயிருக் குப் போராடிக் கொண்டி ருக்கிற நோயாளிகளைப் பார்க்க அவர்களது உறவி னர்கள், பிரவேசக்கட்டணம் செலுத்தி விட்ட பெருமகிழ்ச் சியோடு குறிப்பிட்ட 'வார்டு' களை நோக்கி ஓடுகிருர்கள்— அங்கு எத்தனையோ நல்ல முகங்கள் டாக்டர்களாகத் தொண்டு செய்கின்றன— அங்கே ஒரு முகம்......ஆம் அதே முகம்... ஆஸ்பத்திரி யின் வாசலில் நின்று கொண்டிருந்த முகம்; அந் தப் பிரசவ வார்டின் பிரதான டாக்டராக உலவிக்கொண்டி ருக்கிறது! டாக்டர் லஞ் சய்யாவின் முன்னுல் ஒரு நிறைமாதக் கர்ப்பிணி கண் ணெல்லாம் புண்ணாக நின்று கொண்டு; ''அய்யா! அய்யா! அவஸ்தை தாங்க முடியலே! அய்யா! எப்படி யாவது இப்பவே அட்மிட் பண்ணிடுங்க, அய்யா!'' என்று கெஞ்சுகிருள்.




''சீ! நான்சன்ஸ்! கெட் அவுட்!'' டாக்டர் லஞ்சய்யா எரிந்து விழுந்தபடி அப்பால் சென்று அதே ஆத்திரத்தின் தொடர்ச்சி கெடாமல் குழந்தை பெற்ற தாய்க்குப் போடவேண்டிய ஊசியைக் குழந்தைக்குப் போடுகிருர்... அதற்குள் யாரோ ஒரு 'பேஷண்ட்' பத்து ரூபாய் நோட்டு ஒன்றை நீட்ட; அதை வாங்கும் ஆவலில் அந்தக் குழந்தை இறுதி மூச்சு விட்டதையும் கவனிக் காமல் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு வெளித் தாழ்வாரத்திற்கு வருகிருர்.

அங்கே, முதலில் அட்மி ஷனுக்காகக் கெஞ்சிக் கொண்டிருந்த அந்த நிறை மாதக்காரி, தரையில் மல்லாந்து படுத்துக் கிடக் கிருள். அந்தக் காட்சியைக் கண்டு டாக்டர் லஞ்சய்யா வுக்கு ஒரே எரிச்சல்! ''விதி



யற்ற நாய்கள்; இதுகளுக்கு ஏன் பிள்ளையும் குட்டியும்—அட்மிஷனுக்கு ஒரு பத்து ரூபாய் எனக்குப் 'பாக்கெட் மணி' கொடுக்க முடியவில்லை; பிரசவத்துக்குக் 'கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி' கேட்கிறதோ? நல்ல தார் போட்ட ரோட்டில் வைக்கோலைப் போட்டுப் பிள்ளை பெறுவதுதானே!'' என மனதுக்குள் திட்டியவாறே; ''டே! யாரப்பா அங்கே? இந்தப் பொம்பளை இங்க ஏன் படுத்திருக்கிறாள்? எழுப்பி விரட்டு!'' என்று அங்கு நின்ற ஒருவனிடம் கோபமாக உத்திரவிடுகிறார்.

''அவளை எழுப்பமுடியாதுடா பாவி! அவள் எமலோகம் போய் விட்டாள்!'' என்று பதில் சொன்னவாறே அந்த ஆள் டாக்டரின் மீது புலிபோலப் பாய்ந்து விடுகிறான். டாக்டர் லஞ்சய்யாவின் முகத்தில் மாறி மாறிக் குத்துக்கள் ''டொமீல்! டொமீல்!'' என்று விழுகின்றன. லஞ்சய்யா கீழே சாய்கிறார்...''பரமபாதகா! அக்கிரமக்காரா! சண்டாளா! அரசாங்க தர்ம ஆஸ்பத்திரியில் உன்னைப் போலவும் சில பெருச்சாளிகளா? எத்தனை தாய்களையடா வயிற்றுக் குழந்தையோடு இப்படிக் கொன்றிருக்கிறாய்? புனிதமான இந்த வேலைக்கு உன்னைப் போன்ற புரையோடிப் போன நெஞ்சங்கள் வரலாமா; பாவி!'' என்று கத்தியவாறு; அந்தச் செத்தவளின் கணவன், கீழே விழுந்த டாக்டர் லஞ்சய்யாவை மிதி மிதி என்று மிதிக்கிறான். அவரது சட்டைப் பையிலிருந்த 'மணிப்பர்ஸ்' வெளியே பிதுங்கி; அதற்குள்ளிருந்த பத்து ரூபாய் நோட்டுக்கள் காற்றில் பறக்கின்றன. மிதிபட்டுக் கொண்டிருந்த டாக்டர் லஞ்சய்யா, மாயமாக மறைந்து விடுகிறார். ''டே! உன்னை அரஸ்ட் செய்திருக்கிறேன்!'' என்ற அதிகாரக் குரல் கேட்டு அந்தக் கர்ப்பிணியின் கணவன் தன் நினைவு வந்தவனாகத் திரும்பிப் பார்க்கிறான். மிஸ்டர் லஞ்சய்யா, சப் இன்ஸ்பெக்டர் உருவத்தில் கைத்துப்பாக்கியைக் காட்டி அவனை மிரட்டுகிறார்... காற்றில் பறந்து கொண்டிருந்த பத்து ரூபாய் நோட்டுக்களை அவரது கைகள் ஒன்றாக சேர்த்து; யாருக்கும் தெரியாமல் கால் சட்டைப் பைக்குள் திணித்துக் கொள்கின்றன. அதே கைகளால் கர்ப்பிணியின் கணவன் கழுத்தில் ஒரு குத்து விடுகிறார். அவன் சாகத் துணிந்துவிட்டவன். இனி என்ன இருக்கிறது; வாழ்க்கையில்? அவளும் போய் விட்டாள்—நல்ல வேளை வயிற்றுக்குள் இருப்பதை வெளியே காட்டாமலே போய் விட்டாள்! ஆகவே அவனுக்கு எந்தத் தடையும் சாவதற்குக் குறுக்கே இல்லை. அதனால் தைரியமாகப் பேசினான்.

''பொது மக்களின் நண்பர்களாக—ஏழைகளின் தோழர்களாக—நேர்மையின் உருவங்களாக—நீதியின் நிழல்களாக—எத்தனையோ போலீஸ் அதிகாரிகளைப் பார்த்திருக்கிறேன் — அந்த அணியில் இப்படியும் ஒரு பிறவியா?'' என்று ஆவேசம் கொப்பளிகக கேள்விக்கணை எழுப்புகிறான். அதற்கு இன்ஸ்பெக்டர் லஞ்சய்யா வெகு மென்மையான பதில் ஒன்றை மிக பவ்யமாகக் கூறுகிறார். ''அவர்கள் எல்லாம் பிழைக்கத் தெரியாத போலீஸ் அதிகாரிகள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்ற முதுமொழியைக் கடுமையாகக் கடைப்பிடிப்பவன் நான்; அதனால் நீயும் தப்பலாம்; ஐம்பது இருந்தால் எடு!''

உடனே ஒரு பூகம்ப அதிர்ச்சி—எரிமலையின் தீக்குழம்பு நாலா பக்கங்களிலும் சிதறுகிறது—புயல் காற்று; விஷத்தைக் கக்குகிறது—ஆஸ்பத்திரியின் கட்டிடங்கள் தூள்! தூள்! ஒரே நெருப்பு தாண்டவம்! ஊரே எரிகிறது! உலகமே எரிகிறது! சிறிது நேரத்தில் அமைதி!

சந்திர மண்டலத்தை நோக்கி ஒரு 'ராக்கெட்' போகிறது. ஏதோ ஒரு புதிய பொருள் வருகிறதே என்று சந்திரமண்டலத்து மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். 'ராக்கெட்'டிலிருந்து மிஸ்டர் லஞ்சய்யா இறங்குகிறார்—அந்த மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு வரவேற்கிறார்கள். சந்திர மண்டலம் முழுவதும் மிஸ்டர் லஞ்சய்யாவின் வெற்றிகரமான சுற்றுப் பயணம். ஏராளமான பரிசு

கள் குவிகின்றன. தங்கமும், வைரமும், மூட்டை மூட்டையாக அளிக்கப்படுகின்றன. ''இவைகளையெல்லாம் எடுத்துப்போய் நிலவுலகம் செழிக்கச் செலவு செய்க!'' என்று சந்திர மண்டலத்து மக்கள்; பிரிவுபசார விழாவின்போது பேசுகிறார்கள். மிஸ்டர் லஞ்சய்யாவின் முகத்தில் அசடு வழிகிறது. ''நிலவுலகமா? என் பிள்ளை குட்டிகள், சொந்தக்காரர்கள் செலவுக்கே இவை போதாதே!'' என்று அங்கலாய்த்துக் கொள்கிறார். ராக்கெட், பூமியை நோக்கி வருகிறது. அவரை அனுப்பி வைக்க அரும்பாடு பட்டவர்கள்; அவரைச் சூழ்ந்து மாலை மரியாதைகளைச் செய்து; சந்திரமண்டலத்து அதிசயங்களைப் பற்றி ஆவலோடு கேட்கிறார்கள். ''அதிசயங்களைச் சொல்வதென்றால் அவ்வளவு சாதாரணமா? ஐம்பதாயிரம் ரூபாய் தர வேண்டும்.'' என்று அறிக்கை மூலம் கண்டிப்பாகத் தெரிவித்து விடுகிறார்—அவர் வெளியிட்ட அறிக்கை எழுத்துக்கு எழுத்து மாறாமல் வந்திருக்கிறதா என்று பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டே வீட்டு முன் பகுதியில் உள்ள சாய்வு நாற்காலியில் படுத்திருந்தவர்; தன்னை அறிந்தும் அறியாத அரைத் தூக்கத்தில் ஆழ்ந்து விடுகிறார். அப்போது ''கவர்ன்மெண்ட் டிரான்ஸ்போர்ட் பஸ்''ஸில் ஏறிக்கொண்டு மிக வேகமாக வந்த எமதர்மன், மிஸ்டர் லஞ்சய்யா வீட்டு வாசல் வந்ததும் 'ஸ்டாப்' என்று கத்திக்கொண்டு; பஸ், நிற்பதற்குள்ளாகவே கீழே குதித்து லஞ்சய்யாவின் வீட்டு முன் பகுதியில் நுழைந்து விடுகிறான். அதிர்ச்சியான சம்பவம் நடந்து விட்டதாக ஒரு கணத்தில் உணர்ந்த மிஸ்டர் லஞ்சய்யா; ''யார் அது?'' என்று அதட்டுகிறார். அதன் பிறகு கீழ்க்கண்ட உரையாடல் நடந்து முடிகிறது.

''நான்தான் எமதர்மன்!''

''எருமை வாகனம் எங்கே?''

''அரசாங்க இலாகாக்களுக்கு இரவல் கொடுத்திருக்கிறேன்''

''அவர்களது ஆமை வாகனம் என்ன ஆயிற்று?''

''அது ரிப்பேரில் இருக்கிறது!''

''நத்தை வாகனம் கூடவா?''

''அதைத்தான் நகரசபைகளுக்கான நிர்வாகத்திற்கு அனுப்பிவிட்டார்களே!''

''ஓகோ! இலாக்காக்களுக்கு எருமையையும் நத்தையையும் வைத்துக் கொண்டு தெருவில் மனிதர்கள் மீது மோத மட்டும்; மான் வாகனம்; முயல் வாகனங்களை வைத்திருக்கிறார்களோ?''

''அது கிடக்கட்டும். வா, போவோம்!''

''எங்கே?''

''இன்னுமா தெரியவில்லை. நீ செத்து விட்டாய்! யமலோகம் போகலாம் வா;''

''யமலோகமா? அங்கே பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடி; கார்ப்பரேஷன்; சட்டசபை; மேல் சபை பார்லிமெண்ட்; ராஜ்ய சபா முதலியவைகள் உண்டா? கட்சிகள் உண்டா? தேர்தல்கள் உண்டா?''

''ஒரு சனியனும் இல்லை. ஒரே அமைதியான உலகம்!''

''சே! சே! அமைதியான இடமே எனக்குப் பிடிக்காது! என் காரியம் நடக்க அமளி துமளி அதிகம் இருக்க வேண்டும். அதனால் நான் உன்னுடன் வருவதற்கில்லை,''

''அய்யய்யோ; மிஸ்டர் லஞ்சய்யா நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. பிறகு நான் கடமையிலிருந்து தவறிவிட்டேன் என்ற களங்கம் வந்து சேரும்.''

''ஓய்; எமதர்மா! உமக்கு அந்தக்களங்கம் வராமல் இருக்க ஒரேவழி என்ன தெரியுமா? நான் உம்முடன் வந்து விட்டால்; என் குழந்தை குட்டிகளுக்கு யார் பாதுகாப்பு? என்னமோ; எந்தத்தொழி





லும் இல்லாத நான்; ஒரு வேலையும் அறியாத நான்; திருவுளச் சீட்டின் மூலம், மிகப்பாடுபட்டு இந்த லட்ச ரூபாய் வீட்டையும், ஐம்பதாயிர ரூபாய் நிலத்தையும் சேர்த்து வைத்திருக்கிறேன் அது என் சந்ததிக்குப் போதுமா? அதனால் ஒரு நிபந்தனை; நான் உன்னோடு வருவதாக இருந்தால் ஐந்து லட்ச ரூபாய்க்கு இப்போதே "செக்" தரவேண்டும்.

இதைக்கேட்டு எமதர்மனுக்கு தலை கிறுகிறுத்தது,

"சாவதற்கும் லஞ்சமா?"
என்று முணுமுணுக்கிறான்.

"நான் அடுத்த ஜென்மம் பிறப்பதாயிருந்தால் அதற்கும் கேட்பேன் தோழா!"

"தயவு செய்து; நீ அடுத்த பிறவி எடுக்க வேண்டாம்; அதற்கும் சேர்த்து இப்போதே கேட்டுவிடு; கொஞ்சம் "கன்சஷன் கொடு!"

"பரவாயில்லை; பத்து லட்சமாகக் கொடுத்துவிடு"

உடனே எமன்; அங்குள்ள 'டெலிபோன்' மூலம்; குபேரா பாங்கிற்குப் போன் செய்து; தகவல் கேட்கிறான் அங்கு எமன் பெயரால் எட்டு லட்சம் தான் இருப்பதாகப் பதில் வருகிறது. எமன் ஆழ்ந்து சிந்திக்கிறான். அவனுக்கு ஒரு முடிவு தோன்றுகிறது. "இவனைக் காசாலேதான் சாக அடிக்க வேண்டும்" என்று புரிந்துகொண்டே; ஒரு செக்கை எடுத்து ஏதோ எழுதுகிறான். பிறகு அந்த 'செக்'கை நீட்டி;

"இந்தா! காசாலேசா!
காசாலே; நீ; சா!"

என்றவாறு மிஸ்டர் லஞ்சய்யாவிடம் நெருங்குகிறான். மிஸ்டர் லஞ்சய்யா, 'செக்'கைப்பார்க்கிறார்; "ஐம்பது லட்சம்"

"ஆ! ஐம்பதுலட்சம்!" மிஸ்டர் லஞ்சய்யா வாயைப் பிளக்கிறார்; பிறகு வாயை மூடவே இல்லை; எமன் அவரை ஏமாற்றி அழைத்துக் கொண்டு போய் விட்டான்.

"என்னங்க; உங்களைத் தானே...அந்தக் காண்ட்ராக்ட் காரன் இன்னைக்கு வந்து கண்டுக்கிறேன்னு சொன்னானே; வந்தானா?" என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டு வந்த மிஸ்டர் லஞ்சய்யாவின் மனைவி, கணவனின் தலை தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, கீழே மூர்ச்சித்து விழுகிறாள்...



அஞ்சுகம் பதிப்பகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதியால் 4/128, மவுண்ட் ரோடு, சென்னை-6ல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. துணை ஆசிரியர்: மாறன், எம்.ஏ.


இம்மாத வெளியீடு
எம்.ஜி.ஆர். அளிக்கும்
சத்யா மூவீஸ்
நான் ஆணையிட்டால்
டைரக்ஷன்
சாணக்யா
BAKTHA
திரைக் கதை, தயாரிப்பு
R.M.வீரப்பன்
ELEGANT

Regd. No. M. 7436 MURASOLI (Pongal Malar 1966)
(Pongal Supplement to Murasoli Issue dated 14—1—1966)




Wrapper Printed at ... Printers, Mad...